தித்து இது மூலமாக நரஸிம்ஹனை ஆராதியா நின்றார். அன்றிக்கே விபூஷித சப்தம் விவிய பூமிகளிலே உஷிதன் வளர்ந்தவன் என்று சொல்ல தீயதோஹஸ்திகிரிணா வ்ருஷாசலேன யாவத்க்ஷேத்ரத்³வயம் என்கிறபடியே விவேகாஸ்பதமான ஸ்ரீவேங்கடாசலமாயுள்ள புராணப்ரஸித்த ஸாத்விக ப்ரதேசங்களில் லக்ஷ்மீ நரஸிம்ஹனை இத்தகையனுக்கி ஆராதித்திரா நின்றார். அன்றிக்கே 'வி' ஶப்³த³ம் விஶிஷ்டவாசியாய் லீலா விபூதியில் மத்தியமமான பூலோக மத்யத்திலே மூளைத்த மஹிதபோக விபூதியென்னலாம்படி நீர் வாய்ப்பும் நிழல் வாய்ப்பும் நிறைந்த ஸ்ரீஶைலக்ஷேத்ரமாயும் "ஶாகே²ஶாகே² பதிதநிவஹைர் ஹாரஸம்ஸ்யாநாவலம்ப³மாயும் க³ஹ்யாதஸஹ்யஜாஸ்யா: ஸத்³ரய ஸ்ரோதஸ்வின்யா: விஶேஷவாஸதே³ஹா: ஐத்ரீ ரம்யாஶ । ஶஹிதஶ நாஜதிய க்ஷ்மாவாஸா: ப்ரயதே ஸந்நிபதிதி ஹஸ்த ப்ராஹாரேரஹ்ய நஶ்ஸாக" என்றும் கொண்டாடப் பட்டதாயும் உள்ள ஸ்ரீ ரங்கநகரீ தி³வ்ய ஸந்நிதியிலே பெரியபெருமாளுக்குப் போல அநேகவர்ஷகாலம் ஆஸ்தான மண்டபம் அலங்கரித்து ஆராதித்திரா நின்றார். அன்றிக்கே, விஹ: உஷித: நரஸம்ப்லவக்ஷு: யேஷா என்று ஸப்தமீ பஹுவ்ரீஹியாய்மார்பம் என்பதோர் கோயிலமைத்து மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி ஆர்வம் என்பதோர் பூவிட்டு உள்ளம் மகிழா நின்றார். அன்றிக்கே விபுவான பகவானிடத்தில் உஷிதராய் (வஸிப்பவராய்) ஸத்வவநரச்ரேஷ்டராய் இராநின்றார். பகவானிடத்தில் வாஸம் ஸர்வ ஸாதாரணம் ஆகாதோ வென்னில்—அப்படியிருக்கச்செய்தேயும் அதை இம்மஹானிடத்தில் விசேஷசமாகச் சொல்வது எக்காலும் இவர் அநுஸந்தாநம் இதுவேயாக இருப்பதாலே இது ஸர்வ ஸாதாரணமாகாது. ஆகையால் இங்கு வஸுவக்ஷ ஶப்³த³ம் ஶ்ரேஷ்ட²லக்ஷணிகமாய் நரவத் ஶ்ரேஷ்ட²: என்று அர்த்தமாகி திருமந்த்ரத்தில் ப்ரதானார்த்தமான 'ஸ்வயக்ஞாநஸாதநம்' இவரிடத்தில் நிலை நிற்கையாலே ப்ரதமச்ரோதாவான நரனோடு துல்யராயிருப்பர். அன்றிக்கே உஷிதஶப்தம் கதிஶப்³த³ விதந்யமாய் விபுவான ஸ்ரீ நரஸிம்ஹனாலே உஷிதராயும் அதவவபுருஷோத்தமராயும் இருக்கும் நிலை சொல்லப்படுகிறது. இத்தாலே

"ஸதா தாவகவேதார்த்தஸாரஸ்ய ஸக்ஷம ரக்ஷ்ணோஸாதநாரூணா ।
கவணாரூ யாரதிவிரம் கம்விகரோக்ஷா விகத்வாக தானவம்வித்து ॥
ஸக்தாஸ்தாவகவேதார்த்தஸாரதாஸ்கவரக்ஷணாத்ஸாகாரவிநா ।
காரணாநி யாரதிவிரம்காம்கவிதரோக்ஷா கவி கவ்யாத க்வயாஸ்தாவிதா:॥"

என்கிறபடியே பகவானால் இவ்வாசார்யன் ஸ்தாபிக்கப்பட்டு இராநின்றார். அன்றிக்கே விஹாஶப்³த³ம் ரூபவாசக்யமேவ நிஹ்ருதம் நரஸிம்ஹ ரூபிணம் । என்கிறபடியே ஸ்வயம்ஜ்யோதி நரஸிம்மரூப விசிஷ்டவாசியாய் அவராலே

உஷிதமென்று இம்மஹானை அநுஸந்திக்கும் அநுஸந்தாநம் ஸூசிக்கிறது. இத்தாலே சஹ்யாஸீந ஶ்ரீமத்ருவக்த்ர விலஸஜ்ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸநாஶ்வாஸாக என்றும் இம்மஹான் விஷயமாக அநுஸந்தாநம் அழகு போலும். அன்றிக்கே இம்மஹானுடைய திருநாமம் இன்னதென்கிறது. ஸம்ஜ்ஞாஸம்ஜ்ஞிநோரபேத விஶேஷணவிஶேஷ்யயோர்வா ஸாமாநாதிகரண்யம் உதிவ்யஸித்தாஹாஷ்யாக ஶ்ரீ நரஸிம்ஹவக்த்ர ஸ்வஹாவ்யா நிஸ்வாஸ ரத்நாநி என்று தேருகையால் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனென்று திருநாமமுடையார் என்றதாயிற்று. நாமைகதேஶ க்ரஹணம் 'நாராய' என்னுமாப்போலே நாமைகதேஶேந நாமக்ரஹணம் நாமைகதேஶக்ரஹணே நாமக்ரஹணம் என்கிற ந்யாயத்தாலே லக்ஷ்மீநரஸிம்ஹ சடகோப என்கிற பூர்ண திருநாமத்துக்கு உபலக்ஷணம். அன்றிக்கே விபூஷித சப்தத்தாலே ஆசார்ய கூடஸ்தரான நம்மாழ்வாருடைய தாஸ்யஸூசகமான அவருடைய திருநாமத்தோடு சேர்த்தியென்னும் இம்மாதிரியான அலங்காரம் விவக்ஷிதமாகவுமாம். ஆக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஶடகோப ஸ்வாஹ்யராய் இருப்பார் என்று தேரிற்று. ஸுதவ தூரமான யோஜனையில் ஸ்ரீ கருடாசலத்தில் பக்ஷியான கருடனாலே திருஒப்பனை முதலானதுகளாலே ஆராதிக்கப்பட்ட ஸ்ரீமதஹோபில லக்ஷ்மீந்ருஸிம்ஹனாகவே யிருக்கிறார். ரத்நாநி—ரத்நஸ்வம் ஸஜாதிஶ்ரேஷ்டத்வமாகையாலே ஆசார்ய ச்ரேஷ்டர் என்றதாயிற்று. ஸிதம் ஸத்வம் ஶமோ தமஶ்ச ஸந்தோஷம் ஆர்ஜவம் க்ஷமாதயம் ஸத்யம் ஸதாசார ஸம்பந்நம் ஜித விஷயமணம் தீவ்ரவைராக்யம் உபாஸனம் ஆசார்யத்வம் ஸமஸ்தஜந ஹிதவ்ரதம் நைஷ்டிகம் ஸுஶீலஶ்ச என்கிற ஸ்ரீ ஸூக்தியால் இவ்வாசார்யத்வத்தை கண்டு கொள்வது. இக் குணங்களுடையவரில் ஶ்ரேஷ்ட்யமாவது விஶிஷ்டோபாயோ விஶிஷ்டமோ ஹ்யுத்தம: வரிஷ்ட: என்றும் ஆஹாரஶுத்திம் ஶாஸ்த்ரஜ்ஞான் ஆசார்யோ நிஷ்டித: கஷாயாதி நிர்த்தோஷ ஸத்யாபநய யோஜந: என்றும் உதாஹ்ருத ஸ்ரீ ஸூக்திகளாலும் தவஸ்ஸ்வாத்யாய நிரதம், வாக்மிநாம் வரஷ்டம், உதார ஸ்வபாவம், என்கிற பதங்களாலும் பலபடி விவக்ஷிதமாயிருக்கும். ஜாதௌ ஜாதௌ யதுத்க்ருஷ்டம் தத்ரத்நம். ரத்ந பக்ஷத்தில் பஹுத்வத்தாலும் இது உபபன்னமாகும். இத்தாலே அநேக ரத்நங்கள் ஒன்றுகூடி இவ் வாசார்யனுக்கு பூஷணமாக வேண்டுகை தோன்றுகையாலே இவ் வாசார்யனுடைய நிரதிஶயோத்கர்ஷமும் வ்யஞ்ஜிதமாம். ஜயந்தி—உத்கர்ஷம் பெற்று **விளங்குகிறார்கள்.**

தீஸ்தோ த்ரிகூடேஷுதரோப ஶம்ஸம் ஶுஶ்ரூஷயோர்ஹாரகம் ।
தீபோ சதா ச உபாஸதோப விதூரம் விஶாலபுண்டம் ॥

> த்ருமம்தா கவஹம் ஜணொ°வ தாவி
> கம்வெஸெஜண த்ருஜ° கரம்
> வெ°வம்தா ணிஹிஜம் வி ஊம்ஐஜ ஐகம்
> ஹெ° தாம் வி வெஜ்ஜ°வஹாரு ॥

என்கிற ஸ்ரீ ஸூக்தியின்படி துர்த்ருஷ்ட விநாஶகத்வம் இங்கு விவக்ஷிதம். துர்த்ருஷ்டி படங்களுள் சிலவற்றை இது இருந்ததென்பதற்கு ஞாபகங்கள் கூட இல்லாமல் விநாசம் செய்யவும் சிலவற்றை நீறுபட அழிக்கவும் சிலவற்றை மலைபோலிருந்தாலும் போனவிடம் தெரியாமல் பறக்கடிக்கவும் வல்ல விவேகத்துக்கு நித்ய நிவாஸ திவ்யஸ்தான மண்டபமாக விளங்குகிறார்கள் என்றதாயிற்று.

ஹாஸி:—ரத்னங்கள் இருளிரியும் இலகு சுடர்களால் ப்ரதீபங்களாக விளங்கும். இவ்வாசார்யனும் வயஷிஷாத்ருவ்யாபிதம் என்னும்படி திருமேனிஜ்யோதிஸ்ஸாலே விளங்கியிருப்பர். அன்றிக்கே இவரிடம் நித்யவாஸம் கொள்ளும் புத்தி அனுஷ்டிதி வாக்படுதை முதலான விஷயங்கள் ஆசார்யர்களின் புகராகுமாகையாலே ஹாசப்தத்தாலே ருவகாதிஶயயோக்தியில் ப்ரக்ரியையாலே நிகீர்ணங்களாய் சொல்லப்படுகின்றன. இவைகளிறே இவரின் உத்கர்ஷ காரணங்கள்.

இப்படி இவ்வாசார்ய ரத்நங்கள் விளங்கும் நிலையை ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனுடைய பாதகடகங்களிலும் பாதுகைகளிலும் நிலை கொண்ட மஹாரத்நங்கள் அந்யோந்ய ஸௌஹாவஹங்களாய் விளங்கும் நிலையைப் போல் விஜ்ஞாபிக்கலாயிரா நின்றது.

> வெஷ்ணவெஷ்வாதூராவெஸ்ய ந ராஜெஶ்ஶிகஶரண்ணா ।
> கநஹாவி ரஸாஜெதக ஞ்வாயெராஷ்ஹணாஜ்ரதஃ ॥

ஸ்ரீ:

ஆசார்யஸ்தவம்

[ஸ்ரீ. உ. வே. தில்லியம்பூர் வித்வான், சக்ரவர்த்தி வேங்கடாசார்யர்]

இம்மண்ணுலகம் எம்பெருமானுடைய விபவாவதாரங்களாலும், அர்ச்சாவதாரங்களாலும் அலங்க்ருதமானதுமன்றி, கர்மம், ஞாநம், பக்தி, விரக்தியென்னும் இட்டவிரைகள் சடக்கென பலஸித்தியை அளிப்பதனாலும் விண்ணுலகினும் சீரியது. "அமர்ந்து வானவர்வானவர் கோனுடனும்" என்று இமையாவிமையவர் இங்கேதிருந்து ஸயந ஸ்தாநாஸநர்களான எம்பெருமான்களைத் தொழ நிற்பதாலும், அங்குற்றைக்கு இங்குற்றை மேலானது. இத்தைக் கணிசித்தே "இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென்" என்றும் "ஸத்யம் ஶபே வாரணஶைலநாத வைகுண்டவாஸேऽபி ந மேऽபிலாஷ:" என்றும் பலவாறு உணர்த்தப்படுகிறது. இதனால் எம்பெருமானுக்கு அப்ராக்ருத வைகுண்டம் கார்யவைகுண்டம் போல பாரத வர்ஷமும் ஒரு பெருவீடாகக் கணிசிக்கப்பட்டதாய் நின்றது. அதில் "க்வசித் க்வசின் மஹாராஜ த்ரமிடேஷு ச பூரிஶ:" என்று திரவிட தேசத்துக்கு மகான்களுடைய ஆவிர்ப்பாவத்தினால் பெருமை மகர்ஷிகளால் அறுதியிடப்பட்டது. அதிலும் 'தாம்ரபர்ணீ நதீ யத்ர' என்று தாம்ரபர்ணீ என்னும் ஆற்றின் தீரமான இடத்துக்கு பெரும் பெருமை பேசப்பட்டது. அத்தகைய நிலத்தின்கண் "செழு மாமணிகள் சேரும்" என்கிறபடியே ஸ்ரீஅஹோபில மடத்தில் 40வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீரங்கநாதஶடகோபயதீந்த்ர மஹாதேஶிகன் முதலான பெரியோர்களுக்கு அவதார ஸ்தலமாயுள்ள காருக்குருச்சி என்னும் ஸ்ரீகிராமத்தில் திரவிடபாஷ்யகாரர் திருவம்சத்தில் கோபால ராமபத்திராசார்என்னும் ஸ்வாமி அவதரித்து அக்ஷராப்யாஸம் தொடங்கி ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் போல் ஸர்வசாஸ்த்ரபாரீணராய் எழுந்தருளியிருந்தார். இவர் யதாசாஸ்திரம் ப்ரஹ்மசர்யம் கார்ஹஸ்த்யம் அடைந்து ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் அத்யாத்ம சாஸ்த்ரங்களிலும் நிகரற்ற பெருமை வாய்ந்து நித்ய கர்மாநுஷ்டாந நிஷ்டராய் பரமைகாந்திஸார்வபௌமராய் விளங்கிவந்தார். இந்த ஸ்வாமி ஸ்ரீமதஹோபிலமடத்தில் 35வது ஆஸ்தானத்தை அலங்கரித்தருளின ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் என்னும் மஹாஸ்வாமியிடம் திருவிலச்சினை முதலிய பஞ்ச ஸம்ஸ்காரங்கள் பெற்றும் ஸ்ரீ பாஷ்யம் முதலிய கிரந்தசதுஷ்டயங்களையும் யதாவத்தாய் அதிகரித்து ஸ்ரீமதஹோபில மடத்தில் 34வது ஆஸ்தாநத்தை அலங்கரித்தருளின ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீஶடகோப ராமாநுஜயதீந்த்ர மஹாதேஶிகன் திருவடிகளின் புருஷகாரத்தினால் சிங்கவேள்குன்றுடையான் திருவடிகளில் உத்தமோத்

தமமான சரணாகதி ரூபோபாயத்தை அநுஷ்டித்து நிர்பரராய் நிஸ்ஸமராய் ஹ்ருஷ்டமநாவா யெழுந்தருளியிருக்கையில் ஸாமாந்ய சாஸ்திராப்பியாஸம் தொடங்கி ஸதீர்த்யரும் ஸமாநக்கிராமருமான ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ம திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மகா தேசிகன் தஞ்சாவூர் ஜில்லா நெடுந்தெரு என்னும் ஸ்ரீக்ராமத்தில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் அங்கு எழுந்தருளி காலக்ஷேபகோஷ்டியில் அந்வயித்து எழுந்தருளியிருந்து எம்பெருமான் முதலாக உபதேசக்கிரமத்தில் வந்து கொண்டிருக்கும் ப்ரேஷ மந்த்ரத்தை உபதேசிக்கப்பெற்று தன் ஸ்ரீக்ராமம் எழுந்தருளி சிஷ்யகோஷ்டிகளுக்கு விசேஷார்த்தங்களை ப்ரஸாதித்துக்கொண்டிருக்குமளவில் கலியுகம் பிறந்து 5024வதான துந்துபி௵ தைமீ 2௳ மூல நக்ஷத்திர தினத்தன்று ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்மாராதநத்தையும் ஹம்ஸ முத்திரையையும் ஸ்ரீமடத்தின் ஸகல வைதிக லௌகிகநிர்வாகத்தையும் 40-வது ஸ்தாநத்தை அலங்கரித்தருளின பரமாசாரியன் நியமனப்படி பெற்று அடியார்களுடைய பிரார்த்தனத்துக்கு இணங்கி யாத்திரை செய்யத்திருவுள்ளமாய் பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் 18 ஐயும் மலை நாட்டுத் திருப்பதிகள் 13 ஐயும் சோழ நாட்டுத் திருப்பதிகள் 40 ஐயும் நடு நாட்டுத் திருப்பதிகள் 2 ஐயும் திருவேங்கடமுடையானையும் மங்களாசாஸநம் செய்து கொண்டு திருவரங்கம் பெரிய கோயில் எழுந்தருளி ஸ்ரீ ரங்கநாயிகா ஸமேத ஸ்ரீரங்கநாதனையும் மேட்டழகிய சிங்கரையும் ஸ்ரீஸந்நிதிக்குள் ஸ்ரீரங்கநாச்சியார் திருமுன்பே திருப்பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனையும் மங்களாசாஸநம் செய்து கொண்டு ஸ்ரீமதாஸ்தான நிர்வாஹகாசார்யர்களாலேயே வைதிக லௌகிக ஸகல நிர்வாஹமும் செய்யப்பட்டு வருகிற தசாவதாரப் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி அங்குள்ள எம்பெருமான்களையும் மங்களாசாஸநம் செய்து கொண்டு பிரதிதினமும் ஸ்வஸ்ரீலக்ஷ்மீதேவிகளுடன் கூடிய சிங்கப்பிரானுக்கும் வெண்ணைக்காடும் பிள்ளையாய் ஸ்ரீ பாஷ்யகாரர் முதல் மடத்தில் பரம்பரையாய் ஆராத்யராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணனுக்கும் விசேஷமான திருவாராதனங்களை நடத்திக்கொண்டும் ஆஸேதுஹைமாசலமுள்ள சிஷ்ய கோடிகளுக்கு பஞ்சஸம்ஸ்காரம் உபய வேதாந்த காலக்ஷேபம் பரஸமர்ப்பணம் முதலிய உஜ்ஜீவநவ்யாபாரங்களை பிரஸாதித்துக் கொண்டு ஸ்வகோத்தரராய் எழுந்தருளியிருக்கிறார்.

ஓம் ஶ்ரீ ந்ருஸிம்ஹாய ஶ்ரீஶடாரி யோகிநே ।
லக்ஷ்மீந்ருஸிம்ஹஸம்ஜ்ஞாய ஶ்ரீஶாநாய மங்கலம் ॥
ஸம்ஸாரார்ணவ ஸாராங்க த்ருஷ்ணாஸஹவஃ ஸ நஃ ।
ஸ்வாஸ்ராம்ஸிவேஷ்டாவாயஃ விஶேஷே ஜயவிக்ஷவஃ ॥

ஸ்ரீ:

குருகுணாநுஸந்தானம்.

[மதத்ரயநிரூபக வித்வான் புதுக்கோட்டை தாநாதிகாரி காளி வங்கிபுரம் ஸ்ரீ உ. வெ. ரங்காசாரியர்.]

ஸ்ரீமதஹோபில மடத்தில் 41-வது பட்டத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய கல்யாண குணகணங்களை அடியேன் நினைத்து நினைத்து என்னுடைய ஹ்ருதயத்தில் அடங்காமல் மிதஜ்ஞனாகயிருந்தாலும் என்னுடைய நாக்கானது—'வாயவனை யல்லாது வாழ்த்தாது, தோள் அவனை யல்லால்தொழா—நாக்கு நின்னை யல்லால் அறியாது இது முதலான' ஆழ்வார்களநுஸந்தித்தபடியே சிஷ்யனுயும் பக்தனுமிருப்பதாலும் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹன் அநுக்ரஹம் பெற்றிருந்த பூர்வாசார்யர்களுடைய பக்தனுயிருப்பதாலும் இந்த ஸ்ரீ அழகிய சிங்கரை மணிப்ரவாள ரூபமான வாக்யத்தால் த்யாநம் செய்து சொல்லுகிறது. அதாவது இந்த அழகிய சிங்கரை ஆதியில் அடியிலேயே ஸ்ரீசடகோப மஹாதேசிகன் ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் முதலான ஸர்வஜ்ஞர்களான பூர்வாசார்யர்கள் விசேஷமாக கடாக்ஷித்திருந்தார்கள். அதின் பலனுய் காரக்குறிச்சி ஸ்ரீ அழகியசிங்கர் இந்த அழகிய சிங்கரை தேடிப் பார்த்து துரீயாச்ரமத்தையும் கொடுத்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனையும் கொடுத்து சிஷ்யர்களையும் திருவடியில் ஒப்புவித்துவிட்டு நித்ய விபூதிக்கு எழுந்தருளினுரென்பது ஸுப்ரஸித்தம். அநந்தரம் இந்த அழகிய சிங்கரும் ஆஸ்தாநத்தை ஒப்புக்கொண்டு ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்மனுடைய திருவாராதநம் சிஷ்ய ஸம்ரக்ஷணம் முதலியதுகளை செய்துகொண்டு திவ்யதேச யாத்ரையும் செய்து தற்போது ஸ்ரீரங்கத்திலே தசாவதார ஸந்நிதியிலேயே எழுந்தருளி இருந்து பகவத் கைங்கர்யாதிகளை நன்றுய் நடத்திக்கொண்டு வருகிறுர் என்பதும் ஸுப்ரஸித்தம்.

தவிர, ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹனுக்கு இந்த அழகிய சிங்கரிடத்தில் அதிக க்ருபா கடாக்ஷமேற்பட்டிருப்பதை எல்லோருக்கும் தெரியப்படுத்தும் பொருட்டு இந்த ஹ்ருத்தில் சதாபிஷேக மென்பதான திருநக்ஷத்ர உத்ஸவ வைபவத்தை மிகவும் நன்றாக ஸ்ரீரங்கனுதனும் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனும் நடத்திவைத்திருப்பதும் ஸகல ஜநங்களுக்கும் தெரிந்த விஷயம். இம்மாதிரி பூர்வாசார்யர்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை யாதலால் இந்த ஸ்வாமிக்கு இதுவும் ஒரு ஏற்றம். இந்த அழகிய சிங்கரிடத்திலிருப்பதான ஶாந்தி ஊாந்தி உவாரதி திதிக்ஷா ஸஹாயி கநாஸ்நாநம் ஸ்ரீராமனுக்கு போலிருக்கிற ஷூிதஹாஷீ வாவெஹாஷீ ஜிதஹாஷீ இவை முதலானதுகளை நன்


ருய் கவனித்துப் பார்த்தால்—இங்கேதிரிந்தேர்க்கிழுக்குற்றென் ? என் கிறபடி இந்த அழகியசிங்கரை லீலாவிபூதிக்கு திலகம்போல் பல்லாண்டு பல்லாண்டு என்று ஆழ்வார் மங்களாசாஸநம் பண்ணினபடி ஶதாயு꞉ வர்ஷ꞉ என்கிற வேதவாக்கியத்தின்படியே அரோக த்ருடகாத்ரமாய் செய்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாராதநம் ததீயாராதநம் சிஷ்யர்களுக்கு ஸமாஸ்ரயணம் மந்த்ரோபதேசம் வேதாந்தகாலக்ஷேபம் பரந்யாஸம் முதலியவைகளை செய்து கொண்டு இன்னுமொரு நூற்றுண்டிருமென்கிறபடி எல்லாரும் புகழும்படி இன்னும் தீர்க்ககாலம் எழுந்தருளியிருந்து அனுக்ரஹிக்க வேணுமாய் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனையே எல்லாரும் சரணுகதிமூலமாய் ப்ரார்த்திக்க வேணும் என்று நான் ப்ரார்த்தித்து கொண்டிருக்கிறேன். இந்த ஸ்ரீ அழகிய சிங்கருடைய திவ்ய சரிதங்களை பிந்தி பூராவாக ச்லோகரூபமாய் எழுதுவதாக உத்தேசித்திருக்கிறபடியால் இப்போது சுருக்கமாய் இதை எழுதினேன். இதனர்த்தத்தை மேல் சுலோகங்களாலும் ஸங்க்ரஹமாய் தெரியப் படுத்தியிருக்கிறேன்.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 1

[illegible] ।
[illegible] ॥ 2

[illegible] ।
[illegible] । 3

[illegible] ।
[illegible] ॥ 4



ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யதேச யாத்ரா காலம்

ஸ்ரீ:

ஆசார்ய வரிவஸ்யை

[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி வித்வான் தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹவரதார்ய வரிவஸ்யைக ஜீவநா: ।
ஜயந்தி லக்ஷ்மீ ந்ருஹரி பராங்குச யதீச்வரா: ॥

'ஆசார்யவாந் புருஷோ வேத' 'ஆசார்யாத்தைவ வித்யா விதிதா ஸாதிஷ்டம் ப்ராபத்' என்னும் ஸதாசார்ய ஸம்பந்தமே ஸாத்விகர்களான ப்ரமாண சரணர்களுக்கு ஐஹிகாமுஷ்மிக ஸகல ச்ரேயஸ்ஸுக்கும் நிதாநபூதம் என்பது ஸர்வவைதிகர்களுக்கும் ஸம்ப்ரதிபன்னமான விஷயம். இவ்வாசார்ய லக்ஷணமும் 'ஸமித்பாணி: ச்ரோத்ரியம்' என்றும் 'ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி । ஸ்வயமாசரதே யஸ்மாத்' என்றும்

"ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியமநகம் ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்
ஸத்வஸ்தம் ஸத்யவாசம் ஸமய நியதயா ஸாதுவ்ருத்த்யா ஸமேதம் ।
டம்பாஸூயாதிமுக்தம் ஜிதவிஷயகணம் தீர்கபந்தும் தயாளும்
ஸ்காலித்யே சாஸிதாரம் ஸ்வபரஹிதபரம் தேசிகம் பூஷ்ணுரீப்ஸேத்"

என்றும் சாஸ்திரங்களில் வகுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே சிஷ்ய லக்ஷணமும் "ஸத்புத்தி: ஸாதுஸேவீ ஸமுசிதசரித: தத்வபோதாபிலாஷீ சுச்ரூஷுஸ்த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரச்நகாலப்ரதீக்ஷ: ।" என்னு மித்யாதி சுலோகத்தால் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சிஷ்யன் அத்தகைய ஆசார்யனை உபாஸிக்க வேண்டிய விதத்தையும் ஸ்ரீ தேசிகன் ஒரு சுலோகத்தால் ஸங்க்ரஹித்திருக்கிறார்.

"அஜ்ஞாநத்வாந்தரோதாதகபரிஹரணாதாத்மஸாம்யாவஹத்வாத்
ஜந்மப்ரத்வம்ஸிஜந்மப்ரதகரிமதயா திவ்யத்ருஷ்டிப்ரபாவாத் ।
நிஷ்ப்ரத்யூஹாந்ருசம்ஸ்யாந்நியதரஸதயா நித்யசேஷித்வயோகாத்
ஆசார்ய: ஸத்பிரப்ரத்யுபகரணதியா தேவவத் ஸ்யாதுபாஸ்ய: ॥"

என்று இதால் ஆசார்யோபாஸநம் பகவதுபாஸந துல்யமென்றதாயிற்று. ச்ருதியிலும் 'தேவமிவாசார்யமுபாஸீத' என்று ஓதப்பட்டது. 'அஹமஜ்ஞாநஜம் தம: । நாசயாம்யாத்மபாவஸ்த:' என்று ஸ்ரீ கண்ணனுடைய அருளிச் செயல். ஆசார்யனுக்கும் இந்த அந்தகார நிராஸகத்வம் 'அந்தகாரநிரோதித்வாத் குருரித்யபிதீயதே' என்று ஸ்ம்ருதிகளில் ப்ரஸித்தம்.

'ஹரிஹரிதி வாவாநி ஊஷிமிதௌஷி ஜூதகீ' என்று பகவானுக்கு பாபஹாரத்வம் ப்ரஸித்தமானதுபோல் ஆசார்யனுக்கும் 'பாவிஷீ ஷு ...ஆசாயவத்ஸயா ஊகீள' இத்யாதிகளில் ப்ரஸித்தம். 'நிரஞ்ஜநீ வாமம் ஸாமீ ஊபைதி' 'ஊ ஸாயஊஜாமதாகீ' 'ஆஜீஹா வம் நயமெநாநம் தஊஷியாயிநம் ஊநெ' 'தன்மை பெறுத்தித்தன் தாளிணைக் கீழ் கொள்ளுமப்பன்' இத்யாதிகளால் ஈச்வரனுக்கு ஜீவர்களின் விஷயத்தில் ஸ்வஸாம்யாவஹத்வம் ஸுப்ரஸித்தம். அவ்வாறே ஆசார்யனுக்கும் சிஷ்யன் திறத்தில் ஞானோத்பாதநத்வாரா பகவத் விஷயீகாரார்ஹதையை உண்டுபண்ணுவதால் ப்ரஸித்தமே. நிச்சேஷ ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வகமாக நிச்ரேயஸப்ராபணம் பரமபுருஷனுடைய கார்யமாகும். அவ்வாறே ஆசார்யனும் ஸாமாந்ய ஜந்மத்தைப் போக்கி உத்தம ஜந்மத்தை ப்ராபிக்கிறுனென்பது 'ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி' என்றிது முதலிய ப்ரமாணங்களால் ஸித்தம். ஜாயமாநம் ஹி பாஷம் யம் பஶ்யேந்மதுஸூதநீ' என்றிது முதலிய ப்ரமாணங்களை யநுஸரித்து மோக்ஷோபாய சிந்தநாநுகுணமான திவ்யத்ருஷ்டிப்ரதாவம் பகவானுக்கு ப்ரஸித்தமானபடி ஆசார்யனுக்கும் திவ்யத்ருஷ்டிப்ரதாவம் 'ஸதாசாயேண ஸந்தஷ்ட ஜ்ஞாநவி யாதி பரமாம் கதிம்' என்றிது முதலிய வாக்யங்களில் ப்ரஸித்தம். 'யமாஹ்வேவி காகுத்ஸ்தீ க்ருபயா பயஸாயகீ' இத்யாதிகளில் அவிசால்யமான க்ருபாபரீவாஹம் பகவானுக்கு ப்ரஸித்தமானபடி 'க்ருபயா நிஃஸ்ப்ருஹோ வதேத்' இத்யாதிகளில் ஆசார்யனுக்கும் சிஷ்யன் திறத்தில் நிஷ்காரணாநுக்ரஹம் ப்ரஸித்தம். 'ஆநந்தோ ப்ரஹ்ம' இத்யாதி ச்ருதிகளின்படி பகவானுக்கு நிரதிசய ஸௌஹ்யமிருப்பது போல் ஆசார்யனுக்கும் "நாயாய நாமஊநயேத் வாசா மனஸா நித்யம் யதீய ஊண ஸமணம் ஊதீயம்" என்றிது முதலியவற்றால் நிரதிசயஸௌஹ்யமும் ப்ரஸித்தம். அப்படியே நித்யசேஷித்வமும் ஸர்வேச்வரனுக்குப் போல் ஆசார்யனுக்கும் ப்ரஸித்தம். இப்படி எட்டு காரணங்களால் அவர் செய்த பேருதவிக்கு ப்ரத்யுபகாரமில்லாமையால் ஸர்வேச்வரன் போல் உபாஸிக்கத் தக்கவனாகிறான்.

ஸ்ம்ருதிகளிலும் "ஸ்ருஹவித்யாதஊநஸ் தேவேவரவி நஸமதெத வ்யதிவ்யஊநயவா ஊத்யாஷிக ஆஊராஸ" என்றும் 'மாமேவ வாம் ஹ்ரஹ மாமேவ வாம் மதிஃ' என்றும் "ஆசாயஷ்ணு ஹரிஷ்ஷா க்ஷாதுராவ் ந ஸம்ஶயஃ । லாக்ஷாஞாராயணோ தேவஃ க்ருஷ்ணா ஊத்யமீம் தநா । ஊதூநாநாமத ஒகாநு காராணஷ்யாஷாஷுவாணி நா" என்றும் பகவானே ஆசார்ய ரூபமாயவதரிப்பதாயும் ஆகவே அவரிடம் பகவானுக்குத் துல்யமான ப்ரதிபத்தி செய்யவேண்டுமென்றும் "யோ விஷ்ணு ப்ருதிமாகாரே லோஹஹாவம் கரோதி வ । யோ மாகள ஊநாஷம் ஹாவஊஹள நாகவாதிநள" என்று அர்ச்சாவதாரத்தில் லோஹபுத்தி பண்ணு

வதற்குச் சமானம் குருவிடம் மநுஷ்ய ஸாமான்ய த்ருஷ்டி வைப்பதில் உண்டாம் ப்ரத்யவாயமும் சொல்லப்பட்டது.

ஸ்ரீ மதுர கவிகளும் 'தேவுமற்றறியேன் குருகூர் நம்பி' என்று நம்மாழ்வாரைத் தவிற மற்றொரு தைவமுளதென்றே நினைக்கவில்லை யென்று திட்டமாய் சொல்லலாம். இம்மதுரகவிகளின் பெருமையைப் பேசும் நம் ஸ்ரீ தேசிகனும் "ஆயன் நிற்க அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு துன்பற்ற மதுரகவி" என்று ஸாதித்ததைக் காண்க.

ஸ்ரீ ஆளவந்தாரும் நம்மாழ்வாரை '𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃' என்றல்லவா அநுபவித்தார். ஸ்ரீபாஷ்யகாரரும் ஆளவந்தாரைக் கொண்டாடி யிருப்பது யாவருமறிந்ததே. அமுதனும் நம்முடையவர் விஷயத்தில் கொண்ட ஈடுபாட்டிற்கு அளவேயில்லை. இவர்களில் சிலர் ஸாக்ஷாத்தாக ஸ்வாசார்யனைப் புகழாமல் ப்ராசார்யரைப் புகழக் காரணமென்னெனில் ஸர்வாசார்யர்களையும் கொண்டாடுவது அவச்ய ப்ராப்தமாயிருக்க அது ப்ராதிஸ்விகமாக அசக்யமானபடியால் ஸான்னித்ய விசேஷத்தை முன்னிட்டு சிலர் ஸ்வாசார்யர்களைக் கொண்டாடுவது, ப்ராசார்யர்களையோ அல்லது இன்னம் முந்தினவர்களையோ கொண்டாடுவது அவர் செய்தருளிய உபகார விசேஷத்தின் பெருமையை நினைத்தும் தம் ஆசார்யனுக்கு அது அத்யந்தாபிமதமாயிருக்கு மென்பதையும் முன்னிட்டு உபபன்னமே. ஸ்ரீ தேசிகன் ப்ரஸக்தி நேர்ந்தபோது தமது ஆசார்யரான ஸ்ரீ அப்புள்ளாரைக் கொண்டாடுவதுடன் ஸ்ரீபாஷ்யகாரரை '[illegible]' '𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌯𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑍍' என்று சொல்லும் கணக்கிலே

[illegible]

என்று ஸாக்ஷாத் கண்ணனுடைய அவதாரமெனவே நினைக்கிறார். ஸ்ரீ இளையபெருமாளின் அவதாரமாகவும் கருதுவதுண்டு. விஷ்ணுவின் பஞ்சாயுதங்களின் அவதாரமாயிருக்கலாமென்றும் ஸ்ரீ தேசிகன் பணிப்பு. '[illegible]' என்று எம்பெருமானுடைய திருவடிகளை அநுகல்பமாயும் எம்பெருமானாருடைய திருவடிகளை முக்ய கல்பமாயும் விச்வஸித்தவர் நம் வேதாந்தாசார்யன். இவ்வுபாஸநத்தின் பெருக்கு யாவத்தும்கூட ஆசார்யன் விஷயத்தில் தம்முடைய சேஷத்வ ஜ்ஞாந ... மான ப்ரீதியின் பரீவாஹமாகச் செய்வதத்தனை போக்கி தாம் பெற்ற பேற்றுக்கு ப்ரத்யுபகாரமாகா

தென்பது 'ஆசார்யவாந் புருஷோ வேத தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே' இத்யாதி வாக்யங்களால் ஸித்தம். இப்படிப்பட்ட ஆசார்யோபாஸநமொன்றே ஐஹிகமாயும் ஆமுஷ்மிகமாயுமுள்ள ஸகல ச்ரேயஸ்ஸுக்கும் காரணமாகுமென்பதை நாம் சாஸ்த்ர முகத்தாலும் எம்பெருமானார் தேசிகன் முதலானோர்களின் சரித்ர முகத்தாலும் கேட்டிருந்த போதிலும் இப்பெருமை இப்பொழுது ப்ரத்யக்ஷ கோசரமாகி நின்று ரஸிப்பித்து கல்நெஞ்சரான நம்மையுமுளகச்செய்து தன் வசமாக்கிக்கொண்டு விளங்குவது நமக்கு ப்ரதாநாசார்யராய் ப்ரக்ருதம் அஹோபில மடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய ஆசார்ய ப்ராவண்ய ராஸிக்யாதிசயத்தின் ப்ரபாவம். இந்த மஹானுடைய ஆசார்ய வரிவஸ்யாரஸத்தை நெருங்கி வர்த்தித்து அநுபவித்தவர்களுக்கு ஸ்ரீ தேசிகாதிகள் க்ரந்த கரண முகத்தாலும் ஸ்வாநுஷ்டாநத்தாலும் வெளியிட்டருளிய ஆசார்ய வரிவஸ்யையின்பரா காஷ்டை இத்தகையதென்பது ப்ரத்யக்ஷத்தில் அறியக் கூடியதாயிருக்கும்.

இம்மஹான் ஜாயமாநதசையிலேயே பகவத் கடாக்ஷம் பெற்று ததநுகுணமாக ஸத்வோத்தர ஸ்ரீவைஷ்ணவாதிஷ்டிதமான தாம்ரபர்ணீ தீரத்தில் ஸ்வரூபத்தால் வ்யாப்தி மாத்ரமன்றிக்கே பக்தாநுக்ரஹத்துக்காக விக்ரஹத்தாலும் ஸர்வ வஸ்துக்களையும் வ்யாபித்து ரக்ஷகனாய் நின்ற ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹன் திருவடிகளில் நிரதிசயாசஞ்சல பக்தி பரிதர்களான பரமைகாந்தி ஸ்ரீ வைஷ்ணவஸார்வபௌம குடும்பத்தை தமக்கு ஆவிர்பாவ ஸ்தாந மாக்கி யநுக்ரஹித்து, பால்யத்திலேயே த்யக்த ஸர்வ ஸங்கராய், தத்ஸமயம் ஸ்ரீ அஹோபிலமடம் 33-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் உபபத்தி பூயஸ்தையாலே பர்யாய பாஷ்யகாரரென்று தத்காலத்திய வித்வஜ்ஜநங்களால் கொண்டாடப்பட்டு ஸ்ரீமத் வீரராகவ ஸந்நிதியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருவடிகளி லாச்ரயித்து ஸ்வரூபலாபம் பெற்று தத் நந்தர புருஷார்த்த ருசி பிறக்க, அதன் பின் தம்முடைய திருமுடி ஸம்பந்தத்தாலும் திருவடி ஸம்பந்தத்தாலும் முன்னும் பின்னுமுள்ள ஆசார்யர்களை தங்யர்களாக்கி தாமும் க்ருதார்த்தராய் எழுந்தருளியிருந்த எம்பெருமானாரைப்போல் தமக்கும் தன்யதையை ஸம்பாதித்துக் கொள்ளத் திருவுள்ளம் பற்றிய ஆழ்வார் தாம் தனியே எழுந்தருளாமல் ஸக்ருத் க்ருஷி செய்து பலங்கண்டநுபவித்த எம்பெருமானாரையுந் துணையாகக் கூட்டிக்கொண்டு இருவருமாக (ஆழ்வாரும் எம்பெருமானாரும்) ஒரே திருமேனியை யதிஷ்டித்தவதரித்தார்கள் போலிருப்பதாக உபபத்தி பாகுள்யத்தாலும் திருநாமத்தின் அமைப்பாலும் உபய வேதாந்தங்களிலும் பகுக்ரந்த கரணத்தாலும், ஸ்ரீபிள்ள

பாக்கம் அழகிய சிங்கர் போன்ற மஹான்களால் உத்ப்ரேக்ஷிக்கப்பட்ட லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்திர மகா தேசிகன் திருவடிகளிலாச்ரயித்து ச்ரோதவ்ய சேஷ மில்லாமலும் கர்தவ்யசேஷமில்லாமலும் நைர்பர்யத்தை ஸம்பாதித்து க்ருதார்த்தராய் பஞ்ச காலபராயணராய் உபய வேதாந்தங்களிலும் நிஸ்ஸம்சய ஜ்ஞாந ஸம்பந்நராய் பராங்குச யதிவர நிகமாந்தமஹாதேசிகாதிகளின் க்ரந்த ப்ரவசந வ்யாப்ருதராகவே யிருந்து இவ்வாறே ‘யதி வ்யவஹாரதூரவிஹாரேண நீதம் வய: ஸ்வாத்மஸம்வித்ரதம் தியா:’ என்கிறபடி 69 திருநக்ஷத்ரங்கள் செல்ல “க்ஷாந்திஹீநஸஹாஸ ஸாராநுஜநவர்ஜிதே । ஸ்ரீவண் ஶடாரியதிநா க்ருதார்த்த: ஸேவகோ(அ)பவம் ।” என்கிறபடி அந்த ஸமயம் ஸ்ரீமடத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் யெழுந்தருளி யிருந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மகாதேசிகன் தம்முடைய மநோரதத்தின் வைசால்யத்திற்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய விபூதிக்கும் தக்கவாறு பெருமாளை யாராதித்துக் கொண்டிருந்து ஸம்ப்ரதாய ஸ்தாபனங்களையும் ஜகத்விக்யாதமாம்படி செய்து தம் திருமேனி கொஞ்சம் தளர்ந்தவாறே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாதிகளால் ப்ரவர்த்திதங்களாயும் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகாதிகளால் ப்ரதிஷ்டாபிதங்களாயுமிருக்கிற ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களை ஸகலேதர விரோதிநிரஸந ஸமர்த்தமாய் ஸர்வஜநாதரணீய ஸம்ப்ரதாய ப்ரவசநத்தாலும் க்ரந்தகரண முகத்தாலும் ஸ்வாநுஷ்டாநாநுஷ்டாபநங்களாலும் ஸத்ஸத்காரத்தாலும் ஸ்தாபித்து நிலைநிறுத்தத் தகுந்த தம்முடைய ஸதீர்த்யரான நம் ஆசார்ய ஸிம்ஹத்தின் முகமாக ஶததூஷணீ தாத்பர்ய க்ஷேபமாக நடத்தி வைக்கத் திருவுள்ளமாய் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாராதநத்தை நம் ஆசார்யவர்யரிடம் ஒப்புவிக்க நம் அழகிய சிங்கரும் ஸ்வாத்மநீ யஸ்மஸ்வீயஸந்தேஶமான ஆசார்ய நியமநம் அநுபாலநீயமென்ற திருவுள்ளத்தால் ஸ்நாநத்தை அப்யுபகமம் பண்ணி ததீயாத்ம ஸ்வீகாரத்தையும் செய்தருளி ஆஸேதுவ்ருஷாசலம் உள்ள திவ்ய தேசங்களுக்கும் மற்றும் ஸ்ரீ வைஷ்ணவாக்ரஹாரங்களுக்கு மெழுந்தருளி அனேக சேதந கோடிகளை யுஜ்ஜீவிக்கும்படி செய்து கொண்டும் காலக்ஷேபம் ஶ்ரீபாஷ்யத்துடன் மாத்ரம் நிற்காமல் ஸ்ருதப்ரகாஶிகா தாத்பர்யசந்த்ரிகா மற்றும் ந்யாயபரிஶுத்தி, ந்யாயஸித்தாஞ்ஜநம் அதிகரணஸாராவளீ, ஶததூஷணீ முதலிய ஸ்ரீதேசிகன் ஸாதித்த ஸகல க்ரந்தங்களையும் தத்தத்ப்ரமாணாதிகாரிகளுக்கு ப்ரஸாதித்துக் கொண்டு ப்ரக்ருதம் ஸ்ரீரங்கத்தில் ஸங்கோத்தரராய் முமுக்ஷூபாஸ்யராய் முக்தப்ராப்யராய் ஸூரிஸேவ்யராய் எழுந்தருளியிருக்கும்படி.

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஆர்ஜவம் ப்ராமாணிகதை வைராக்யவக்ஷ

வாத்ஸல்யம் க்ருதஜ்ஞதா ஆந்ருசம்ஸ்யம் முதலிய கல்யாண குணங்கள் மற்றவர்கள் நடந்து கொள்ளவேண்டிய விதத்துக்கு நிதர்சநமானவையாகும். ஸ்வாமியின் ப்ரஜ்ஞாவிசேஷத்தின் பெருமையும் ஜடிதி ஸ்புரணமும் ஸமய ஸ்புரணமும் காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்த மஹான்களுக்கு நன்கு.

அடியேன் அநுபவித்த விசேஷத்தை யிங்கு குறிப்பிடுகிறேன். பெருமாள் அர்ச்சாவதாரத்தில் எழுந்தருளியிருப்பினும் சில மஹான்களுக்கு விபவத்தில் எழுந்தருளி யிருப்பதுபோல் ஸேவை ஸாதிப்பதும் பலவித அநுபவங்களுக்கு கோசரமாவதுமுண்டு. ஸ்ரீ ஆழ்வாராதிகளின் அநுபவம் இம்மாதிரியானதே. எவர்களுக்கு இம்மாதிரியான அநுபவமுண்டாகாமல் கேவலம் அர்ச்சையாகவே தோன்றக்கூடுமோ அவர்கள் விஷயத்திலேயே ப்ரதிமையில் லோஹபுத்தி கூடாதென்று கட்டளையிட்டது. அம்மாதிரியே ஆசார்யனிடத்தில் மநுஷ்ய புத்தியைத் தவிர்க்க வேண்டுமென்றும் விதித்தது. ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கருக்கு ஆழ்வார்களுடைய அநுபவஸாத்ருஶ்யமான அநுபவமுண்டா யிருந்ததென்று நாம் பகு முகமாகக் கேட்டிருக்கிறோம். சில ஸமயங்களில் அம்மஹான் லக்ஷ்மீநரஸிம்ஹன் திருவாராதனத்துக் கெழுந்தருளி ஸுப்ரபாதம் ஸேவித்து உள்ளே சென்று கதவைத்திறந்து திரையை நீக்கியதும் சடக்கென 4அடி பின் புறம் எழுந்தருளுவதும், "அஹோ ஓஹோ ராஜாவின் ஆஜ்ஞாபாரமோ? க்ஷமிக்க வேண்டும். சற்று பொருத்தே வருகிறேன். வரலாமோ? ஸமயந்தானா? அம்மா வரட்டுமோ'? என்றிவ்வாறாக சில க்ஷணங்கள் தயங்குவதும் பின்னுமிதுபோன்ற வார்த்தை சொல்லிக்கொண்டு மறுபடி உட்புகுந்து மேல் கார்யங்கள் செய்வதும் மற்றும் சில ஸமயங்களில் திருவாராதன காலத்தில் பெருமாளை ஸேவித்துக்கொண்டே "இன்றைக்கு என்ன திருவுள்ளம்? என்ன செய்யவேண்டும்? ஏன் நியமிக்கலாகாது? என்ன அபராதம் செய்தேன்? ஒன்றுமில்லையா? அப்படியா? தந்யனானேன் திருவுள்ளத்தை நியமிக்கவும். அஹோ பாக்யம். தன்யன் ஆனேன். அப்படியா நான்கு தளிகை உயர்ந்த க்ஷீராந்நமோ நியமனமாகிறது. அப்படியே இதோ ஸமர்பிக்கிறேன்" என்றும் இத்யாதி ரீதியில் பெருமாளுடன் திருக்கச்சி நம்பிகள் போல் வார்த்தையாடுவதும் பெருமாளுடைய அங்கப்ரத்யங்கஸௌஷ்டவத்திலீடுபடும்போது 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்னும்படி அவ்வழகிலீடுபட்டு மெய்ம் மறந்து சிறிது நேரம் நிற்பதும் இம்மாதிரியான அநுபவ ப்ரகாரங்கள் ஸ்ரீ ராகவன் விஷயத்திலும் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹன் விஷயத்திலும் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கருக்கு அபரிமிதமாக உண்டென்பது ஸர்வலோக ஸம்ப்ரதிபன்னமான விஷயம்.

அம்மஹானுடைய திருவடிகளில் சிரகால வரிவஸ்யையின் பலமாக தத்க்ரது ந்யாயத்தால் இக்குணங்களும் படிந்துவிட்டனவோ வென்று நம்பும்படி நம் அழகிய சிங்கரின் பகவதநுபவ ப்ரகாரமும் அத்தகையதே. நம் அழகிய சிங்கர் பெருமாளை ஸேவிக்கும் போது, ஸாதாரணமாக எல்லாரும் பூர்வர்களின் ஒரு பாசுரத்தையோ ஒரு சுலோகத்தையோ அநுஸந்தானம் செய்துகொண்டு பெருமாளையநுபவிப்பது போலில்லாமல் '[illegible]' என்கிற ரீதியில் ஒவ்வொரு அவயவங்களில் வெகு நேரம் தங்கி மெய்ம்மறந்து நின்று பின் பாஹ்ய விஷய ஞாநம் பிறக்க அதன் பின் மற்றொரு அவயவத்திற்குச் செல்வதையும் அப்போதிருக்கும் முகப்ரஸாதம் நேத்ரவிகாஸம் முதலிய வற்றையும் கண்டால் பெருமாளோடு வார்த்தை சொல்லிக்கொண்டு அனுபவிப்பது போல் தோன்றுகிறதே யல்லாமல் அவைகள் வேறு வழியால் நிர்வஹிக்கக் கூடியவைகளாகக் காணப்படவில்லை.

நம் அழகிய சிங்கருடைய மற்றொரு மெச்சத்தகுந்த குணவிசேஷத்தையுமிங்கெடுத்துக் காட்டி யநுபவிப்பது மிகவும் பொருத்தமானது. "ஸர்வபூதாத்மகே தாத ஜகந்நாதே ஜகந்மயே । பரமாத்மநி கோவிந்தே மித்ராமித்ரகதா குத:" என்றிருந்த ப்ரஹ்லாதாழ்வானுடைய சமத்ருஷ்டித்வரூபகுணம் நம் அழகிய சிங்கரிடத்தில் விசேஷமாக உளதென்பதை நிதர்சிப்பிக்கும் ஒரு பாகவதருடைய லேகந ப்ரதர்சன முகத்தாலே வெளியிடுகிறேன். அதாவது வேதாந்த தீபிகைக்கு சிரகாலம் ஸம்பாதகராயிருந்த ஸ்ரீ. உ.வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி தம்முடைய ஸம்பாதகீயோபந்யாஸத்தில் (ஸம்புடம் 17-ஸஞ்சிகை 12-ல் ப்ரபவஹு புரட்டாசி மீ) ஸ்ரீ அழகிய சிங்கருடைய உத்தான மஹோத்ஸவம் என்ற தலைப்பின் கீழ் ஸாதித்திருப்பதாவது "ஸ்ரீமதுராந்தகத்தில் ஸ்ரீ அஹோபிலம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தின் உத்தான ரூபமான மஹோத்ஸவம் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. அன்றையதினம் ராத்ரி ஸ்ரீ கண்ணன் டோலோத்ஸவம் கண்டருளுங்காலத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் லக்ஷ்மீ நரஸிம்ஹனுடைய வைபவ விசேஷத்தைப்பற்றி சில ஸூக்திகளைத் திருவாய்மலர்ந்தருளினர். * * * ஸ்ரீ அழகிய சிங்கருடைய திவ்ய ஸூக்திகளுள் ஒவ்வொரு அம்சமும் ஸாதிசயமாக இருக்கையிலும் ஒரு அம்சம் விசேஷித்த அதிசயத்துடன் கூடினதாக நமக்குப் புலப்பட்டது. ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹ ரூபியான பகவானுக்கு பக்தர்கள் மீதிருக்கும் வாத்ஸல்யாதிசயத்தை உபபாதித்த பிறகு எல்லாரும் அப்படிப்பட்ட வத்ஸலனான சரண்யனிடம் பக்தி ஸம்பன்னர்களாக இருக்கவேண்டுமென்று நியமித்து உபந்யாஸத்தை உபஸம்ஹரிக்கு மவஸரத்தில் தம்மால் ப்ரதிதிநம் ஸ்ரீ சரண்யனிடம் விண்ணப்பம் செய்யப்படும் ப்ரார்த்தனைகளுள் 'பக்தர்களை ஸம்ரக்ஷிப்பது போல பக்தேதரர்களையும் ஏதாவது ஒரு

வ்யாஜத்தை அவலம்பித்து பக்தியைக் கொடுத்து அநுக்ரஹிக்கவேண்டும் என்பதும் ஒன்று' என்று நியமித்தருளினர். இந்த ஸூக்தி அவருடைய ஸாத்விகபாவத்தையும் நீநர்களிடம் அவருக்கிருக்கும் வாத்ஸல்யாதிசயத்தையும் அந்யாத்ருசமாக ப்ரகாசிப்பிக்கின்றனவன்றே ? நம்மைப்போன்றவர்கட்கு எப்பொழுதாவது ஸ்ரீசரண்யனுடைய திருவடிகளில் ஒரு அபிருசி கத்யோதம் போல் ப்ரகாசித்தால் அது இப்படிப்பட்ட கருணாநிதிகளான மகான்களின் ப்ரார்த்தனையின் பலமாகவே இருத்தல் வேண்டும். இல்லாவிடில் நாம் எங்கே! அம்மாதிரியான அபிருசி எங்கே ? மூடவர்போன்ற நம்மீதும் கங்காதீர்த்தம் போன்ற பகவதநுக்ரஹத்தை ப்ரவஹிப்பிக்க ஆவலுள்ள இப்படிப்பட்ட மஹான்களன்றோ உண்மையான ஆசார்யராவார்கள்." என்று.

இப்படிப்பட்ட ஆசார்யவர்யரின் வரிவஸ்யையன்றோ உண்மையில் புருஷார்த்தம்.

ஐ கூஷீ நூவஸிஂஹஸ ௦ஜிஜெ௱ாயீநூவஷவஜ்ீயொ꞉ ।

வெணுமெஸாவாஐநா நூாவஸ வரிவஸ௱ா ஸஉவீ௧தா ॥



ஸ்ரீ:

குருமலர்க் கலம்பகம்.

[ஸ்ரீ. உ. வே. வித்வான் ஆர். கேசவய்யங்கார்]

மங்கலமிலங்கு மலர் மங்கை மணவாளச்
செங்கணெடு நங்கணா சிங்கனடி வாழும்
தங்களிறை யேறுபிறை யாயிர நிரப்பும்
சங்கமெழு சந்தமிகு சங்கதமொ ழிப்பாம். (1)

யோகநிலை யொன்றுநெறி யேகுபவ ரேறும்
நாகமிசை யண்ணலடி யாகுபத நங்கட்
காகமறை வாகனனம் வீடுதொறு நாடும்
யாகமொழி யோதழகு நாதரடி யாமே. (2)

சங்கதமுடன் செறிந்து செந்தமிழ் கலந்த கந்தம்
தங்கழற் கமழநின்ற திருவுருத்தானேயாகிக்
கங்கையும் யமுனையும்போல் கலந்திரு கலையுமோது
பங்கய நயநனென்பான் மங்கலம் பாடுவாமே. (3)

கலைகளார் மறையுருக் கொள் கலுழன்மேற் சரணம்பூக்கும்
நலமெலாம் நிலமுலாவி நந்தலைமிசையே பெய்யத்
திலதமாமுலகுக் கெல்லாம் சிங்கவேள் குன்றமொன்றிக்
குலமுறை செழிக்கும் கோப்பாய்க் குருநிரை வளர்ப்பான் சிங்கன். (4)

இறையெனும் துறை யனைத்தும் நிறம் பெற நிரப்பியாண்டும்
இறையுமே குறைவிலாத்தன் நிரையெனவளர்ந்த நாதன்
பிறையெயிற்றனல் விழிப் பேழ்வாயுடைப் பெருமை பூத்த
மறை மணம் கமழுமன்னன் மாபதம் வணங்குவாமே. (5)

வாய்மொழியமுதமூட்டும் தாயென உலகுக்கெல்லாம்
சாயை தந்தருளும் நங்கள் தெள்ளிய செங்கட்சீயம்
தேயமெங் கெங்குமன்பால் தங்கணே சென்று கொள்ளும்
சீயரென்றின்று மோதும் சீரிய நாமனனன். (6)

அவனதாமவனி தாங்கும் தகவெனப்பகவ ரேந்தும்
தவநலத்தவள முக்கோல் தருமமே திவமளாவிப்
பவமயப் பவ்வம் தூர்த்த பெற்றியின் வெற்றியாங்கே
அவையநல்லமரர் வாழ்த்திப் பரவுமாறறைகுவாமே. (7)

பொருநல்பெருக்கு மருளேசுரக்கு மொருவர்க்குவந்த பகவர்
திருநாரசிங்க சடகோபயோகி யெதிராசதேசி கவரர்
திருநாளிதொன்று தமதாம்சதாபி டவமாமுதன்மை தெரிநாள்
ஒருநாளுமிங்க ணிதுகாறுமோங்கி நிகழாதசிங்க னுருநாள் (8)

இடையூறுயாது மடையாதுநாளு முறையால்விடாத திடமே
விடையாய்விளங்கு மிருபாடியங்கள் தடையேயுறாது நிறையால்
படையோடுபாங்கு நரசிங்கனோங்கு புகழேமுழங்கு பகவர்
தொடையால்நிரம்பு நரசிங்கயோகி யருளே சிறக்கு மொருநாள். (9)

விதையென்னவேத முளையென்னமூல உரையென்னஉன்னு மிதயர்
சுதையென்னசென்னிதொழுதோதிமன்னு செவியேமடுத்தசுவையார்
இதயம்செழிக்கு மதுதாரையென்ன மறை நான்குதாங்கு நிதியாம்
பதியாகவீது மதியாயிரங்கொள் நரசிங்கயோகி பதிநாள். (10)

ஒருமா உறைமார் பரிமா உருவாம்
பெருமானுருவே பரவும் குருவார்
இருமாமறையோர் திருவாய்மருவும்
குருமா வரிமா றமகா குருவாம். (11)

பிளவேது மிலாதுலகா குபரன்
தளரா வளர்தன்னருளின்
உளவாகஉலா வரிமா நலமே
கொளலாகு குலர் குருநா ளிதுகாண். (12)

அடியுமாயிரம் விழியுமாயிரம்
முடியுமாயிரம் மொழியுமாயிரம்
படையொடாங்குதாங் கழகுசிங்கனார்
அடைவதின்றுகாண் மதியுமாயிரம். (13)

கலங்கலங்கலென்றிலங் கரங்கமங்கலங்கள்சேர்
நலங்களேதுலங்கியோங்கு நங்கள்சிங்கர்பூங்கழல்
குலங்குலங்கரங்களே குவிந்துசென்னியோங்குமா
றிலங்கியெங்குமத்திறம் சிறந்தவாண்மை காண்மினே. (14)

மார்கழித் திங்களின் றுயிரத்தான் மதிச்
சீர்நிரைந்தோங்குநம் சேமமாய்ச் செவ்வியார்
கார்முகில் கண்ணனுக்காசையாலூசலே
பார்புகழ் நாநலப் புண்ணியர் பாடுவார். (15)

கேட்பவர் கேசவன் கீர்த்தியே கேட்டவர்க்
காட்படத் தேசிகர்க் காக்கியே யெம் மிறைத்

தாட்பெருச் சீர்த்தியே யாட்டு நம் மூசலே
கேட்ப நின்றெம்மை யாட் கொள்ளுமோர் வள்ளலார். (16)

செல்வநிரை யிறைத்துணைவிச் செய்யாள் பெய்யும்
செங்கணிறை மங்கலமா யெங்கும் தங்கிப்
பல்கலையோர் பயின்றுயர் நற்கலை யொன்றென்றே
பண்டரியே பணித்த பணிப்பண்பே கொண்டு
கல்வியிது பல்கியவல் வினையறுத்துக்
கடுவஞ்சக்களவுதவிர்கதியாமென்றந்
நல்வழியினலத்திருவாய் நிலத்துலாவும்
நரசிங்கசடகோபரருளே கொள்வாம் (17)

திருவுடன் திகழும் திகழ் திருப் பெருமான்
ஒருவனே யெங்கும் கருவெனும் திருவா
யரியெனச் சிறக்கும் அரிமுகச் செம்மல்
அருமறையருளாங் கருளக் குன்றக்
கழி பெருந்தெய்வம் எழில் பரந்தெங்கும்
விழிதழைத் தோங்கு மழையுருவழகன்
காரணனுகும் நாரண நாமத்
தாரணன் தானென வாரணம் தாவுமோர்
வீறுடைமாறன் பேறுடைப் பாதத்
தேறிய நடையான் தேடியே நாடும்
தூங்கனும் சீமான் உம்பரார் கோமான்
தங்கழற் புகழே சங்க மொலிப்பத்
தடையற யாங்கும் படையிறை தாங்கும்
கொடையுடைச் செங்கோற் கொடி பரந்தாடித்
தோன்றிய நாற்பத்தொன்று முறையால்
குருவெனும் சீயரொருவராம் துய்யர்
அடற்புட் சிங்கச் சடகோபர்க்கே
தளராவாயிர முளவாமதி நலம்
வளரப் பெறுமோர் தவள வளப்பம்
எம்பால் வறலற வன்பான் மிகுபுகழ்
பொங்கு மங்கலப் பாங்காய் மலர
நன்கே யிங்கணங்கட் செங்கண்
மாலே தோன்றுமாலே சால
மாலைச் செல்வன் பாலே மாலைக்
கலம்பக நலமே துலங்கிய
மலராமிதுவாய் மலரும் திருவே. (18)

𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌜𑌯𑌤𑌿 𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌨𑌿𑌜𑌾𑌰𑍍𑌜𑌵𑌗𑍁𑌣𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌃 ।
𑌤𑌂 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌶𑌠𑌾𑌰𑌾𑌤𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌶𑌰𑌦𑌃 𑌶𑌤𑌮𑍍 ॥ 1

[illegible] ।
[illegible] ॥ 2

[illegible] ।
[illegible] ॥ 3

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 4

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 5

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ 7

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 8

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 9

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 10

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 11

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 12

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 13

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 14

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 15

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 16

உத்ரு¬க்ஷவெஷவ_நவொாஷவிஶ¬ஜவக்ஷ ாஃ
வஸத்ரு)ஷூாாம் கூவஷ ஸிவெஷகவியள கூாவெ ।
உத்திஷ்ெ யொாமிவாா ஜாமாாஊாஹாா கூம
ஜக்ஷ்நூவஸிம்ஹய_திவெஶவாவெஷஸிகெம்வொ ॥ 17

வ்யாஹூ_த்ரு¬ஷாா_தா_தாாஉஹாாாவஸ்ரீ—
ஜக்ஷ்நூவஸிம்ஹகா¬ணாவரிணாஹஜக்ஷ்ஃ ।
மம்ஹ_த்ருஜம் கஜயி_த¬ம் க¬ஜாாஜஹம்வ
ஸ்வெப்ாதஉாஷிஉஶ_தாஸிஷவொாஜ்வம் வெத ॥ 18

வெநதாஷ்ரூஶொாஜ்வஶ¬ஹம் ஶ¬ஹதி ஷ வ¬ஶிவ-லம்
வெஶாஶ¬ஹ்யவெதZஷ்ரு ஹவஷீயஉவெஹாஷய ஸ்ரீஃ ।
நிவ-ல-த-லு யஷ்¬வி ஹவிஷ்யதி வ¬ஶிண-லகாஉஃ
ஸ்ரீஉாநு வ¬நத்தி-லம¬ணயாநு நூஹாஸிஉ-லஹகக்வ்ஜ ॥ 19

ஸ்ருவ¬ஶிரி_தாம்வொவிஶாஜவஜாஹகஸ்ரீ—
விஷ்ரு¬ஜீஹா_தாஜஉம்மஜவஸிம்ஹஜக்ஷ்ஃ ।
ஷூஷ்டம் ஷூதகூஉ_ந¬ஶிஷ்டஉிஷஜயா கூக—
கெஷஉாஸிவெஷகவியவெயவ வியா_த¬காஉஃ ॥ 20

ஜ_த்ருஷ்டயாஷ்டகாவண-லம¬ணாஷ்டவவெஷ்ருஃ
ஸ்ருவெவ்த்ஜூவெஷகவாணாஸ்ரயவெணவி-லவெயவெயஃ ।
உவெஷ்ஜாயி_தஃ வஷவஷி_தா_ந_ந¬ாாமவிகூா—
ஷூஜூம்ஷவாவநகஜா்க¬ஶவெஜாZஶமூஹஜாக ॥ 21

யொவெமாமாயம் யயாவக வாஉஸிமஉவெ நாஷஜவய-லஜவய-லா-
வம்விஜஃ ஶ¬ஜதக்ஷத்தியிஹாவவெஜாக்ஷாஜவெகெம்கய-லஜக்ஷ்ஃ ।
காவெஜ கஜ்யாணவண-லஷூகாணகிாவெணாஹ்ா_நஉஹ்ரு¬ஜ்ஜஹா_ந-
வெஜயொயாநம் வஉாநம் ஶ¬ஹாஹவவஷஷ்ாநூஹ¬ஶிஉாZZா¬வொாஹ ॥

ஜ்ஜதிவஜிதஷிமஜஜ்ஹ்ஷா¬ஷ்ஜஹஉஹ¬ஶிஉா
ஷூயஉஸிஷவவொாஷஜ்கியாய்ாதஶாவஃ ।
யதிவாஉயிா¬ஶிஜஷ்ருநூநம் மாஷவாஹஃ
நாஹாிவரிவயெ-லாக்ஷ¬ம்மஜம்வொ ஜமாவெஹ ॥ 23

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 24

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 25

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 26

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 27

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 28

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 29

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 30

"போலிக போலிக" என்று திருவாய் மொழியில் எம்பெருமானரையும், "கண்ணன் வெஃகாவுது அம்பூந்தேனிளஞ் சோலை அப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே" என்று திருவிருத்தத்தில் ஸ்ரீநிகமாந்தமஹா தேசிகரையும், நம்மாழ்வாரும், "விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில் வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினளே" என்று திருநெடுந்தாண்டகத்தில் அருள் மாரிதாமும், ஸம்ப்ரதாயப்ரவர்த்தியாகிய ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகரைப் பின்னும் குறிக்கொண்டு வாழ்த்தியது போல் "ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய:" என்றுலகு கொள்ளத் திரிதந்துயரும் கருளக் குன்றனைய சிங்கப் பிரானடிக் கோன்மை வடிவாய்த் தாமே யமர்ந்து சிறக்கும் பெற்றியை "அப்பொன் பெயரோன் தடநெஞ்சம் கீண்ட பிரானர் தமதடிக் கீழ்விடப்போய்த்திடநெஞ்சமாய் எம்மை நீத்து இன்று தாறும் திரிகின்றதே" என்று திருவிருத்தத்திலும், "அஞ்சிறைய மடநாராய்"; "செழும்பறவை தானேறித் திரிவானதாளிணைகளென் தலைமேல்" என்று திருவாய் மொழியிலும், தமதேயாம் குறிப்பில் கொண்டருளியவாறே, தாபதர்பெருமானய்த் திகழும் ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகர் தொடக்கமாய், மறையறக் கோலோச்சி, நெடிதூழி வளர்ந்து விளங்கா நிற்கும், சிங்கப்பிரானது கோயிற் சடகோபன் சேவடித் திருவாயே, பல்பெருங் குருமணிகள், ஒரு முகமாய்க் கோக்கப்பெற்று, சடகோப யதீந்த்ர மஹாதேசிக ராமுருமணிகளா யிலங்கு நலந்திகழாரத்து, இற்றைக்கு யாமனைவரும் கண்டு களிக்குமாறு, ஆயிரம் நிரை பிறை கண்டு, தமிழ்வேத மறிந்த பகவரால் பல்லாண்டு பாடப் பெற்று விளங்கும் தோளாதஞர்மாமணியாய், நாற்பத்தொன்றென ஒன்றிப் பொலியா நிற்கும் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகரது பெருமை பொன்னென மலர்ந்து புகழென நாறியதே இக்கலம்பகமாய் விரியாநின்றது. பொன்னும் புகழும் மலரும் நாற்றமுமாய்க் கலந்த இந்நீத்தத் திருக்காட்சியை நூலேக்கொன்றே விரிக்கவல்லதாகும். இவ்வாறு பொன்னுறும் நீர்மைக்கு உவமை வேண்டில் உலக நோக்காற் காணவொண்ணப் பரம்பொருளினது உபாதாந நிமித்த காரணங்கள் ஒன்றிக் கலக்கும் நீர்மையையே கூறலாம். இவ்விரண்டும் உணர்ந்து முரனுதல் நூல்கொண்டே யாகுமாதலின், அந்நூலின் கண்ணே நிலை நின்றது இந்நீத்த மென்றது பெறப்படும். இந்நீத்தத் திருவே அந்நூலின் நோக்கும் முடிபுமாம். அந்நூலே வேதம். அந்நூற் பொருளே பிரமம். அவ்வுண்மை விளக்கும் நூலே பிரமநூல். அப்பிரம வடிவனே சிங்கன். அந்நூல் வடிவனே கலுழன். கலுழன் மேற் சிங்கனே மறைமுடி மேற் பிரமம் என்றதை விளக்கி யருளும் பகவர்களே குருக்களாவர். பண்டைக் குருக்கணிரை இன்றைக் கிவ்வழகிய சிங்கர் வடிவாயே நமக்குக் கண் கூடாகியது நமது பெரும்பேறேயாகும். அந்



ஸ்ரீ அழகியசிங்கர் தேவகோட்டையில் எழுந்தருளியிருந்தது.

றாமேனுக்கே இக்கண்ணேக் கென்றதை நோக்கிக் காண்க. குருக்களும் கலுழனும், சிங்கனும் இவ்வாறு இங்கண் கலந்து களிக்கும் பெருமை ஈண்டு விரிக்கப்பெறும்.

அடிதொடங்கி முடியளவாக வேதம் விளக்கும் தத்துவமே பர தத்துவமாம். அத்தத்துவமே ஸிம்ஹ தத்துவம். அருள்மாரி என்றதே அதன் பொருள். ஆண்மை சிறந்து அருள் சுரக்கும் பெற்றியதே "ஸிம்ஹம்" ஆம். இத்தகையதோர் "ஸிம்ஹ" த்தின் திருநாமங்களே நாராயணன், பகவான், புருஷோத்தமன், ப்ரஹ்மம், திருமால் முதலியன. "ஊயா நம நாரஸிம்ஹஸ்ய வபு நாராயணம் வரம்" என்றது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை. "நாரஸிம்ஹ வபு ஸ்ரீமாந் கேஶவ: புருஷோத்தம:" என்றது ஆயிர நாமம். மந்திரமறையோதியே இந் நுட்பம் தேற வல்லது. அவற்றின் பரப்பனைத்தும் கூறிற்பல்கும். ஈண்டைக்கு இலக்கணமாகும் நூலயோசனை கொண்டே இவ்வுண்மையை விளக்குவல். ஸிம்ஹம் எனும் சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உள்ளன. "ஹிம்ஸி ஹிம்ஸாயாம்" என்ற தாதுவினின்று "ஸிம்ஹோ வர்ணவிபர்யயாத்" எனும் விபர்யயமுறையானே ப்ருஷோதராதித்வாத் தூய்மை யுடைத்தாய அரிமாவெனும் சாதிப்பொருளதோர் பொதுச் சொல்லாகும். இப் பொருண்மைத்தாய இச்சொல்லுக்குப் பாணிநிபகவர் சிறப்பித்திலக்கணம் கூறிற்றிலர். பொது விதியானும், மாறுகோண் முறையானும், இன நீதியானும், இது தேறப்படும். இது பொதுவிலக்கணம். சிறப்பிலக்கணத்தால் இச்சொல் பரம்பொருளையே நன்குணர்த்தும் வன்மையுடைத்து. இச் சிறப்புப் பொருளதோரிச் சொல்லுக்கே அன்னவர் சிறப்பித்து சூத்திரம் ஓதியுள்ளார். 'ஸிஞ்சே: ஸம்ஜ்ஞாயாம் ஹநுகௌ கஶ்ச" என்றது அச் சூத்திரம். சுரக்கும் பெற்றியதே ஸிம்ஹம் என்றும், அப்பெற்றித்தாய பொருள் ஒன்றுக்கே ஸிம்ஹம் என்றது இயற் பெயர் என்றும் இலக்கணம் வகுத்துள்ளார். "புஷிவிசிவபூதாக ஸம்ஜ்ஞாயாம்" என்ற சூத்திரத்தாலும், "ஶவாதிஷு விஶேஷஸம்ஜ்ஞாயாம்" என்ற வார்த்திகத்தாலும், "வாஸுதேவாதிஷு ஸம்ஜ்ஞா" என்ற மஹா பாஷ்யத்தாலும், நாராயண, கோவிந்த, வாஸுதேவ, சப்தங்கள் பரம்பொருள் ஒருவனுக்கே உற்ற திருநாமங்களாயும், பிறர்க்கறவே அற்றவைகளாயும் விளங்குவன போல், பின்னும் அன்னவனுக்கே "ஸிம்ஹ" என்ற திருநாமம் நன்குற்றதென்றதை இச்சூத்திரம் தெற்றெனத் தோற்றுவிக்கும். "ஊயா நம நாரஸிம்ஹஸ்ய வபு நாராயணம் வரம்" என்ற அஹிர்புத்ந்யஸம்ஹிதா வாக்கியத்தின் மெய்ம்மை விளக்கப்பாணிநீயமே தனித் தீபமாய்த் திகழா நின்றது. ஸிம்ஹ ஸூத்ரம் பணித்தபாணிநீபகவர், இச்சொல் செங்கட் சீயத்தையே உணர்த்தும் வன்மையுடைத்து என்ற சிறப்புத்தோற்றவே "ஸம்ஜ்ஞாயாம்" (இயற்பெயராகு மிடத்து) என்று சிறப்பித்து ஓதியுள்ளார். அன்னவனை உணர்த்து மிடத்து இது சாதிப் பெயர் அல்ல, இயற்

பெயர், என்றதை விளக்கவே இச்சூத்திரத்தில் ஸம்ஜ்ஞா என்று விதித்து, அடுத்தோதப்பட்ட சூத்திரத்தில் "வ்யாக்ரவ்யாக்ரௌ தஸ்ஸுஜாகௌ" என்று வ்யாக்ரம்" (புலி) என்னும் சொல் சாதிச் சுட்டென்று விதித்துள்ளார். பரம்பொருளுக்கு உற்றதும் சிறந்ததுமாகிய தனித் திருநாமமே "ஸிம்ஹம்" என்றது பாணினிஇலக்கணம் விளக்கியதாகையால் இப்பொருள் மெய்ப்பொருளென்று சான்றோர் உடன்படா நிற்பர். "வேங்கடேசம் ஸிம்ஹவம்" என்றார் நம் தேசிகன். "என் சிங்கப்பிரான்" என்று நம்மாழ்வாரும், "தெள்ளிய சிங்கமாகிய தேவு" என்று திருமங்கை மன்னனும், "சீரிய சிங்கம்" என்று ஆண்டாளும், இச்சங்கத விலக்கணப் பொருளையே செந்தமிழாயருளிச் செய்துள்ளார்கள். "ஸிம்ஹ" என்ற வடமொழிக்கு "அருள் மாரி" என்றதே செந்தமிழாகும். "ஸிம்ஹ:" என்றது ஆயிரநாமத்துள்ஓதப்பட்ட தோர்திருநாமம். அருண்மையையே சாலச்சிறப்பிக்கும் இத்திருநாமமே அந்நாமங்கட் கெல்லாம் தலை யென்று இருமாமறைகளும் முறையிடா நின்றன. சொல்லனைத்துக்கும் சிங்கனே இலக்கு. பொருளனைத்துக்கும் சிங்கனே தலை. உணர்வனைத்துக்கும் சிங்கனே நோக்கு. இந்நாமமே ஆயிரநாமமுமாம் என்றதை அருள்மாரிதாமே "வாயிலோர் ஆயிர நாமம்" என்றருளிச் செய்தார். "ஆயிர நாமச்சிங்கன்" என்று கம்பநாட்டாழ்வாரும் இக்கருத்தையே குறிக்கொண்டுள்ளார். 'ஸஹஸ்ரநாமநாம்' என்றது போல், மாற்றாரை மாற்றழிக்க வல்லானையும், உற்றாரைக் காத்தருளும் கருணைமுகிற்கண்ணனையும், விளங்கும் பரதத்துவத்தின் திருநாமமே "ஸிம்ஹம்" என்றது தேறிற்று. "ஸஜ்ஞாநெவஸ்மவாநு...... லெஸயதஸ்ருதெக தா" என்று அருள்மாரியாய்த் திகழ்பவனே பகவான் எனும் அரியதோரிப்பொருளையே ஸாத்வதஸம்ஹிதை கையோர்கனியெனக் காட்டியுள்ளது. இத்திற ஆழ்பொருள் சொல்லின் கண்ணே நின்று மறை இலக்கணம் ஒன்றாலேயே காட்டப்படும் அழகியதோர் மெய்ப்பொருளாதலால் இம்முறை தேராக்கால் அம்மெய்ம்மை தேரப்படாதே போம். பரன் என்பான் கண்ணாயிரமுகில் வண்ண அழகிய சிங்கன் என்றதே அழகாகும் பொருளாயும், பொருளின் அழகாயும் திகழா நின்றது. பரதத்துவமாகும் இந்த ஸிம்ஹதத்துவத்தை விளக்குவதே வேதம். வேதத்துக்கு ஆதியும் நடுவும் அந்தமும் யாவுமாகும் பொருளே 'அரி' என்னப்படும். "அரி" என்றதற்கு 'சிங்கம்' என்றதும் ஓர் பொருள். வேத முதல்வனை அரியே அரிமுகனாகும் சிங்கனவன். "சோதித்திருத்தூணில் தோன்றினன் வேதத்தின் முன்னின்றான்" என்பர் புகழேந்தி. முதல்வனையே வேதம் சொல்லும். முதல்வன் சொல்லே வேதமுமாகும். முதல்வன் கண்ணே வேதமும், வேதத்தின் கண்ணே முதல்வனும் ஒன்றியே ஒருவரை ஒருவர் காத்துக்கொண்டு நிற்பர். பரம்பொருள் வேதத்தையும், வேதம் பரம்பொருளையும், ஒருங்கிக் காக்கும்

நீர்மை நோக்கியே 'ஸிம்ஹவநகுப்தி' (சிங்கவனக் காப்பு) ந்யாயத்தை ஆன்றோர் விரித்துள்ளார். சப்த குஹா ஹஹநாரண்யமே வேதமாகும். அங்கண் சஞ்சரிக்கும் ஸிம்ஹமே ப்ரஹ்மமாகும். 'உபநிஷத்பாஷ்ய' என்றார் வேதசிரத் தேசிகனார். "மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம்" என்றது ஆண்டாள் பாசுரம். பாணிநீய இலக்கணப் பொருளையே இப்பாசுரங்கள் விளக்கும் பான்மை உற்று நோக்கத்தக்கது. அடிமுதல் முடியளவாக வேதம் விளக்குவது இவ்வரி தத்துவத்தையே. 'ம்ருகோ ந பீம꞉ குசரோ கி³ரிஷ்டா²꞉ யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷு அதி⁴க்ஷியந்தி பு⁴வநாநி விஶ்வா" என்ற ஒன்றே இங்கண் ஓதச்சாலச் சிறக்கும். நிக்ரஹாநுக்ரஹங்கள் ஒன்றுதலும், அவற்றுள்ளும் அநுக்ரஹம் மிகுந்து நிற்றலும், அம்மிகுதி நின்றது (சிங்கவேள்) குன்றத்திலென்றதும், அக்குன்றனே இறையாய் எங்கும் ஸஞ்சரித்தலும், அவனே மூவடியால் உலகளந்து கொள்ளலும், இம்மறையான் நன்கு விளக்கப்பெறும். 'க்வாயம் ந யாதி' (எங்குதான் இவன் சஞ்சரிக்கவில்லை) எனக் 'குசர' என்ற யாஸ்க முனிவர் நிருத்தியும், இம்முறையானே நன்கு பொருளுற்று நிறம் பெறுதல் நோக்குக. "ம்ருக³꞉" என்றதின் இலக்கணநுட்பத்தையும், "நம்ருக³ம் நமாநுஷம்" என்றவிடத்து ம்ருக³ என்ற ஸ்ரீபா⁴க³வத ப்ரயோகத்தையும் உய்த்துணர்க. பரனாகிய தானே தனது பரப்பைப் பின்னு மிரட்டித்துச் செங்கணெடியோனாகும் பரப்பிரமமாயே இவ்வாறு புதுக்கணித்த வ்யாப்தியைப்பரக்க விளக்கும் திருநாமம் ஈதேயாம். வ்யாபகமாகும் பரத்துவத்தை வ்யாப்யமென்னலாம்படிசெய்யும் தன்மையே ஸிம்ஹத்வமாம். மெய்ம்மையாகும் தனதுபரத்துவமே அருண்மையாயிரட்டிப்பதே ஸிம்ஹமாகும். ஆக அருண்மை நின்றது ஸிம்ஹத்தினிடத்தில் என்றது கூறிற்றாயிற்று. யாங்குமே அருண்மை சுரந்து சிறந்தமையே 'ஸிம்ஹ' இலக்கணம் என்றதை "குசர" எனும் சொல் நன்குணர்த்தா நின்றது. ஈதே ஸிம்ஹத்தின் பெருமை. கரந்தெங்கும் பரந்துவிளங்கும் பரனே விஷ்ணு. அருண்மைப் பன்மையாய்ப் பின்னும் பரந்துவிளங்குமவனே மஹாவிஷ்ணு. அம்மஹாவிஷ்ணுவின் திருநாமமே "ஸிம்ஹம்." இந்த ஸிம்ஹமே வ்யாபகதத்துவமாதலின் ஸிம்ஹமாயே உலகளந்தான் என்று வேதம் ஓதிற்று. குன்றத்தே நின்ற சிங்கமென்றதால் சிங்கவேள் குன்றத்தான் குறிக்கொள்ளப்பட்டான். உலகளந்தான் சிங்கன் என்று வேதமோதியவாற்றானே ஆழ்வார்களும் அருளிச்செய்துள்ளது நோக்கத்தக்கது. "வடியுகிரால் ஈர்ந்தான் இரணியனதாகம் இருஞ்சிறைப்புள்ளூர்ந்தான் உலகளந்த நான்று" என்று பொய்கையாழ்வாரும், "கொண்டதுலகம் குறளுருவாய், கோளரியாய் ஒண்திறலோன் மார்வத் துகிர்வைத்தது— உண்டதுவும், தான் கடந்த ஏழுலகே தாமரைக்கண்மாலொருநாள் வான்

கடந்தான் செய்தவழக்கு" என்று பூதத்தாழ்வாரும் அருளியுள்ளார்கள். பிறவும் நோக்கிக்கண்டு கொள்க.

உபநிடதங்களும், பிரமநூலும் நன்கு விளக்கும் பரப்பிரமமே இச் சிங்கனென்பான். இன்னவனையோர்தலே பிரம மீமாஞ்சையாகும். காரணத்வமும் தாரணத்வமும் ஒன்றிச் செழிக்கும் தத்துவமே பரப்பிரமம் என்றது பிரமநூல் துணிபு. அத்துணிபின் திட்பநுட்பங்கள் ஈண்டு விரிக்க ஏலாமை நோக்கி, அதன் விரிவாயே விளங்கும் எம்பெருமானார்திருப் பாடியம் ஒன்று கொண்டே இவ்வுண்மை ஐயமறத்தேறலாம். "அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே" என்றதால் ஆண்மை சிறந்த புருடோத்தமன் என்றதை விளக்கினார். "விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே" என்றதால் அருண்மை சுரந்து காத்தருளும் அமுதத்திருத்தேவு என்றதைப் பரக்க நிரூபித்தார். அப்பரம் பொருளே சுடர்மிகு சுருதியினிறுதியில் பொலியும் பரப்பிரம மென்றார். அன்னவனே திருமகளார் தனிக்கேள்வன் என்று அறுதியிட்டார். அவன்பால் நல்லன்பையே பெரும் பேறெனவிரும்பா நின்றார். இத்தலைப் பாடியத்தால் பிரமநூற் றலைவனாகிய சிங்கப்பிரானையே விளக்கி வணங்கா நின்றார். ப்ரஹ்லாதாழ்வானை ஒக்கவே அன்னவன் பால் பேரன்பை விரும்பா நின்றது ஓர் குறிப்பாகும். ஸ்ரீ ஸுதர்சந நாரஸிம்ஹ யந்த்ரராஜ மஹிமையை வருணிக்கும் ச்லோகத்தின் முதலீற்றெழுத்துக்கள் சிறிதே மாறி இத்திருப்பாடியத்து முதலடியாய் நின்ற ஒன்றே; பிரமநூற்குச்சிங்கனே விஷயம் என்றதை விளக்கும் தனிச் சான்றாகும். "நிகிலபுவநஜந்மஸ்தேமஸம்ஹாரைகஹேது:" என்றது நாரஸிம்ஹயந்த்ரராஜ மஹிமையை வருணிக்கும் ச்லோகமாகும். இது கண்டே இலக்கிய முறையானும் அநுவாத முறையானும் எம்பெருமானார் "ஸ்தேம" என்னும் சொல்லை வழங்கி யிருத்தல் தெளிக. "ஸமாநாவஸ்தயம: ப்ரவர்த்தி" என்றும், "ஶிஷ்டிபரிஜ்ஞாநார்த்தம் ஶாஸ்த்ரம் ஶாஸ்த்ரபரிஜ்ஞாநாச்ச ஶிஷ்டி:" "ந சேதாநீமாசார்யா: ஸூத்ராணி க்ருத்வா நிவர்த்தயந்தி" என்றும் மாபாடிய மருளிய பதஞ்சலி முனிவருள்ளம் கண்டு இத் திருப்பாடிய ப்ரயோகத்தூய்மை தெளிக. இம்முறையானே நாநாவ்யாகரணகாரரான நம்மாதேசிகரும் இச்சொல்லின் தூய்மையை விளக்கியருளியுள்ளார். ஈதே பதஞ்ஜலி முனிவர் உவந்த முறை. இவ்விலக்கணநுட்பத்தை உற்றுழிப் பிறவாயிலாகச் சாலவிளக்குவல். "நி" என்றதை மட்டிலும் "அ" என்றும், "ஏகஹேது:" என்றதை மட்டிலும், "ஆதிலீலே" என்றும் எம்பெருமானார் சிறிது மாற்றி யருளிய தெற்றிற்கெனின், தத்துவடீகையில் அருளிய முறையே இங்கு பின்னும் நன்கியையும். அஃதோர்ந்து தெளிக.

இச்சிங்கம் அருள்வதே மதிநலம். இச்சிங்கமே மதிநலம் அருளும். ப்ரஹ்லாதன் அருளப் பெற்றது பத்திமையென்னும் இம்மதி நலமே. எம்

பெருமானூர் விரும்பியருளப் பெற்றதும் மதிநல மென்னும் இந்த பக்தி ரூபாபந்ந ஞாநமே. ஆழ்வார்தாமும் இம்மதிநலமே அருளப்பெற் றூர். அருளப்பெறுதலே மதிநலமாகும். அருளும்பரனே "ஸிம்ஹம்" என்றது பாணிநீயம் கொண்டு முன்னர் கூறப்பட்டது. அப்பரன் அருளும் நலமே மதியாகும். "மதி" என்றதற்கு, பரன் தனதடிக் கண்ணே அடியார் மனத்தை ஆக்கி யருளுவதேயாம். "அப் பொன்பெய ரோன் தடநெஞ்சம் கீண்டபிரானூர் தமதடிக்கீழ் விடப்போய்த் திடநெஞ்ச மாய் எம்மை நீத்து" என்று ஆழ்வார் தாமே இப்பொருளனைத்தையும் ஒருங்கத் திரட்டியருளா நின்றூர். அச் சிங்கனுல் "ஜயிஹதிஜ்ஞவாஜெஷ்ஜ வஹெயொ௨வெஜ்வாஹவிஷ்ஜதி" என்று பின்னும் மதிநல மருளப்பெற் றுத் "தொழுதெழு என் மனனே" என்று அவனதின் னருளையே ஆயிரம் திருவாய் மொழியாய் விரித்தருளினூர். ஈதே "மதி" எனும் சொல்லின் மெய்ப்பொருளாம். இப்பொருளும் வ்யாகரணம் நன்குகந்த தென்றதை "நஜெநஉஷஜெஷவாநஜெஹஃ" என்ற மாபாடியமும், "உதிவஜெஜி வஜெஜாஜெ௨ஹஜெஷ" என்ற பாணிநி சூத்திரமும் கண்டு தெளிக. இச் சூத் திரத்துக் கூறியதுகூறல் அணுகாமைக்கு "புத்தி" என்றது கல்வியறிவுக் கும், "மதி" என்றது தெய்வம் அருளப்பெறும் உணர்வுக்கும் ஆகும் என்றிலக்கணம் வல்லார் பணிப்பர். அவன் மதிநலமருளியே இவன் தொழுதெழுவது பற்றி, மதிநல மருளப்பெற்றூரனைவரும் பரனடி தொழுதே எழுபவராயினர். தெய்வம் தரப்பெறுதலே "மதி" என்றதை "மதி நுட்பம் நூலோடுடையார்க்கு" என்ற திருக்குறளில் பரிமேலழகர் குறித்துள்ளார். இவை யனைத்துக்கும் வேதமே அடி என்றதை "உஹொஜ விஷ்ணாவஜெ௨திஂஹஜா௨ஜெஹ" என்ற இருக்கு நோக்கிக் கண்டு கொண்மின். பத்தி என்னும் இம்மதிநலம் அருளும் தத்துவம் "ஸிம்ஹம்" என்றது தேறிற்று. இவ்வாறு அருளும் ஸிம்ஹத்துக்கே "மஹாவிஷ்ணு" என் றது திருநாமமாயிற்று. மஹத்துவம் (பெருமை) நின்றது இவனிடத்தாத லின் "மஹத்" என்றது ஸிம்ஹத்தின் உயர்வு சிறப்புச்சுட்டேயாயிற்று. இவ்வாற்றூல், சிங்கப்பிரான் உயர்வற உயர்நல முடைத்தாயனுயினன். அவ னது சேவடியைத் தலைத்தலைச் சிறப்பத்தாமே தாங்கி விளங்குமாபோல் அவனது மஹா விஷ்ணுத்வத்தையே தமது மறை முடியும் தாங்கி வளரா நின்றது. இத்திற "மஹத்த்வமு" டையவனே பரப்ரஹ்ம மென்னப்படு வன். உயர்வற உயர்நல முடைத்தாய அருள் மாரியெனும் பரம் பொரு ளுக்கே உற்றனவாம் நெடுமால், பரப்ரஹ்மம், பெருந்தேவு, மஹா விஷ்ணு, திருமால், எனும் திருநாமங்கள் என்றது இலக்கணம் கொண்டு நன்கு தெளியற்பாலது. இவனே மதி நலமருளும் "ஸிம்ஹம்" என்றதை யும், அம்மதி நலத்துக்கு இவனே இலக்கு என்றதையும் "உயர்வற" என்ற முதற்றிருவாய் மொழி கொண்டும், "கவிஜஹஜெவநஜ" என்ற முதற் றிருப்பாடியங் கொண்டும் காண்க. மதிநலம் சிங்கன் சுரக்கும் அருளாத

லாலும், சிங்கன் அருளுவது மதிநலமாதலாலும், மதிநலத்துக்கு சிங்கனே இலக்கு என்றது இருமாமறை முடிகளின் துணிபு என்றது தேறிற்று. “மதிநலம்” என்றதும் “ஸௌம்ஹீ ஸத்ரா்மிவா” என்றதும் ஒரு பொருண்மைத்தாம். மஹாவிஷ்ணுவின் பொன்னடிப்பால் பத்திமையையே ஆழ்வாரும் எம்பெருமானாரும், அன்னவனுலேயே அவாவற அருளப் பெற்றார்கள். அவனைக்கப் பெறுதலே இப்பத்திமையுணர்வு. இப் பத்திமை யுணர்வுக்கு அவன் ஒருவனே நோக்கு. “ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கு முணர்வு” என்று பொய்கை ஆழ்வார் இப்பத்திமைக்கு திருமகளார் தனிக்கேள்வன் ஒருவனே நோக்கு என்றார். ஸ்ரீநிவாஸன் ஒருவனே நோக்கு என்றார் எம்பெருமானார். திருச்சிங்கனே அருள்மாரியாம் திருப்பாடியப் பொருள் என்றது இவ்வாற்றாற் கூறிற்று பிற்று. “பெருந்தேவு” என்றது சிங்கனுக்கு உற்ற ஓர் செந்தமிழ்த் திருநாமம்.

இப்பெருந்தேவினிடத்தே ஆண்மையும், அருண்மையும், ஒருங்கிச் செழிக்கும் நீர்மையை “ஸிம்ஹம்” என்னும் திருநாமம் பின்னும் நன்கு விளக்கிற்று. நிக்ரஹமும் அனுக்ரஹமும் இவனிடத் தொருங்கி நிகழ்தலானும், அது தானும் ஒன்று நிகழுமாறே மற்றொன் றும் நிகழுமாதலின், சிக்ஷகத்வ ரக்ஷகத்வங்கள் உபயலிங்கம்போல் இவனிடத்து ஒன்றிவிளங்கா நின்றன. தீமனத்தாரை சிக்ஷிக்குமாறே தூமனத்தாரை மதி நலமருளித் தனதாளிணைக் கீழ்கொள்ளும் இவனே அருள்மாரி (ஸிம்ஹம்) எனும் ஆழ்பொருளை “ஸடாவடாஸீஷ்ணே” என்ற தயாசதகத்தில் நம்தேசிகனார் கண்கூடாக்கினர். மாற்றாரிடத்துச் சீற்றமும் அடியாரிடத்து அருண்மையும் ஒருங்கித்திகழும் செங்கட்சுடர்க் கடவுள் இவனே யாவன் என்றும், விட்டிலெனமாற்றார் வீழ்ந்து பொடிப் படும் சுடர் விழியனென்றும், அங்கப்போழுதே அருங்குழவியென்று அடியாரை அணைத்து அன்னையாய் மதிநல ... னென்றும் இப்பொருள் ஆங்குச் செம்பொருளாக்கப் பெற்றது. “உக்ரஜ ஸிம்ஹஉத்தாநா ஸர்வராஜஸூரூபா ரூபா” என்றது நன்கு நோக்கத்தக்கது “ஸத்யஜ்ஞநந்தம் வாசே வைதந்யஸந்யாயிநீ” என்று முன்னரே விளக்கிய மெய்ம்மையே இவ்விடத்து உத்தாநா என்று பின்னும் விளக்கப் பெற்றது நோக்கி அன்னவன் ஸ்ரீமத்த்வமும், ஸிம்ஹீஸ்தந்ய ந்யாயநுட்பமும் இங்ஙனே தெளிக. “ஸத்த்வஸ்தயோஜ்ஜ்வல வெயூ। தத்விஷந்தவந்யகேஸரீந்திவம்” என்றும் “விஷ்ணுகுஷிமணவரிணாஹோதீடதநாஃ” என்றும் நம் பட்டாரகரும் இவ்வரும் பொருளையே பின்னும் போர விளக்கியருளினர். இவ்வடிவனே அழகனென்று இருமாமறையானும் புகழப்படுவன். இவனே உத்தாரகன் என்று வேதம் முறையிடா நிற்கும். காரணத்துவம் அவனது மெய்ம்மை. தாரணத்துவம் அவனது அழகு. இவ்வழகு சிங்கனுக்கும் மஹாவிஷ்ணுவே ஸர்வோபநிஷத்ப்ரதி

பாத்ய ஸர்வசரீரியென்று வ்யாஸபகவான் அறுதியிட்டுள்ளதை "நார ஸிம்ஹவபுஃஸ்ரீமாந்" என்ற ஸஹஸ்ரநாமமும், பட்டர் திருப்பாடியமும் ஓதிக் காண்க. இவ்வழகுதிருமேனியன் பெருமையை விளக்கும் நூலே சாரீரக நூலாகும். இப்பெருமானே சிங்கன். இப்பொருளதோர் சங்கதச் சொல்லே நந்தமிழ்ச் சீயமாம். ப்ரஹ்மஸூத்ராதிகரணசரணத்யாய ஸாரமாயே விளங்குபவன் இப்பெருமான் என்றும், இவனே "ஸ்ரீமாந்" என்றும், இவனே சுடர்மிகு சுருதியுள் உளன், எங்குமுளன், என்றும், இவனது திருநாமமே "ஸிம்ஹம்" என்று வடசொல்லாயும், "சீயம்," "சிங்கம்" என்று தென்மொழியாயும் திகழும் என்றது விளக்கப்பட்டது.

(1) திருப்பாற்கடலைக் கடையும் போது பிராட்டியுடன் வெளியில் வந்த சிலாக் கியமான கௌஸ்துபம் என்கிற ரத்தினம்போலே ஸ்ரீய:பதியான எம்பெருமா னுடைய திருமார்பானது சேர்ந்து இருக்குமிடம் என்று கூறலாம்படி பிரீதிக்கு விஷயராய், தாமரைபோன்ற திருவடிகளைத்தலையில் வைத்துக்கொள்ளும் பிரகாரத் தைப் பெறும்படியான பாக்கியத்தையுடைய நாம் கருப்பத்துடன் அநாதியாக வந்த கொடுமையான கர்மமாகிற ஆற்றில் விழுந்து ஆற்றுடன் போகாதபடி, ஸூக்ஷ்மமான அர்த்தத்தோடு ஐந்து விஷயங்களை அறிந்த நம்முடைய ஆசாரியர்கள் கிருபை செய்ய ஏற்பட்டார்கள். ஆசாரியர்கள் எம்பெருமானுக்கு உலகமனைத்தும் சரீரம் என்றும் அவன் அதற்கு சரீரி என்றும், அவனுக்கும் உலகிற்கும் உண்டாய இந்த உறவையும் ஒருவன் அறியவேண்டிய அர்த்த பஞ்சகத்தையும் அறிந்தவர்கள்.

(2) ஸித்த ஸாத்யரூபமான தர்மங்களை உள்ளபடி உணர்ந்திருக்கிற பெரி யோர்களுடைய ஆசாரம் அநுஷ்டாநத்துக்கு முக்ய ப்ரமாணம். வேதங்களும் இவர் கள் திருவுள்ளத்தை யநுஸரித்து ப்ரமாணமாகும்.

வினவினர். ஓரர்த்தத்தை உள்ளபடி யறிந்து தானறிந்தவாறே பிறருக்கு உபதேசிப்பவனே ஆப்தன். ஆப்தர் என்பது முக்கோற்பகவரை யுங்குறிக்கும். தொல்காப்பியர்,

(3) " நூலே கரகமுக்கோன்மணையே
ஆயுங்காலை யந்தணர்க்குரிய."

என்று முக்கோற்பகவரின் இயல்பெடுத்து இயம்பினர். அறமுதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் முற்றத்துறந்தவரே யாவர் என்று கண்ட திருவள்ளுவ நாயனாரும், "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்தான் அவர்களியல் பெடுத்தியம்பினர். இவர்களைக்குறிக்கையில் (4) "ஒழுக்கத்து நீத்தார்" என்றும், (5) "துறந்தார்" என்றும், (6) "இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்" என்றும், (7) "ஐந்தவித்தான்" என்றும், (8) "நிறை மொழி மாந்தர்" என்றும், (9) "குணமெனும் குன்றேறி நின்றார்" என்றும், (10) "அந்தணர்" என்றும் புகழ்கின்றார்.

---

(3) முந்நூலும் குண்டிகையும் (கமண்டலமும்), முக்கோலும் ஆமை மணையும் போல்வன அந்தணர்க்குரிய என்பதாம். ஈண்டு அந்தணரென்று பொதுச்சொலாற் சுட்டினாரேனும் விசேஷணங்களை நோக்கின் அச்சொல் முக்கோற் பகவரையே குறிப்பிடு மென்பதறியலாம். திரிதண்ட சந்யாஸிகளே முக்கோற்பகவர். ஆமை மணையாவது ஆமையின் வடிவமாகச் செய்யப்பட்ட பீடம். இது வடமொழியில் கூர்மாஸநம் எனப்படும். இது வைதிக ஆசநங்களில் ஒன்று. முந்நூல் என்பது யஜ்ஞோபவீதம். வடமும், வடத்திற் புரியும், புரியில் நூலிழையும், தனித்தனி மூன்றாயிருத்தலால் இப்பெயர். முக்கோல் என்பது அரசு, புரசு, மூங்கில் என்னும் மூன்றுவகைக் கோல்களையும் ஒன்றாக முறுக்கிச் சேர்த்த திரிதண்டம்.

(4) தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தவர். தமக்குரிய வொழுக்கமாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரியவொழுக்கம்.

(5) யான், எனது என்னும் இருவகைப்பற்றினையும் விட்டவர்.

(6) பிறப்பு, வீடு என்னும் இரண்டனது துன்ப வின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அப்பிறப்பை நீக்குவதற்கு இப்பிறப்பின் கண் துறவறத்தைக் கொண்டவர்.

(7) சப்தாதி விடயங்களிற் செல்லுகின்ற ஐந்தாசைகளையும் அடக்கினவன்.

(8) பயன் நிறைந்த சொல்லையுடைய முனிவர். "நிறைமொழிமாந்தராணையிற் கிளந்த, மறைமொழிதானே மந்திரமென்ப" என்பது தொல்காப்பியம். நிறைமொழி யென்பது அருளிற்கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப்பயன்களைப் பயந்தே விடும் மொழி. அருளிற்கூறல் அநுக்கிரகமொழி. வெகுண்டு கூறல் சாபமொழி.

(9) துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடியின் கண் ஏறிநின்ற முனிவர்,

(10) அழகிய தட்பத்தையுடைய துறவறத்தினின்றவர்.

இவ்வதிகாரத்தின் இறுதிக்குறள் வருமாறு :—

" அந்தணரென்போரற வோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்."

இதற்குப் பரமவைணவராகியபரிமேலழகர், "எல்லாவுயிர் கண் மேலுஞ் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான், அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றவர்" என உரைவகுத்துள்ளார். இங்கு கூறப்படும் அந்தணரே முக்கோற்பகவர்.

கவிச்சக்ரவர்த்தியாகிய கம்ப நாட்டாழ்வார் அந்தணரின் சிறப்பை அழகாக எடுத்துரைக்கின்றார். அப்பாக்கள் வருமாறு:—

(11) "கரியமாலினுங் கண்ணுதலானினு
முரிய தாமரை மேலுறைவானினும்
விரியும் பூதமொரைந்தினு மெய்யினும்
பெரியரந்தணர் பேணுதியுள்ளத்தால்."

(12) " அந்தணாளர் முனியவு மாங்கவர்
சிந்தையாலருள் செய்யவுந்தேவரி
னொந்துளாரையு நொய்துயர்ந்தாரையு
மைந்த வெண்ண வரம்புமுண்டாங்கலோ."

சித், அசித், ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களே உள்ளனவா மென்பதைப் புலப்படுத்துவதற்கு முற்றத்துறந்தார் முக்கோலைத் தரிக்கின்றன ரென்பது ஸம்பிரதாயம் அறிந்தவர் முடிபு. பகவர் என்ற பதம் "மேவித் தொழும அடியாரும் பகவரும் மிக்க துலகே" என்ற திருவாய்மொழி 5-2-9ன் ஈற்றடியில் வந்துளது. இதற்கு ஆறுயிரப்படியில் 'பரம புருஷ குண சேஷ்டிதாநுபவைக போகரான திவ்ய ஜநங்கள்' என்றும்; ஒன்பதினாயிரப்படியில் 'பகவத்பரிசர்யைகபோகத்துக்கு க்ஷமரன்றிக்கே தத்குணைகதாரகரான வைஷ்ணவர்கள்' என்றும், பன்னீராயிரப் படியில் 'அவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதி குணாநுஸந்தாநவித்தரான

---

(11) அந்தணர், கருநிறத்தையுடைய திருமாலைக் காட்டிலும், நெற்றிக் கண்ணனாகிய பரமசிவனைக் காட்டிலும், இருத்தற்கு உரிய திருமாலினது திருவுந்திக் கமலத்தில் வசிக்கின்ற பிரம தேவனைக் காட்டிலும், விரிகின்ற ஒப்பற்ற பஞ்ச பூதங்களைக் காட்டிலும், சத்தியத்தைக் காட்டிலும், பெருமையை யுடையவர். ஆதலின் அவ்வந்தணரை நன்மனத்தோடு ஆதரிப்பாயாக.

(12) குழந்தாய்! அந்தணர் கோபிக்கவும், மனத்தால் அவர் கருணை புரியவும், தேவர்களுள் வருந்தி யிருப்பவரையும், விரைவாக உயர்வு பெற்றவரையும், கணக்கிட அளவும் இருக்கின்றதோ? இல்லையென்றபடி.

முநிகள்' என்றும்; இருபத்தி நாலாயிரப்படியில், 'அதுக்குக்ஷமரன்றிக்கே குணாநுபவம் பண்ணும் குணநிஷ்ட்டருமாகக்கொண்டு லோகமடங்க ஸம்ருத்தமாயிற்று' என்றும்; ஈட்டில் 'குணாநு ஸந்தாநத்துக்கு அவ்வரு கொன்றுக்கு க்ஷமரன்றிக்கே யிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள்' என்றும் வியாக்கியானம் காணப்படுகின்றது. கிடந்த விடத்தே கிடந்து குணாநுபவம் பண்ணும் ஸ்ரீ பராதாழ்வான் குணநிஷ்டர். பகவர் என்றபடி. அதிகார ஸங்கிரஹத்தில் மறை முடித்தேசிகனார் "நம், பண்ண மருந்தமிழ் வேத மறிந்த பகவர்களே" என்கிறார். காநத்தோடு கூடிய திருவாய் மொழியை அறிந்தவரான நம்முடைய பிரபந்நசிரேஷ்டர்கள் என்பது இதன் பொருள்.

எனவே முக்கோற் பகவர் என்பது வைஷ்ணவஸந்யாசிகள் என்பது பெற்றும்.

மேலும் தலைவனோடு சென்ற தலைவியைச் செவிலித் தாயானவள் பாலைவனத்தின் வழியாகத் தேடிச் செல்கின்றபோது உண்மையை யறிந்து கொள்ள எதிர்ப்பட்ட முக்கோற் பகவரை வினவுவதோர் புலனெறி வழக்குண்டு. அது வருமாறு:—

(13) "எறித்தரு கதிர் தாங்கி யேந்தியகுடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு

---

(13) இதற்கு நச்சினார்க்கினியருரை வருமாறு :—

இஃது உடன் போய தலைவி பின் சென்ற செவிலி இடைச் சுரத்து முக்கோற் பகவரைக் கண்டு இவ்வகைப்பட்டாரை ஆண்டுக்காணீரோவென வினவியாட்கு, அவரைக் கண்டு அஃதறமெனவோ கருதிப் போந்தோம்; நீரும் அவர் திறத்து எவ்வப் படவேண்டாவென எடுத்துக் காட்டி, அவர் தெருட்டியது.

(இதன் பொருள்)எறிதரு * * * போறீர்-எ-து, பெருமா ! அந்தணீர்! உறியிலே தங்கின கமண்டலத்தையும், அரி அயன் அரனென்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோலையும் முறைமை படத்தோளிலே வைத்துஎறித்தலைச் செய்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குகையினாலே எடுக்கப்பட்ட குடைநிழலிலே, வெவ்விய காட்டிடத்தே போதலை இயல்பாகவுடைய ஒழுக்கத்தினையுடையீராதலான் உம்மை வினவுகின்றேன்; இக்காட்டிடத்து என்னுடைய மகளொருத்தியும் வேறொருத்தி மகனொருவனும் பிறரறியாமற் தங்களிலே கூடின தாங்கள் இப்பொழுது பிறர் அறிந்த கூட்டத்தினையுடையாராயினர்; அத்தன்மையார் இருவரைக் காணாதிருந்தீரோ? இக்காட்டிடைக் காணாதிருந்தோம் அல்லேம்; கண்டு அஃதறமென்றே கருதிப் போந்தேம்; ஆண்மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனோடே இவ்வரிய சுரத்தைப் போகக் கருதிப் போந்த மாட்சிமை பட்ட அணியினையுடைய மடப்பத்தையுடையாளுக்குத் தாயார் தன்மையை உடையீர் போலே இருந்தீர்; எ—று.

நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளை நடையந்தணீர்
வெவ்விடைச் செயன் மாலையொழுக்கத்தீரிவ்விடை
யென்மகளொருத்தியும் பிறண்மகனொருவனுந்
தம்முளே புணர்ந் தாமறிபுணர்ச்சிய
ரன்னாரிருவரைக் காணீரோ பெரும
காணேமல்லேங் கண்டனங்கடத்திடை
யாணெழி லண்ணலோடருஞ்சுர முன்னிய
மாணிழை மடவாருயிர் நீர்போறீர் ;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கல்லதை

அரியயனனென்னும் மூவரையும் ஒருவனாக அல்லது வேறாக நினையாத நெஞ்சத்தாலே ஐம்பொறியும் நமக்கு ஏவல் செய்தலை இயல்பாகவுடைய கோட்பாட்டையும் உமக்குரிய ஒழுக்கத்தையுமுடைய அந்தணீர் என்க. குறிப்பு, ஆகுபெயர்.

பெருமா என்றாள் அவர்கள் ஆசிரியனாகிய பெரியோனை. அந்தணர் அவர் மாணாக்கர். அவர்களைப் பெருமா அந்தணீரென விளித்தாள், பெயர்கள் ஒருவனை ஒருவன் ஆற்றுப் படுத்த செய்யுளின்மையில் முன்னிலை சுட்டிய ஒருமைக்கிளவி பன்மையொடு முடிந்ததல்லாமை யுணர்க,

காணீரோ? குறுகி நின்றது. கண்டே மென்னாமற் காணேமல்மேலங் கண்டே மென்றதனால் போகின்றவரை அறிந்து விலக்கல் அறமன்றென்று போக்கேமாகக் கொள்க, போறீரென்றார், தேடிவருவாள் செவிலியென்பது உணர்ந்து.

இது தரவு, பலவுறு * * * கனையளே-எ-து. நறியன பலவுங்கூடும் நறிய சந்தன மரங்கள் மெய்ப்படுப்பார்க்குப் பயன் கொடுப்பதல்லது மலையிடத்தே பிறந்தனவாயினும் அச்சந்தனங்கடாம் அம்மலைக்கு என்ன பயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நும்முடைய மகள் பயன் படும் பருவத்து நுமக்கும் பயன்படாள் ; எ—று.

சீர்கெழு * * * கனையளே— எ—து, தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள் அணிவார்க்குப் பயன் படுவதல்லது கடலிடத்தே பிறந்தனவாயினும் அம்முத்தங்கடாம் அக்கடலுக்கு என்ன பயனைக்கொடுக்கும்? ஆராயுங்காலத்து நும்முடைய மகளும் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்படாள் எ—று.

ஏழ்புணர்* * *கனையாளே எ—து, ஏழுநரம் பாற்கூட்டிய இனிய ஓசைகள் பாடுவோர்க்குப் பயன் கொடுத்தல்லது யாழிடத்தே பிறந்தனவாயினும் அவ்வோசைகடாம் அந்த யாழுக்கு என்ன பயனைக்கொடுக்கும்? ஆராயுங்காலத்து நும்முடைய மகள் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்படாள் ; எ—று.

இவை மூன்றுந்தாழிசை,
எனவாங்கு, அசை;
இது தனிச்சொல்.

இறந்த * * * * மற்றதுவே — எ-து; ஆதலான் மிக்க கற்பினையுடையாளுக்கு வருத்தமுறாதேகொள்ளுமின். இருமுதுகுரவரிலுஞ் சிறந்த கணவனை வழி

மலையுளே பிறப்பினு மலைக்கவைதாமென்செய்யு
நினையுங்காணும் மகனு மக்குமாங்கனையாளே ;
சீர்கெழு வெண்முத்தமணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்காணும் மகனுமக்கு மாங்கனையளே ;
ஏழ் புணரின்னிசை முரல் பவர்க்கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாமென் செய்யுஞ்
சூழுங்காணும் மகனுமக்கு மாங்கனையாளே ;
என வாங்கு,
இறந்த கற்பினாட்கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபாட இச் சென்றன
ளறந்தலை பிரியா வாறு மற்றதுவே. "

நான்காவது ஆச்சிரம மூன்றிய மாதவத்தோர் தாங்கும் வடிவம் ஈதே யாம் என்றதை இராமாயண பாரதங்களில் சில வரலாற்றால் அறியலாம்.

அவை:—

(14) " இளையவனேகலு மிறவு பார்க்கின்ற
வளையெயிற்றிராவணன் வஞ்சமுற்றுவான்

பட்டு அவன் பின்னே போனாள். இம்மையில் இங்ஙனங்கசற்புப் பூண்டு நிகழ்த்தும் இவ்வில்லறமே அறங்களிற்றலையான அறம் ; மறுமையில் இவ்விருவரும் நீங்காமற் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே ; எ-று,

இது சுரிதகம், படான் மின் ஒரு சொல், படர்மினென்பதன் மறையாதலின். அறத்திடத்துநின்று நீங்காத வாறென்று பொருள் கூறிற்றலைப்பிரியாவாறெனப்பகர வொற்றுப்பெறுதல் வேண்டும். " ஐகாரவீறுதிப்பெயர் நிலைமுன்னர்-வேற்றுமை யாயின் வல்லெழுத்துமிகுமே " என்றலின். மற்று வினைமாற்றாய் மறுமையை உணர்த்திற்று ஆறுமென்ற உம்மைச்சிறப்பு.

இதனாற் செவிலிக்குத் தன்மையென்னும் மெய்ப்பாடு பிறந்தது. " நாலே காக முக்கோன்மணையே, யாயுங்காலை யந்தணர்க்குரிய " என்பதனாற் கரகமும் முக்கோலுங் கூறினார்.

இது பதினோரடித்தரவும், மூன்றடித்தாழிசையும் அசைநிலையாகிய தனிச் சொல்லுஞ் சிறுமைக்கெல்லை கூறுமையின் ஆசிரியத்திற்குக் கூறிய மூன்றடிச் சிறுமையும் பெற்ற சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

(14) இலக்குமணன் சென்ற வளவிலே அவன் நீங்கிச் செல்லுதலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிற வளைந்த கோரதந்தங்களையுடைய இராவணன், தான் செய்யக் கருதி வந்த வஞ்சனையைச் செய்து முடிக்கும் பொருட்டு, கட்டமைத்த மூங்கில்

மூளைவரித் தண்டொரு மூன்று முப்பகைத்
தளையரி தவத்தவர் வடிவுந்தாங்கினன்."

(15) "ஊணிலனு மெனவுலர்ந்தமேனியன்
சேணெறி வந்ததோர் வருத்தச்செய்கையன்
பாணியினடத்திடைப் படிக்கின்றானென
வீணையினிசை படவேதம் பாடுவான்."

(16) "பூப்பொதிய விழ்ந்தன நடையன் பூதலந்
தீப்பொதிந்தா மெனமிதிக்குஞ் செய்கையன்
காப்பரு நடுக்குறுங்காலன் கையினன்
மூப்பெனும் பருவமு முனிய முற்றினன்";

(17) "தாமரைக் கண்ணொடேர் தவத்தின் மாலைய
னாமையணிருக்கையன் வளைந்த வாக்கைய
னுமநூன் மார்பினனுகினனரோ
தூமனத்தருந்ததி யிருந்த சூழல்வாய்."

பிராட்டியும் வேடங்கொண்ட 'இவன் முற்றத்துறந்த முனிவனும்' என்று ஸத்கரித்தார்.

தண்டு ஒரு மூன்றையும், காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று உட்பகையாகிய பந்தத்தை யறுத்த தவத்தையுடைய முனிவர்களது சந்யாசி வேஷத்தையும் தரித்தவனாய்;

(15) உண வொழிந்தவன் போல வற்றிய உடம்பையுடையவனும், நெடுந்தூரம் வழி நடந்துவந்ததனாலாகியது போன்றதொரு மிக்க வருத்தத்தின் தோற்றத்லதையுடையவனும், நடனம் நிகழு மிடத்தில் தாளத்தோடு இசைப் பாட்டைப் பொருத்திப் பாடுபவன்போல வீணாகானம் போன்ற இனிய இசை யெழும்படி சாமகானஞ் செய்பவனுமாய்;

(16) மலரின் இதழ் மெல்ல மெல்ல விரிந்தாற் போன்ற மெத்தென்ற நடையையுடையவனும், பூமியில் நெருப்புச் சிதறியிருந்தால் அவ்விடத்துச் செல்லுதல்போல நன்கு பதியாதபடி கால்வைக்குஞ் செய்கையை யுடையவனும், தடுக்க வொண்ணாத நடுக்கம் மிக்க கால்களை யுடையவனும், முதுமை யென்னும் பருவந்தானும் வெறுக்கும்படி மிகமுதிர்ந்தவனுமாய்;

(17) தாமரை மணிகளால் ஆகிய அழகிய தவத்துக்கு உரிய மாலையைத்தரித்தவனும், யாமைமணையையுடன் கொண்டுள்ளவனும், கூனிவளைந்த உடம்பையுடையவனும், பெருமை பொருந்திய முப்புரிநூலைத்தரித்த மார்பையுடையவனுமாய் பரிசுத்தமான மனத்தையுடைய அருந்ததிபோன்ற கற்பினையுடையளான சீதாதேவியிருந்த பர்ணசாலையினிடத்து சமீபித்தான்.

அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்து வருகிறகாலத்தில் துவாரகாபுரியை யடைந்தனன். அவனது கருத்தறிந்த கண்ணன், அவன் திரிதண்ட சந்யாஸி வேடந்தாங்குமாறு செய்வித்து, அவன் கருத்து முற்றும்படி செய்தான்.

"பாகன்ன மொழிக்கனிவாய் முத்தமூரற்பாவை நலம் பெற முக்கோற்பகவனானான்" என்பது இங்கு நினைக்கத்தக்கது.

மேலும், பண்டைச் சங்க நூல்களிலும் ஏனையசந்யாசிகளை விளவுவதாக ஒரு துறையுமின்றி முக்கோற் பகவரை வினவுவதாக மட்டும் துறை காணப்படுவது மிகவும் கவனிக்கத்தக்கது.

பண்டைக்காலமுதல் நன்கு சிறப்பித்துக் கொண்டாடப்பட்டு வரும் முக்கோற்பகவரில் முகுந்தனடி பணியும் யதிகட்கிறைவராய்த்திகழ்ந்தவர் ஏரணி கீர்த்தி இராமாநுச முனியாய பெரும்பூதூர் வந்தவள்ளல்.

(18) " ஐங்கோலுமொருகோலு நீர்க்கோலம் போலழிய
முனிந்தறு சமயம கற்றியெங்கள்
செங்கோலே யுலகனைத்துஞ் செல்லமுக்கோ
றிருக்கையிற் கொளெதிராசன் செயத்தைப்பாடச்
சங்கோலமிடும் பொன்னித் துறையினன்றே
தவழ்ந்தேறி மறுகு தொறுந்தாளமீனு
நங்கோயினம் பெருமாளாடிரூசல்
நக்கன் மூதாதை யாராடிரூசல் "

என்ற அழகிய மணவாளதாசரியற்றிய சீரங்கநாயகரூசற்பா ( )வண அநுஸந்தேயம்.

(19)" எம்பெருமானார் தரிசனமென்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்—அம்புவியோர்

(18) மன்மதனது பஞ்சபாணங்களும் அத்வைத ஸந்யாஸிகட்குரிய ஏகதண்டமும் நீரிலிட்டகோலம் போல அழியும்படி கண்டித்து புறச்சமயங்களாகிய ஷண்மதங்களையும் நிரஸித்து வைஷ்ணவர்களாகிய எங்களது செவ்விய ஆட்சியே அதாவது வைஷ்ணவமதமே உலகமுழுதுஞ்சென்று பரவும்படி திரிதண்டத்தைத்தமது திருக்கையிற்கொண்டுள்ள ராமாநுஜ முனிவரது வெற்றியை ததீயர் எடுத்துப் பாடாநிற்க, சங்குப்பூச்சிகள் ஒலிக்கின்ற காவேரியின் துறையிலிருந்து ஊர்ந்து ஏறிவந்து தெருக்களிலெல்லாம் முத்துக்களைப் பெறுதற்கு இடமான நமது திருவரங்கம் பெரிய கோயிலிலெழுந்தருளியுள்ள நம்பெருமாள்! ஊசல் ஆடீர்; சிவபெருமானுக்குப் பாட்டனாரே ஊசலாடு வீராக.

(19) இந்த விஸ்தாரத்தை எம்பெருமானார் விருத்தி பண்ணிக்கொண்டு போந்த அந்தக்ருத்யத்தை எம்பெருமானாருடைய கிருபைக்கு விஷயமாய் அழகா

இந்தத்தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயலறிகைக்கா."

என்ற பாசுரம் ஸ்ரீ பாஷ்யகாரர் பெருமையை நன்குவலியுறுத்தும்.

தண்பொருநல் வருங்குருகேசனான நம்மாழ்வார் "பொலிக பொலிக பொலிக" என்ற திருவாய் மொழியால் பெரும்பூதூர் முனிவரனது அவதாரத்தை முன்னரே கொண்டாடியதாக அறிஞர் கூறுப. வேதசிரத் தேசிகனார்,

(20)" என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம்
யானடைவே யவர்குருக் கணிரைவணங்கிப்
பின்னருளால்பெரும்பூதூர் வந்த வள்ளல்." என்றும்,

(21)" ஆரண நூல் வழிச்செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர்
வாரணமாயவர் வாதக் கதலிகண்மாய்த்த பிரான்
ஏரணி கீர்த்தி யிராமாநுச முனி." என்றும்

நம்மிராமாநுசரைப்புகழ்தல் காண்க, உடையவர் வளர்த்த நம் ஸம்பிரதாயத்தைத் தூப்புற்கோன் நன்கு பரிபாலித்தார். பின்னர் ஆழ்வார், எம்பெருமானார், வேதாந்த தேசிகர் என்ற மூவருமே ஒருருவாய் வந்தவரெனக் கருதப்படும் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் சிங்கவேள் குன்றத்தானாகிய வேத வெற்பனின் மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ லக்ஷ்மீந்ரு ஸிம்ஹனிடமிருந்தே ஆச்ரம ஸ்வீகாரம் பெற்று அவரையும் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு ஸ்ரீ அஹோபில மடத்தை

யிருக்கிற பூமியிலுள்ளோர் தெரிந்துகொள்ளுகைக்காக ஸ்ரீரங்க நாதன் இந்த ஸித்தாந்தத்துக்கு எம்பெருமானார் தரிசநமென்றே திருநாமம் சாத்தி ஸ்தாபித்தருளினார்.பிரபத்தி மார்க்கத்தை ப்ரவர்த்திப்பித்தருளியும், தத்ரக்ஷார்த்தமாக ஸ்ரீபாஷ்யாதிகளைப்பண்ணியருளியும் அத்தாலே நிரபாயமான இத்தர்சநத்தை எம்பெருமானார் வர்த்திப்பித்ததை ஸர்வரும் அறியும்படி நம்பெருமாள் அவருடைய தர்சநமென்று அபிதாநமாக்கி ஸ்தாபித்தபடி.

(20) என் ஆத்மாவைக்கொடுத்து, ரக்ஷித்த என்னுடைய ஆசார்யனை வணங்கி, பின்பு ஸ்ரீ பெரும் பூதூரில் அவதாரஞ் செய்த உதாரகுண முடைய ஸ்ரீ பாஷ்யகாரர்.

(21) வேதமாகிய சாஸ்திரத்தினுடைய வழியின் செம்மையைக் கெடுத்தவர்களான ஹைதுகர்களுக்கு ஒரு யானையாக அவர்களுடைய வாதங்களாகிய வாழைகளை நாசஞ் செய்த உபகாரனும் உலகத்துக்குத் தகுந்த அலங்காரமுமான கீர்த்தியையுடையவருமான இராமாநுசமுனி.

ஏற்படுத்தி முக்கோற்பகவராய் விளங்கினர். சிங்கப்பிரான் பெருமையும் ஸ்ரீ அஹோபிலமடத்தின் சீர்மையும் ஒப்புயர்வற்றன.

(22) " நகைதிறந்திலங்கப் பொங்கி நன்று நன்றென்ன நக்கு
விசை பிறந்துருமு வீழ்ந்ததென்னவோர் தூணின்வென்றி
இசை திறந்த மர்ந்தகையாலெற்றினனெற்றலோடும்
திசை திறந்தண்டங்கீரிச் சிரித்தது செங்கட்சீயம். "

என்ற கம்பநாடார்பாசுரப்படி இன்றும் நரசிங்கர் இளித்த வாய னாய் ஆச்ரிதர்களை அநுக்ரஹிப்பதைக் காணலாம். "அங்கு அப்பொழுதே அவன் வீயத்தோன்றிய சிங்கப்பிரான் பெருமை ஆராயுஞ் சீர்மைத்தே." கம்பர் களித்த கடிமணப் படலத்தில் இருக்கினில் ஆயிரநாமச் சிங்க மணத் தொழில் செய்தது என்பர். இச்சடகோப மஹாதேசிகன் தொடங்கி இவ்வாஸ்தானத்தில் கிரமமாக முக்கோற் பகவராகிய யதிகளே மூர்த்தாபி ஷிக்தராய் எழுந்தருளி அவ்வரிசையில் நாற்பதாவது பட்டத்தில் இவ்வா ஸ்தானத்தை அலங்கரித்து நின்றவர் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீரங்க நாத சடகோப யதீந்திர மஹா தேசிகனவர். இவர் தெய்வமல்லாற் செல்ல வொண்ணாச்சிங்கவேள்குன்றத்துக்கு எழுந்தருளி அங்குள்ள மூர்த்திகளை யெல்லாம் முறையே மங்களாசாஸநம் செய்து வந்த மஹாசார் யர். இவரது அருள் நோக்கும், புன்முறுவலும், காந்தியோடு கூடிய திவ்ய மங்கள விக்ரஹமும், இன்னளியும், இன்சொல்லும், அயலாரையும் ஆட்படுத்தக்கூடியவை. இவரது திருநக்ஷத்திரம் மார்கழி விசாகம். இவரது அவதாரஸ்தலம் பொருநலாற்றின் கரையிலுள்ள கார்குறிச்சி என் னும் அழகிய அக்கிரஹாரம். இத்தலச் சிறப்பு அளவிடற்கரியது. இத் திருப்பதி

(23) " நில மகண்முகமோ திலகமோ கண்ணோ
நிறை நெடுமங்கல நாணோ

---

(22) இரணியன், தன்மனத்திலுள்ள பரிகாசக் கருத்து வெளிப்பட்டு விளங்கும் படி கிளர்ந்து, 'நல்லது, நல்லது,' என்று சொல்லிச் சிரித்துக் கோபித்து, வேகமாக வெளிப்பட்டு, இடி விழுந்தாற்போல எதிரிலுள்ள ஒரு தூணிலே வெற்றியையும் புகழையும் பரவச்செய்து சிறப்புற்றதன் கையினலறைந்தான். அங்ஙனம் அறைந்த வளவிலே, சிவந்த கண்களையுடையதொரு சிங்கமானது தனது ஆரவாரத்தால் திக்குக் களைக் கிழித்து அண்டகோளத்தைப் பீறிக்கொண்டு சிரித்தது.

(23) பூமிதேவியினுடைய முகந்தானே, அந்த முகத்திலணிந்த பொட்டுத் தானே, அந்த முகத்துக்கின்றியமையாத நேத்திரந்தானே, நிறைவாகிய நித்திய மங் கல சூத்திரந்தானே, விளங்குகின்ற ஆபரணங்களை யணிந்த தனங்களின்மேல் புரள் கின்ற முத்து வடந்தானே, உயிருக்கிருப்பிடந்தானே, பெரிய பிராட்டிக்கு இனிதா

இலகு பூண் முலைமேலாரமோ வுயிரி
ளிருக்கையோ திருமகட்கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன்
மணிகள் வைத்த பொற்பெட்டியோ வானோர்
உலகின் மேலுலகோ வூழியினிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம்."

(24) "தேனார் கமலத்திருமகணுதன் றிகழ்ந்துறையும்
வானாடு கந்தவர் வையத்திருப்பிடம் வன்றருமக்
கானாரிமயமும் கங்கையும் காவிரியுங்கடலும்
நானா நகரமு நாகமுங்கூடிய நன்னிலமே."

என்றதற் கிணங்க பாகவதர்கள் நித்யவாசஞ் செய்கிற திவ்ய ஸ்தலம் இது என்றால் அது சற்றேனும் மிகைபடக் கூறியதாகாது. இந்த ஸ்ரீ அழகிய சிங்கருடன் பால்யந் தொடங்கி மஹா விச்வாசத்துடனிருந்து வரும்மஹான் இதே க்ஷேத்திரத்தில் பின்னர் அதே மார்கழித்திங்கள் பூரட்டாதி நக்ஷத் திரத்தில் திருவவதரித்தார். இவரது பூர்வாச்ரமத் திருநாமம் ஸ்ரீகோபால ராமபத்ராசார்ய ஸ்வாமி. இங்ஙனம் இரண்டு சீரிய அவதாரத்திருநாமங்கள் அமைவது ஒரு விசேஷ ஏற்றமே. "புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக் கிள்ளிக்களைந்தானை" என்று ஸ்ரீ ஆண்டாளும்; "முன் ஓர் தூது" என்று திருமங்கை மன்னனும்; "உத்தமவர்த்தல" என்று தூப்புற் புனிதனும் சேர்த்து அநுபவித்தல் காண்க. இந்த ஸ்வாமி அவதரித்த பொழுது,

(25) "திங்களு ஞாயிறுந் தீங்குறு விளங்கத்
தங்காநாண் மீன் தகைமையினடக்கும்

கிய தாமரைப் புட்பந்தானோ, ஆச்சர்யகுண சேஷ்டிதங்களுடைய திருமாலின் மார்பில் பிரகாசிக்கிற சிறந்த கௌஸ்துப ரத்நங்கள் வைக்கப்பட்டிருக்கிற பொன்னாற் செய்யப்பட்ட பெட்டிதானோ, பிரமன் முதலிய தேவருலகிற்கு மேற்பட்டிருக்கிற ஸ்ரீ வைகுண்ட லோகந்தானோ, யுகாந்த காலத்தில் நாமங்களெல்லாம் சென்றொடுங் குமிடமாகிய ஸ்ரீமந் நாராயணனது திருவயிறுதானோ, இவற்றுள் இதுயாதென்று துணிந்து சொல்வோம்.

(24) தேன் நிறைந்த தாமரைப்பூவில் வாஸம் செய்கிற பிராட்டியின் கணவனை எம்பெருமான் விளங்கிவஸிக்கிற வைகுந்தமாகியதேசத்திலிருப்பதை ஆசைப்படுகிறவர்கள், இந்த பூமியிலிருக்கிற இடமானது நல்ல தபஸ்ஸுகள் செய்யத் தகுந்த காடுகள் நிறைந்த இமயமலையும், கங்கையும், காவிரியும், ஸமுத்திரத்திலிருக் கிறச்வேதத்வீபம் என்கிற தீவும் அயோத்யை முதலான பலவிதமான நகரங்களும் வைகுந்தமும் சேர்ந்த நல்லஇடம்.

(25) தீங்குறு-விரோதமின்றி ; நாள்மீன்—நக்ஷத்திரம் ; வளி—காற்று ; வலம்—வலமாக; கொட்கும்—சுழலும்; மாதிரம்—திக்கு; நளி—செறிவு ; இரு—பெரிய ;

வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்
ஊனுடையுயிர்களுறு துயர்காணு
வளிவலங்கொட்கு மாதிரம் வளம்படும்
களியிரு முந்நீர் நலம் பல தரூஉம்
கறவை கன்றார்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா
விலங்கு மக்களும் வெரூ உப்பகை நீங்கும்
கலங்கஞர் நரகரும் பேயுங்கை விடும்
கூனுங் குருடு மூமுஞ் செவிடு
மாவு மருளு மன்னுயிர் பெறாஅ."

என்னலாம்படி இருக்கும்.

இம் மஹாதேசிகன் தற்போது இம்மடம் நாற்பத்தொன்றாவது பட்டத்தில் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் என்ற திருநாமத்தோடு மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிறார். இவர் முகுந்தனடி முகம லர்த்தும் முக்கோற்பகவர். இவரது வைபவத்தைச் சற்று விளக்குவாம்.

நல்லாசிரியரி லக்கணத்தை பவணந்தி முனிவர்

(26) "குலனரு டெய்வங்கொள்கை மேன்மை
கலை பயிதெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர் நிகர் மாட்சியும்
உலகியலறிவோடுயர் குணமிணையவும்
அமைபவனூலுரையாசிரியன்னே."

என்பர். இச்சூத்திரத்திற்கு இலக்காய் நிற்பவர் இவ்வழகியசிங்கர் என்பதில் எள்ளளவும் ஐயமின்று. தட்டை வாதூல கோத்திரத்தில் ஏழ்படிகால் தொடங்கி வந்து வழி வழியாட் செய்கின்ற வமிசத்தில் ஜநித்தவர்;

...ந்நீர்—சமுத்திரம்; நலம்—வளம்; கறவை—பால்தரும் பசு;
...செய்து; கலம்—பாத்திரம்; துய்த்து—அநுபவித்து; உறைபதி—வசிக்கும் இடம்;
வெரூஉ—அஞ்சுதற்குக்காரணமான; அஞர்—துன்பம்; ஊமம்—ஊமை; மா—
...; மருள்—மயக்கம்.

(26) உயர்குடிப் பிறப்புஞ் சீவகாருண்ணியமுந் தெய்வவழி பாடுமாகிய இவற்றால் எய்திய மேன்மையும், பலநூல்களில் பழகிய தோற்றமும், நூற்பொருளை சிஷ்யர்கள் எளிதின் உணரும்படி தெடுத்துச் சொல்லும் வன்மையும் நிலத்தையும், மலையையுந் துலாக்கோலையும், பூவையுமொத்த குணங்களும், உலக நடையை அறியுமறிவும், உயர்வாகிய குணங்கள் இவைபோல்வன பிறவும் நிறையப் பெற்றவனே நூல் கற்பிக்கும் ஆசிரியனுவான்.

செல்வத்துட் செல்வம் அருட்செல்வ மாதலானும், பலவழியால் ஆராய்ந்து பார்த்தாலும், ஒருவனுக்குத் துணையாக நிற்பது அருளேயாதலானும், இருள் சேர்ந்த இன்னா உலகம்புகல் அருள் நிறைந்த மனமுடையார்க்கு இன்மையாலும், மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு, தன்னுயிர் அஞ்சுதற்குக் காரணமான பாவங்கள் உண்டாகாவாகையாலும், உயிர்களிடத்து அருளில்லாதார் முத்தி யுலகத்தின்பத்தை அடையமாட்டாமையாலும், இவர் ஒரு சம்பந்தமும் இல்லாமல் இயல்பாகவே எல்லா உயிர்களிடத்தும் கருணையுடனிருப்பர்; தனது திருநாமத்துக்கேற்ப அரிமுகனே எங்குமுளனென்றும், வடமொழி மறையாலும், தமிழ் வேதத்தாலும் போற்றப்படுபவன் ஆளரியேஎன்றும், அநுபவித்து, அவனது திருவாராதநத்தைத்திருத்தமுறச் செய்வர்; இவர்எம்பெருமானுக்குத் திருவாராதநம் ஸமர்ப்பிப்பதைக் கண்ணுற் காண்பவரே இதனுண்மையை அறியவல்லார்; வைசேஷிகம் முதலான ஸாமாந்ய சாஸ்திரங்களில் விசேஷ பிரக்கியாதியுள்ளவர்; அத்யாத்ம சாஸ்திரங்களில் அநவரதபரிசய முள்ளவர்; எல்லா நூல்களையும் ஐயந்திரிபறக்கற்றுணர்ந்தவர்; பொன் மலர் நாற்ற முடைத்து என்றாற் போல, தான் கசடறக் கற்றவற்றை ஸாமாந்யர்களுக்கும் விசேஷ சாஸ்திரார்த்தங்கள் மனஸ்ஸில் பிரதிஷ்டிதமாம்படி விலக்ஷணமான காலக்ஷேபம் ஸாதிக்கிற சக்தியுமுடையவர்; அளவு செய்யப்படாத தன் கல்வியினளவும், அளவு செய்யப்படாத பலவகை நூற்பொருளும், எப்படிப்பட்ட புலமை யுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவினிலையும் நெடுந் தூரத்திலுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சியும், நிரபேக்ஷமாக தன்னை ஆச்ரயித்தவருக்கு வித்யாதாநம் செய்யும் கொடையும், ஐயந்திர் விறைவப்பட்ட சொற் பொருளினியல்பைக் காட்டலும், பண்டிதர்கள் மாறுபட்டதாயின் உண்மை பெறத்தான் அவர்களிடையே நடுவாக நிற்றலும், கண்டோர் யாவருங்களித்து மேலாகத் தன்னை வைத்துக் கொள்ள மெல்லிய குணமுடையராயிருத்தலும், எக்காலத்தும் முகமலர்ச்சியுடனிருத்தலும் இம் மஹானிடம் விசேஷமாக விளங்கும் குணங்கள். தன்னை அண்டினவர்களின் வாஸ்தவமான மனோ பாவத்தை நன்கு அறியும் ஆற்றலுள்ளவர்; இவரது மதிப்பு எப்பொழுதும் மாறியதில்லை. மேலும் இவரது மனத்தூய்மை உவமையற்றதே. அமலமாயிருக்கும் அப்பொழுது பிறந்த குழந்தையின் மனசை சற்றே ஒப்பிடலாம். அகந்தூய்மை வாய்மை யாற்காணப்படும் என்பதற்கிணங்க எஞ்ஞான்றும் மெய்யே பேசும் மெய்யறிவாளர்; சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு என்பதை இவ்வுத்தமரிடம் நன்கு காணலாம்; உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவதென்பதை இவரிடம் அறவே காண இயலாது; நேருக்கு நேராக தனது திருவுள்ளத்தை அப்படியே காட்டும் விமலர்; இதனை அநேக சந்தர்ப்பங்களில் நன்கு அநுபவித்துளோம். இவரது வெகுளி அரைக் கணங்கூட நின்றதில்லை. இன்பத்தில், இறைஞ்சுத

வில், இசையும் பேற்றில், இகழாத பல்லுறவில், இராகம் மாற்றில், தன் பற்றில், வினை விலக்கில், தகவோக்கத்தில், தத்துவத்தை உணர்த்துதலில், தன்மையாக்கில், அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு துன்பு அற்றார் தூய மதுரகவி. இங்குக் கூறிய பத்து விஷயங்களால் ஈடுபடுத்தக் கூடியவர் இவ்வழகிய சிங்கர். இவரே நமக்குஇன்பமாய் இருப்பர்; அந்த ஆநந்தாநுபவத்தை அடைவதற்கு இவரே உபாயம்; இவரே நம் போலியர்கட்குப் புருஷார்த்தம்; இவரே எமக்கு எல்லாவித உறவினர்; இவரே நமக்குள்ள விஷயங்களின் ஆசையைப் போக்குபவர்; இவரே நம்மைத்தன்னிடம் வந்து சேரும்படி செய்பவர்; இவரே நம்முடைய புண்ய பாப கர்மங்களைப்போக்குபவர்; இவரது கருணைக்கு அளவேயில்லை; இவரே நமக்கு தானறிந்த சாஸ்திரங்களாலே அறியவேண்டிய விஷயங்களை அறிவிக்கிறார்; இவரே நம்மைப் போன்ற ஜீவாத்மாக்கள் அடையவேண்டிய தன்மையை அடையும்படி செய்கிறார். மேலும் இவ்வாசார்யரத்நம் நம்மாழ்வார் முதலான ஸதாசார்யர்களுடைய உபதேச பரம்பரையிலே நிஷ்டையுடையவர்; குயுக்திகளால் அசஞ்சலமான வித்யாவிஷயகஜ்ஞாநமுடையவர்; ஸ்ரீமத் பாஷ்ய ப்ரகாசித ஸ்ரீநிவாஸரூப ப்ரஹ்ம விஷயகமான நிரதிசய பக்தி யுக்தர்; ஸத்வகுண நிஷ்டர்; பூதஹிதமான ஸத்யவாக்யயுக்தர்; ஸாதுக்களுடைய வ்ருத்தியோடே சோபிதர்; தான்செய்கிற கைங்கரியங்களிலே டம்பாஸூயாதி ரஹிதர்; சாஸ்த்ர நிஷித்தசப்தாதி விஷயங்களிலே இந்திரியங்களை நிவ்ருத்திப்பித்தவர்; ஆச்ரிதர்களிடத்திலே அவிசால்யாநுக்ரஹ யுக்தர்; ஆச்ரிதர்களுடைய ஸம்ஸார நிவர்த்த நேச்சு; சிஷ்யனுக்கு உத்தராகம் ஸம்பவித்தால் அதற்குப் பரிஹாரம் பண்ணிவைக்கும் இயல்பினர்; தனக்கும் சிஷ்யனுக்கும் நிரபாய வ்ருத்தியிலே ஜாகரூகர்; ஆஹார நியமத்தில் இவ்வாசார்ய சிகாமணிபோல் உறுதியாய் நிற்பவர் இல்லை என்னலாம். அருந்தியது அற்றது போற்றி உணின் யாக்கைக்கு மருந்தென வேண்டாவாம் என்பதன் உண்மையை அநுஷ்டிப்பவர்; மிகவும் ஸாத்விகமாய் உள்ளவற்றையே அங்கீகரிப்பர்; வ்ரத தினங்களிலெல்லாம் உபவாஸந்தான். தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம் வெங்குறை தீர்க்கிற்கும் விழுமியோர் இவ்வுத்தமர். நேரில் அநுபவித்த விஷயங்களில் சிலவற்றை ஈண்டு வரைகின்றேன். துவரிமானில் இவ்வழகிய சிங்கரெழுந்தருளியிருந்த சமயம் ஒரு ஏகாதசி தினத்தன்று எதிர் பார்த்ததற்கு மேலாக கோஷ்டி சேர்ந்து விட்டது. ஸந்நிதியில் அளிக்கும் உப்புமாவும் பாசிப் பயிற்றுக் கஞ்சியும் அதிமதுரமாயிருக்கும். வேண்டிய மட்டும் கொடுத்தார்கள். ஜனத்திரள் ஜாஸ்தியானபடியால் சமாளிக்க முடியவில்லை. இதை யறிந்த ஸ்ரீ அழகியசிங்கர் அவ்விடத்துக்கு உடனே எழுந்தருளி எல்லாரும் அமரும்படி செய்து, போதுமானவரை உபரியாகப் போடச் செய்து அனைவருக்கும் வேண்டிய அளவு கிடைக்குமாறு அநுக்

ரஹித்தார். அச்சமயம் மதுரைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அடியேனும் எனது சகாக்களும் இருந்தவிடத்திலிருந்தபடியே வேண்டுமளவு பெற்று நகரத்துக்குச் சென்றும் அதன் சேஷத்தைத் தக்கோர்க்களித்துகந்தோம். அதேசமயம் நாற்பதாவது பட்டத்தில் எழுந்தருளி யிருந்த கார்குறிச்சி ஸ்ரீ அழகியசிங்கரது ஆராதன கைங்கர்யம் வெகு சிறப்பாக நடந்தது. கடைசி தினத்தில் அப்போது அதிபால்யமாய் பிரஹ்மசாரியாக யிருந்த நிலையிலும் எல்லோருடன் ஒக்க சமதக்ஷிணையுங் கிடைத்தது. பின்னர் அடியேன் மாதுலர் ஸ்ரீகிராமமான வில்லூரில் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியிருந்த சமயம் அங்குப் போகும் பாக்கியம் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்தில் அடியேனுடைய சிறிய பாட்டி ஆசாரியன் திருவடிகளை யடைந்தாள். அப்போது அவளுக்கு ஒரே ஸத்புத்ரர். அவர் அச்சமயம் அங்கு இல்லை. அவர் நல்ல ஜ்ஞாநவான், அநுஷ்டாநபரர், ஸமப்ரதாயாபி விருத்தியில் விசேஷ ஊக்கம் உள்ளவர். அவரது குணங்களைக் கேள்வி யுற்றிருந்த ஸ்ரீ அழகிய சிங்கர் அவர் வந்தே தான் உத்தரக்ரியைகள் நடக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்ற அதனால் ஸ்ரீ ஸந்நிதி காரியங்கள் சற்றே தடைப் பட்டாலும் அவர் வந்த பின்னரே சகலமும் நடந்தது. அவர் அந்நிய ஸம்பிரதாயஸ்தராயிருந்தும் ஸ்ரீ அழகிய சிங்கர் அநுக்ரஹத்துக்குப் பூர்ண பாத்ரராயினர். அந்த அக்ரஹாரத்தில் நூறாண்டுகள் நிறைந்த ஒரு ஸந்நிதி சிஷ்யர் அச்சமயம் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்தால் அச்சந்நிதியில் அவருக்கு மாத்திரம் ஆஸநம் கொடுக்கப்பட்டிருந்ததைக் கண்டு அனைவரும் மிகக் கொண்டாடினர். மானாமதுரையில் அடியேனுடைய சமீப பந்துவின் பிரார்த்தனையின் பேரில் ஸ்ரீ அழகிய சிங்கர் ஒரு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் அங்கு தங்க இணங்க அப்போது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேபம் நடந்தது. அக்காலத்து அதற்கு வெகு தூரத்திலில்லாத இராமநாத சமஸ்தானத்தைச் சேர்ந்த அபிராமத்தில் லௌகிகத்திலமர்ந்திருந்த அடியேனுடைய பிதா அங்குச் சென்று விசேஷமாக அநுபவித்து அவாளுள்ள வரை ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸௌலப்ய வாத்ஸல்யாதி குணங்களை அடிக்கடி புகழ்ந்து கொண்டிருந்தார். இராமநாத புரத்துக்கு அதிகாலையில் ஸ்ரீ அழகிய சிங்கர் சஞ்சாரத்தில் எழுந்தருளினர். அங்குள்ள ஸ்ரீ கோதண்டராமன் ஸந்நிதியில் ஸ்ரீ அழகிய சிங்கரும் எதிர்த்த ஒரு சத்திரத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனும் எழுந்தருளியிருந்தனர். ஸ்ரீ அழகிய சிங்கரை தண்டன் ஸமர்ப்பிக்கும் பாக்கியம் அச்சமயம் நேரிட்டது, கோல் விழுக் காட்டுக் கணக்கிலே இது கிடைத்தது. ஒரு பந்துவகத்தில் கல்யாணத்துக்காக அங்குப் போக நம் ஆசார்யரின் அநுக்ரஹம் பெருங்காலமும் ஒன்றுபட்டது. ஸ்ரீ அழகிய சிங்கரின் அதி சமீபத்தில் நிற்கும் புண்ணியமும் கிடைத்தது. அச்சமயம் ஸ்ரீ ராமாயணத்தில் சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சீதா பிராட்டியாருக்கும் பிரணயகலஹம் வர அது கை-

மோதிரத்தால் எங்ஙனம் தீர்ந்து எப்போதும் போல் அந்நியோந்நியராய் விளங்கினர் என்பதை அதி அற்புதமாகவும், லளிதமாகவும் உபந்ய ஸித்து அதன் ஸ்வாபதேசத்தையும் விளக்கியருளினர். பச்சை மரத்தில் ஆணி தைத்தாற்போல அடியேன் மனத்தில் அவ்விஷயம் அக்கணமே அழுத்தமாய்ப் பதிந்து விட்டது. சில வருடங்களுக்கு முன் அடியேனும் தாயாரும், தம்பியும், ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதிக்குச் சற்றே அகாலத்திற் போகியும் ஸ்ரீ அழகிய சிங்கரது அநுக்ரஹத்தால் தேவாம்ருதத்தையும் தோற்கடிக்கத் தக்க சக்கரைப் பொங்கல் கிடைக்கப் பெற்று அடியோங் கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இன்னமும் அடியேன் அன்னை அடிக்கடி பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கிறாள். ஏகாதசி உபவாஸ மும் துவாதசி பாரணையும் கிரமப்படி நடைபெறுவதையும் அவற்றிற்கு ஸ்ரீ அழகியசிங்கர் எடுத்துக்கொள்ளும் கவலை, பிரயாசை இவ்வளவு என்று குறிக்க முடியாது. இவற்றை இரண்டு மூன்று தபா நேரில் அநுபவித் துள்ளேன். மற்றோர் முக்கிய விஷயம் இதில் வெளியிடாமலிருப்பதற் கில்லை. சென்ற ஆண்டுக்கு முன் வருடம் சித்திரை மாதத்தில் மதுரைக் குப் போய் வரவேண்டிய அவசியகார்யத்தில் அடியேன் தாயாரையும் அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கத்திலிறங்கி அதிகாலையில் தசாவதாரன் ஸந்நி திக்குச் சென்றேன். அன்று துவாதசி. அம்மாவுக்கு அச்சமயம் மிகவும் அசௌக்யமாயிருந்தபடியால் பரந்யாசம் செய்துகொள்ள மிகவும் த்வரையாயிருந்தாள். அவள் ஸாது. வெளுத்ததெல்லாம் பாலென்று எண்ணுபவள். பிறருக்குழைப்பதே தனக்கு ஸ்வரூபம் என்ற நோக்க முடையவள். ஸாது ஸம்ரக்ஷணம் பகவானதல்லவா? ஸ்ரீ அழகிய சிங்க ரிடம் விஞ்ஞாபனம் செய்தேன். 'ஏகாதசி உபவாசம். ச்ரமமாக யிருக் கிறது. அடுத்த நாளாகட்டும்' என்று நியமனம்; அடியேன் இதர நிர்ப் பந்தங்களால் அங்கு தங்க சௌகரியப்படவில்லை. மறுபடியும் பிரார்த்தித் தேன். அங்குள்ளாரெல்லாரும் அன்று நடக்காதென்றே நிச்சயப்படுத்தி விட்டார்கள். கோஷ்டி ஆனது தான் தாமதம். பெருமாள் ஸமீபத்தில் வரும்படி ஸ்ரீ அழகியசிங்கர் நியமனம். தாயார் உள்ளே சென்று நியமனத் தின் பேரில் பெருமாளை ஸேவித்துக் கொண்டிருந்தாள். அவளால் முடிய வில்லை. ஸ்ரீ அழகியசிங்கர் அதைக் கடாக்ஷித்து 'பாவம் வெள்ளந்தை. முடிந்தமட்டில் ஸேவித்துவிட்டு நின்றுகொண்டிருக்கலாம்' என்று நியமிக்க அப்பால் ஆசார்யாநுக்ரஹம் பெற்றதன் பயனாக அன்றுமுதல் இன்ற ளவும் அவள் அரோகதிடகாத்ரையாக இருந்து வருகிறாள். பிரதிதினமும் அநேகாவர்த்தி இஃது ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹ ப்ரபாவம் என்று செவ்வையாகப் போற்றுவதுடன், இதரரையும் சீக்ரம்போய் பரசமர்ப் பணம் செய்துவருமாறு கேட்டுக்கொண்டிருக்கிறாள். அடியேன் சமீபத்தில் அங்கு விடைகொண்டிருந்த பொழுது ஸ்ரீ அழகிய சிங்கர் காண்பித்த அருளுக்கெல்லையேயில்லை. சகல உறவும் அவரே என்றிருப்பதே உசிதம்.

தயரதன் ஒரு பகல், அயனையே நிகர் தூயமாமுனி வரரான வசிஷ்டரை வணங்கி, 'தொல்குலத்தாயரும் தந்தையும் தவமு மன்பினுல் மேயவான் கடவுளும் பிறவும் வேறு நீ' என்று விண்ணப்பஞ் செய்துகொண்டதாகக் கூறுகின்றார். இவ்வாசகத்தை அப்படியே யாம் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் ஸமர்ப்பித்து உய்வோமாக.

'நன்றாக குருவாழ்க குருவே துணை' என்பது பிராசீநத்தமிழர் வாக்கு. ஆசார்யாநுக்ரஹமே நமக்கு வேண்டுவது. 'மருளற்றதேசிகர் வானுகப்பால் இந்த வையமெல்லாம், இருளற்றிறை யவனிணையடி பூண்டிடவெண்ணுத லால், தெருளுற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச் சிறந்தவர்பால், அருளுற்ற சிந்தையினலழியா விளக்கேற்றினரே.' ஸ்ரீ அழகிய சிங்கர் இன்னமொருநூற்றாண்டிவணிருக்கு மாறு இன்னமுதத் திருமகளார் இறைஞ்சுவோம். பொங்கும் மங்களம் எங்குந்தங்குக.

(27)"ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்கு புகழ்ச்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே."

(2)

குரு வணக்கம்

மங்கல மாமகள் மார் வல்லங்க
கொங்கு நறுங்குழலார்கள் கொண்டாட
பொங்கிள வாடை அரையில் பொலிய
சிங்கமுகக் குரு சீர்த்தி கண்டோமே. (1)

அடித்தலம் கலுழன் மேலழுத்தும் ஆண்மையன்
படித்தலத் திறைஞ்சினர் பாவம் போக்கு வன்
முடித்தலம் முடிகவித்திலங்கு முண்மையன்
அடித்தலம் அடைபவர் அமரராவரே. (2)

(27) மனதில் நன்றாய்ப் பிரகாசிக்கிற ஞானமாகிய விளக்கை அஜ்ஞானமெல்லாவற்றையும் போக்கினவருக்கு ஒரு பதில் உபகாரம் ஆச்சரியமான வேலைகளைச் செய்யும் எம்பெருமானும் காணமுடியாதவன். ஸ்தோத்திரம் செய்து ஸந்தோஷப்படுவதும், புத்தியில் நினைப்பதும், வளர்கின்ற நல்ல குணங்களைச் சொல்லி எல்லாருக்குந் தெரியும்படி சொல்லுவதும் முன்னாலே அவரிடமிருந்து பெற்ற உபகாரத்துக்கு ஸ்வல்பமல்லவோ.

திரு நரசிங்கனடி தொழு தெழு மனத்தன்
திருப்பாடிய திருக் கீதைகள் தெரிக்குந் திருநாவன்
திரு நரசிங்கனுயர் விளக்குந்திறத்தன்
திருப்பாரத ராமாயண முடிக்கும் திருவன்னன்
திருநரசிங்க சடகோப நாமத்தன்
திருத்திப் பணி கொண்டே நமையளிக்குத் திருவன்
திருநரசிங்கனடி சீர் பரவுந் தீர்த்தன்
திருத்த முறவெமை யாளும் சீர்மை சில சொல்வாம். (3)

தூய்மை யனிருங்கலை துணிந்த கேள்வியன்
வாய்மையன் மறுவிலன் மதியின் கூர்மையன்
ஆய்மையின் மந்திரத்தறிஞனுமெனச்
சேய்மையினேக்குறு செய்யர் காண்பரால் (4)

ஓங்கு பெரும்பூதூரில் வந்துதித்து
உத்தமனுய் உலகனைத்தும் உய்யக்கொண்ட
பாங்குள்ள யதிராசர் பாடியத்தை
பாங்கு மிகும் சீடர் பலர் பரிந்து கேட்ப
தாங்கரிய தவராசன் மகிமையாலே
தாரணியோர் தழைத்தோங்கும் தண்மையாலே
தூங்கு திரையாறு தவழ்சோலை தன்னில்
தூங்கு நரசிங்கனடி தெரிப்பார் செல்வர். (5)

ஆயிரந்தாள்களுள்ளான் ஆயிரம் முடிகளுள்ளான்
ஆயிரந்தோள்களுள்ளான் ஆயிரம் பேருமுள்ளான்
ஆயிரநாமச் சிங்கன் அருள் தனைநனி அடைந்தே
ஆயிரம் பிறைகள் கண்ட ஆரிய வழகர் வாழ்க. (6)

வன்பெருவானக முய்ய அமரருய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய
துன்பமிகு துயரகல அயர் வொன்றில்லாச்
சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதான் ஆளரியாய் அன்றுதோன்றி
அணிய ரங்கன் சோலை தனில் அமர்ந்துளானை
இன்ப மிகு பெருங்குழுவு இசைந்தே ஏற்ற
இன்பமுடன் இன்றன்றோ களிக்கும் நன்னாள். (7)

மாத்திகிரி நரசிங்கரடி பணிவோன் வாழியே
மத்திமமாம் பதப் பொருளை வாழ்விப்போன் வாழியே
முத்திரையும் செங்கோலும் முடி பெறுவான் வாழியே
முத்தி நெறி மறைத்த மிழை மொழிந்தருள்வோன் வாழியே

சித்தி தரும் தநுர்ப்பூரட்டாதி வந்தோன் வாழியே
சீபாடிய மீடு முதல் சீர்பெறுவோன் வாழியே
உத்தமமாம் வாதூல முயர வந்தோன் வாழியே
ஊர் திருத்தும் உத்தமனூர் ஊழி தொறும் வாழியே. (8)

நாலிரண்டுமையைந்தும் நமக்குரைத்தான் வாழியே
நாலெட்டினுட் பொருளை நடத்தினுன் வாழியே
மாலரங்க மணவாளர் வளமுரைப் போன் வாழியே
மாலடியார் வாழ்வு பெற மகிழ்ந்தருள்வோன் வாழியே
சீல மிகு நாதமுனி சீருரைப்பான் வாழியே
சீல நரசிங்கனடி சீர் தெரிப்போன் வாழியே
வாலவெய்யோன்தனை வென்ற வடிவழகன் வாழியே
பால பிரஹ்லாதாழ்வான் பண்புடையோன் வாழியே. (9)

சந்த மிகுந்துள செந்தமிழ் சிந்தை கவர்ந்து சிறந்துறு நாள்
கந்த மலர்ப் பொழில் சூழ்குரு காதிபன் கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர் நரசிங்கனடிப் புகழ்வானினுயர்ந்திடு நாள்
அழகுதிகழ்ந்திடுமமலனுதிப் பிரான் அகமுமலர்ந்திடு நாள்
மந்தமதிப்புவி மானிடர் தங்களை வாழ்வினுயர்த்திடுநாள்
மாசறு தேசிகர் சேரெதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்
இந்திரை கேள்வன் இலங்கு முடியுடன் எங்கும் நிறைந்திடு நாள்
இறைவருகந்திடும் மார்கழிப் பூரட்டாதி யெனும் நாளே. (10)

வாழிமறை வாழி மநு நீதி யறம் வாழி
வாழி நரசிங்கரடி வாழிநங்கட் செல்வன்
வாழி இமையோர்களுடன் வாழி இருடியர்தாம்
வாழி இறையவர் தேசு வாழிய யாவும்மே.

(3)

ஆரியவழகர்

குருபாதமே துணை என்பது பண்டைத்தமிழர் கண்டறிந்ததோருண்மை. தேனுர் கமலத்திருமாமகள் கொழுநன் தன்னருளால் தானே குருவாகி மானிடர்க்காய் இந்நிலத்தேதோன்றுகிறுன். குருவின் வாசகங் கொள்பவர் திருவின் கேள்வனை அடைதல் திண்ணமே. நற்குருவை அடைந்தக்கால் வைகுந்தம் புகுவது எளிதினும் எளிதே. உயிர்தந்து அளிப்பவரே உத்தமவாரியர். ஆசாரியன் சிச்சனுருயிரைப் பேணுமவன். தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து இருள் தருமாஞாலத்தே இன்பமுற்று வாழ்தலே இம்பர்கடன். நம்பிறவித்துயர் மாற்றுபவர் ஞானப்பெருந்தகவோர். கூரணி சீர்மதியுடைய குருக்கள் வினைத்திரள் மாற்றியவேதியரே. குருக்கள் நிரை வணங்கி இன்னமுதத்திருமகள் முதலியோரை முன்னிட்டு எம்பெருமான்

திருவடிகளை அடைதலே கற்றதனாலாயபயன். வாலறிவனை ஆதிகுரு. தந்தை நற்றாய் தநயர் பெருஞ்செல்வம் எல்லாம் இவரே. பூமகள் கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய் மகிழும் மாறன் தேமலர்த்தாட்கு ஏய்ந்தினிய பாதுகமாய் விளங்கியவர் ஏரணி சீர்த்தி இராமாநுசமுநி. ஸர்வாசார்ய ஸ்வரூபரான எம்பெருமானாருக்கு, நம்மாழ்வாரை சிரஸ்ஸாயும், நாதமுநிகளை திருமுகமாயும், உய்யக்கொண்டாரை நேத்திரமாயும், மணக்கால் நம்பியை கன்னமாயும், ஆளவந்தாரை மார்பிடமாகவும், பெரிய நம்பியை கழுத்தாயும், திருக்கச்சி நம்பியை திருக்கையாயும், திருக்கோட்டியூர் நம்பியை ஸ்தனமாயும், திருவரங்கப் பெருமாளரை யரையவிருகவும், திருமாலை யாண்டானை முதுகாயும், திருக்கச்சி நம்பியை இடுப்பாயும், எம்பாரை இடையாயும், ஸ்ரீ பட்டரையும், நஞ்சீயரையும் புட்டங்களாகவும் நம்பிள்ளையை தொடையாயும், வடக்குத்திருவீதிப் பிள்ளையை முழங்கால்களாயும், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனை திருவடியாயும், ஸ்ரீ ஆதிவண் சடகோப ஜீயரை ஸ்ரீ பாதுகையாகவும் தியானிப்பது சம்பிரதாயம் என்ப.

எம்பெருமானார் தரிசனத்தை நாடெங்கும் பரவச்செய்து வரும் ஸ்ரீ அஹோபில மடவாரியர்களிற் தற்போது ஆஸ்தானத்தில் மூர்த்தா பிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் அழகு சிங்கர் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ நருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகர். இவரே இப்போது கொண்டாடப்படும் ஆரிய வழகர். இவரிடத்தே ஆசார்ய லக்ஷணங்கள் நிறம் பெற்று விளங்குகின்றன. ஸ்ரீ வைஷ்ணவன் கொக்கைப் போலும், கோழியைப் போலும், உப்பைப் போலும் இருப்பான் என்று ஸ்ரீ பராசர பட்டர் பணிப்பாராம். இதன் விவரத்தைச் சற்று விண்ணப்பிப்பாம். கொக்கானது ஜலபூரிதமான விடங்களில் வதியும், வெண்மை யாயிருக்கும், அல்ப மச்சங்களை லட்சியம் செய்யாது பெரிதான மீன் அகப்பட்டால் விடாது கௌவிக்கொள்ளும், வருஷா காலத்தில் மின்னலுக்கும் இடிக்கும் அஞ்சி மலையின் சந்துகளிற்புக்கும், தன்னிஷ்டமான வஸ்துவைப் பெற அதே கருத்துடனிருக்கும்; ஸ்ரீ வைஷ்ணவனும் புண்ணிய தீர்த்த முள்ள இடங்களில் தான் வசிப்பன், அவன் மனது வெண்மையாய்க் கபடமற்றதாய்ப் பரிசுத்தமாயிருக்கும், க்ஷுத்ர மந்த்ர தேவதாந்தராதிகளை அசட்டை செய்வன், அர்த்த பஞ்சக தத்வஜ்ஞாந பூர்ணாதிகாரிகள். நேருங்கால், அவர்களை விசேடமாக உபசரித்து அவர்கள் அருளிச்செய்யும் இரகஸியங்களை அப்படியே கௌவிக்கொள்வன், பிரதிகூலர்களாலே தனக்கு ஆத்ம நாசம் நேருவதானால் திவ்யதேசங்களில் சென்று வாழ்வன், பகவத் பாகவத ஆசார்யதியானத்தில் ஒரு மனது பட்டிருப்பன். கோழியானது எக்காலத்தும் குப்பையைச் சீத்துச் செத்தைகளை விலக்கித் தனக்குப்போக்யமானவற்றையே யுண்டு ஜீவித்திருக்கும். ஸ்ரீ வைஷ்ணவனும் வேதங்களைக் களைந்து அஸாரத்தைத்தள்ளி, ஸத்யஜ்ஞாந ஆநந்தசாகா சமூகங்களை சதா அநுஸந்தித்துக் கொண்டு வாழ்ந்திருப்பன். உப்பானது

அதிகப்பட்டால் நிந்திக்கப்படும். தன்னை நிந்தை கூறுமிடத்து மறுமாற்றங் கூறுது தன்னை யழிய மாறியேனும் இதரர் பிரயோஜன வடிவமாகும். ஸ்ரீ வைஷ்ணவனும் தன்தோஷத்தை யநுஸந்தித்து லஜ்ஜித்து ஓதுங்க ப்ராப்தனுவான், தன்னைநிந்திப்பவர்களைக் கோபியாது தன்னுடைய தோஷங்களை ஸ்மரிப்பித்ததற்கு மகிழ்ந்து வாழ்வன், தன்னையழியமாறி யேனும் தன் ஸ்வரூபத்தைத் தழைப்பிப்பவனுய் அவர்களுடைய மகிழ்ச்சியே தனக்கு உத்தாரக மென்றிருப்பன். இது போன்ற லக்ஷணங் கள் நிரம்பியுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களிற்றலை சிறந்து விளங்குவர் இக்குரு மாமணி.

இவ்வெதிகட் கிறைவர், வண்டுகள் இசைபாட மணமுள்ள தேனைச் சொரிகின்ற பொலிவாகிய தாமரை மலரில் வாழ்கின்ற திருமகள் விளங்கா நின்ற மலையை நிகர்த்த மார்பை யுடைய திருமாலின் திருவடியைத் தரிக் கின்ற மனத்தை யுடையவர்; தன் உயிர் போல மன் உயிர் புரத்தல் சான்ற வர்க்கு உறுதி என்று என்றும் மன்னிய மறை நூல் மொழிந்திடுமது மிகுதியும் உண்மையே என்று உணர்ந்தவராய் ஜீவர்கள் நெருங்கிய உல கில் இருதிணையவாகிய உயிர்களும் தங்கிய களிப்பு அதிகப்பட நன்மையே புரிவார்; அற்பமும் மனத்தில் தீங்கு செய்வதை நாடிடார்; அடக்கம், பொறுமை, கிருபை, முதலியவற்றை எந்நாளும் விடுதற்கரியதவத்துடன் ஒருங்குற வளர்ப்பர்; தூயர்க்குந்தூயராய்த் திகழ்வர்; படியிலா மறைநூல் முற்று முணர்ந்தவர்; ஆசிரயிப்பவர்களுடைய பக்குவ வகையை மதித்து உணரும் ஆற்றல் படைத்தவர்; கொழுந்து விட்டு எரியும் பசிதழல் அவித்து கோதில் வைராக்கியம் மிக்குற்று செழுதசைவற்றி இளைத்த யாக்கையராய்த் திகழும் சீர்த்தி அந்தணர்; ஔவியம் அவித்த சிந்தை யர்; மூவ்வுலகமும் தம்மிட மதா வசிப்பர்; இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவிக்கும் இயல்பினர்; திருவரங்கத்தினி திரு நீ என்ற ரங்கர் எதிராசர்க் கீந்த வரத்தை யநுஸரித்து திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப் பெற் றுள்ள தீர்த்தர்; மாசில் மனந்தெளி முனிவரினும் மாலுகந்த வாசிரியரே சீரியர் என மகிழும் மாண்பர்; ஆறு ஆசாரியர்களைப் பெற்ற அறு தொழிலாளர்; அந்தமிலாதியம்பகவனை அரிமுகனே காத்தற்குரிய னென்று காட்டும் காட்சியர்; யானெனது என்னுஞ் செறுக்கறுத்து, தன்னை அடைக்கலம் புகுந்தோரை வானோர்க்கு உயர்ந்த உலகம் புகச் செய்யும் பெற்றியர்; பற்றற்றான்பற்றினைப் பற்றி தம்மைச் சரணுக அடைந் தோரைப் புக்கில்லுக்கு அனுப்பும் பூர்ணர்; சிறப்பென்னுஞ் செம் பொரு ளைக் கையிலங்கு நெல்லிக்கனிபோற் காட்ட வல்லவர்; அவாவற்றவராய் அவனியில் நின்று பேரா இயற்கையைத் தம்மைத் தஞ்சமாக அடையும் தரணியோர்க்கு அளிக்கும் தண்மையாளர்; வேண்டுதல் வேண்டாமை இலராய் இலங்கும் யதிபதி; இருள்சேர் இருவினையுஞ்சேரா இறைவர்; பொய்தீர் ஒழுக்க நெறி நிற்கும் புண்ணியர்; அறத்தின் மூர்த்தி; தனக்கு வமையில்லாத தகவுடையார்.

இச் சீரிய குணங்களோடு சிறந்து விளங்கும் இவ்வாரிய சிகாமணி தெள்ளியசிங்கமாகிய தேவைத் தொழுதெழு மனத்தினராய், இதுகாறும் பிறரால் விசேடமாகக் காணப் பெறாத ஆயிரம் பிறைகள் கண்டு, மேன் மேலும் அதி அற்புதமாய் ஆயிர நாமச்சிங்கத்தான் ஆராதநத்தை முற்ற நடத்தும் ஆற்றல் மிகுந்து, ஆசிரயித்தோரை ஆசீர்வதித்துக்கொண்டிருக் கின்றார். இவரது இச்சதாபிஷேக மஹோற்சவத்தைக் கண்டு களிக்கு மாறு எம்போல்வாருக்கும் அநுக்கிரஹித்த திரு நாசிங்கனின் திருவருளை என்னென்றுரைப்பது? இஃது மறுபடியும் நேரக் கூடாததோர் அற்புத சந்தர்ப்பம். ஆளரிக்கு ஆட்செய்துய்யும் குலத்திற் பிறந்துள்ள நங்கள் பாக்கியமே பாக்கியம். இன்ன மொருநூற்றாண்டிரும் என்ற அன்பர் பாடும் பல்லாண்டு இவர் பால் முழு நலம் தருவதாகுக. தீங்கேது மில் லாத் தேசிகன் தன் சிந்தைக்குப் பாங்காக நேரே பரிவுடையோர் ஓங்காரத் தேரின் மேலேறிச் செழுங்கதிரினூடு போய் அந்தாமஞ் சேருவர் என்ற மெய்யுரையை நினைப்போமாக. பொருளும் உயிரும் உடம்பும் புகலும் தெரு ளும் குணமும் செயலும் அருள்புரியும் தன்னாரியன் பொருட்டாச் சங்கற் பம் செய்பவர் நன்னெஞ்சு எந்நாளும் மாலுக்கு இடம். தீதில் சரணாகதி தந்த தன்னிறைவன்தாளே அரண். நம் ஆரிய வழகரின் அருங்குணங் களை அகில உலகும் அறியப் போற்றிப் புகழ்வதே நமக்கு வகுத்த பணி.

திருவுடைமார்பன் திருவயோத்திதனில்
இருக்குமிருப்பை இமையோரிறைஞ்ச
தருமமுடைய குருக்கள் வணங்க
மருவொன்றில்லா மாயன் மகிழ்ந்தே
வையம் வரற்காய் வானின்றெழுந்து
பையச்சென்று பாற்கடல்மன்னி
செய்யாளுடனே மெய்யாய் மல்கி
கலங்காப்பெருநகர் நலங்காண்போரும்
விலங்கல் திண்டோள் வீறுடைக்கோனை
நலமுடன் நண்ணி சலமறவொழிந்து
பலமுடை நாயகன் பண்பினைப்பாட
பார்மகள் தன்னின் பாரம்போக்க
ஆர்கலி உலகம் சீர்மை பெறவே
மாமகள் தன்னொடு மாமகன் மண்டி
மீனோடாமை கேழல் கோளரியாய்
நாளுவுருவம் கொண்டே நம்மைத்
திருத்துந்திறலன் திருப்பணியதனில்
விருப்புறுமடியவர் கருத்துக்கிணங்க
தூணிடைவந்த மாணிடமடங்கல்
சாணினுமுளனென கோணினு முளனென

வானிலுயர்ந்து வானின் வளர்ந்து
வானிடை வானவர் வாழ்த்தொலி மிகவே
செங்கட்சீயம் எங்கட்குரித்தாய்
அங்கண் ஞாலம் அங்கண்ணளிக்க
வந்திங்கே நாம் தந்த
வந்தனை பெற்ற சந்தமொலிப்பாம். (1)

பூவிற்சிறந்த பூந்தாமரையென
தேவிற் சிறந்த திருமால் தானும்
அவனி வந்த அவதாரங்களுள்
தேவர் வியக்கும் தேவதேவனும்
சீரிய சிங்கமாகிய தேவை
ஆரியர் வணங்கும் ஆரிய மணியை
உலகம் போற்றும் அலகில் அப்பனை
நலமுற நிற்கும் நலமுள தவனை
பலரும் பணியும் பலகையோனை
என்று முளத்து ஏற்றிப் பணிய
நலம் பல மல்கி நவின்று
பலரும் புகழும் பண்பும் பெறலாம். (2)

மாதவத்தோரால் மாதவனெனவே
ஓதப்படுமவ் வொள்ளியசிங்கன்
பாத பங்கயமே பதமெனப் பகரும்
நாதனாய் நம்மிடை பூதலம் புகழும்
வேதனாய் விளங்கும் வேதியன்யாரெனில்
கண்ணன் களிக்கும் காரைக் குறிச்சி
மண்ணி லுயர்ந்த தண்ணளியார்கள்
நண்ணி யுறையும் கண்ணன் காவூர்
சிறக் கவந்த சீரியப்பெரியார்
இரக்கத்துடனே துறக்குந்தூயர்
ஓங்குமகோபிலந் தாங்கும்உத்தமர்
நங்கட் கருளை நல்கும் நாயகர்
அழகு திகழும் அழகு சிங்கர்
கழகங் கமழ்த்தும் கண்ணியவழகர்
மாநர அரிமாறன் குருமாகுரு
மாநர அரியின் மாண்பு விளக்கும்
காசில் கொற்றக்காவலர்
மாசில் மனத்தின் தேசு தெரிமோ. (3)

திருநரசிங்க சடகோப யதிராசமாகுரு திருவடிகளே சரணம்.

𑌶𑍍𑌰𑍀[illegible]𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀

[குறிச்சி வித்வான் வேதாந்த ஶிரோமணி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியர்]

[illegible] ।
[illegible] ॥ 1

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ।
[illegible] ॥ 2

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] 𑌯𑌸𑍍𑌯 [illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 3

𑌯𑌥𑌾 [illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 4

𑌶𑍍𑌰𑍀[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 5

[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 6

[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 7

[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 8

𑌶𑍍𑌰𑍀[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 9

[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 10

[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 11

[illegible] 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 [illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 12

[illegible] 𑌯𑌸𑍍𑌯 [illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 13

[illegible] ।
𑌚𑌿𑌰𑌂 𑌸 𑌵𑌿𑌜𑌯𑍀 𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹[illegible] ॥ 14

[illegible] ।
𑌘𑌟𑌿𑌕𑌾𑌦𑍍𑌰𑍌 𑌕𑍃𑌤𑌾𑌵𑌾𑌸𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌵𑌿𑌭𑍁𑌂 𑌭𑌜𑍇 ॥ 15

ஸ்ரீ:

அபிநவதேசிகோதயம்

[ஸ்ரீ. உ. வெ. வித்வான் வெங்கடரங்காசாரியார்]

ஸ்ரீஶாஸ்த்ராஜநஹிதேநா ஜஜ்ஞே விஷ்ணு: ஸநாதந: ।
ஸ்ரீ நாரஸிம்ஹஸம்ஜ்ஞ்யா ஸ்ரீவாஸதேஶிக: ॥

க்ஷ்மாத்ருஜ: க்லுப்தயோகேவஸந்தே ஸா காருண்யாக்ராங்க்ஷிதயோகவ யோஷ்டி ।
விஜ்ஞாநணிஸ்ருஷ்டிதயோகவ பகேஶயதீந்த்ர ஸந்தோஷாஹ்வயம் ப்ரஸந்தே ॥

ஸ்ரிய:பதியான ஸ்ரீ ஹயக்ரீவனே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிக ரூபேண அவதரித்தருளினார். அபிநவ தேசிகனாக விளங்கா நின்றார். இதற்கடி என்னவெனில், அவாப்த ஸமஸ்த காமனான புருஷோத்தமன் 'வைகுண்டே து பரே லோகே' என்றபடி ஸ்ரீ அநந்த கருட விஷ்வக் ஸேநாதிகளால் நிரந்தர பரிசர்யமாண ஸ்வசரண நலிநனாக யிருக்கச் செய்தேயும் ஸஹஜ காருண்யாதிசயத்தால், பர வ்யூஹங்களில் கிட்டு வாரும் காணு வாருமில்லை என்று, ஸ்வசரணயுகள பரிசர்யைக்கு இட்டுப் பிறந்திருந்தும் அதையிழந்து முமுக்ஷுக்களன்றிக்கே பாஹ்யாக்ஷுகளாய் க்ஷுத்ரகர்மாநுபவஹாரா: நீசஸஜ்ஜநயோ ஜீவா: । பாபாசாரா ஶதா: ஸர்வஸஜ்ஜாகாராகா: ॥ என்னும் விதமாய் கிடக்கும் இச்சேதந வர்க்கங்களை தயமாநமநாவாய் கடாக்ஷித்தருளி லிகித மூலமாந ஆஜ்ஞையை உபேக்ஷிக்குமவர்களை தாமே சென்று குறும் பறுக்கும் ராஜாக்களைப் போலே இவர்களை வாரிப் பிடியாகப் பிடித்து வர வேணுமென்று ஸர்வேச்வரன் தானே விசித்ரங்களான விபவாவதாரங்களை எடுத்து, ஸ்ரீமத்ஸ்ய ஹம்ஸ ஹயவதந ராம க்ருஷ்ணாதிரூபேண நாட்டிற் பிறந்து படாதன பட்டு மனிசர்க்காய் என்றபடியே, அவதரித்தருளினான்.

ஓரோருயுகாந்தரங்களிலும் இப்படி பலவிதமாக அர்ஜுனாதிகளுக்கு 'இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம்' என்றபடியே உபதேச ரக்ஷணாதிகளாலே ஸ்வயம் ப்ரயோஜநமாக பரமோபகாரம் செய்தருளினான்.

ஸ்ரீ கீதாசார்யன் அர்ஜுனன் பக்கலில் உபதேசம் நிரர்த்தகமாய் ஊஷரே நிவபேத் பீஜம் என்றபடி அப்போதே, நூநமஶ்ரத்ததாநோஸி துர்மேதா ஹ்யஸி பாண்டவ என்று நிர்விண்ணனாதி அநுகீதோபதேசம் செய்தும் இவ்விபவாவதாரங்களிலும் உள்ளபடி அறிவார்களில்லை என்றும் வித்தகன் கோவிந்தன் மெய்யனல்லனொருவனுக்கு என்றுப்ரதிபத்திபேதங்க

ளால், சிசுபாலாதிகளிடம் தூஷணைகளைக் கேட்டும் பூர்ணாதிகாரிகளான உபாயநிஷ்டர்களை விசேஷித்து கைகொள்ளாமல் விஜாதீயரான நமக்கு இது அஸாத்தியம் என்று இவ்விபவாதாரங்களும் போதாதென்று அம்சாவதார ரூபேண ஸ்ரீ நீளாவிஷ்வக்ஸேந சுதர்சனாதிகளை நியமித்தருளினார்.

காட்டு மிருகங்களை இணக்கும் பார்வையிட்டு பிடிப்பாரைப்போல ஸஜாதீயர்களான நித்யமுக்தர்களை யிட்டு காரியம் கைகொள்ளவேணு மென்று 'கூவா காவஹாவஜாயதெ' என்றபடி ஆறு கடக்க கொடுத்த தொப்பத்தைக் கொண்டு அந்நீர் வழியே ஸமுத்திரம் புகுவாரைப்போல் உஜாஂஸிநா ஜீவாஃ வராஹாஃ கூடஸாக்ஷிணஃ। வாநாராஸாஃ தாஃ ஸூஃ நீவஸாஂஸவொஹாவடாஃ என்கிறபடி பன்றிகள்போலே ஸம்ஸ்கார சூந்யர்களாய் கிடந்த சேதநர்களை கடாக்ஷித்தருளி க்ருபாதிசயத்தால் ஸர்வேச்வரன் தானே தாஃவணீஃ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்வினீ காவேரீ ச மஹாபுண்யா ப்ரதீசீ ச மஹாநதீ என்றபடி புண்ய க்ஷேத்ரங்களில் ஆழ்வாராதிகளை அவதாரமாகும்படி செய்தான். இப் படிக்கு இந்த ஸாதர்சநாத்யம்சாவதார ரூபேண ஆழ்வாரவதாரங்களும் போதா தென்னபடி திரும்ப இல்லீலாவிபூதியில் வெடுெ ஸஂஜாதவெடு என்று ஸத்யம் நாஸ்தி ஜயா ஜநம் தவஸ்ஷ்ணவம் ந விதெ என்று அச்சேதனர்கள் கிடக்க ஸ்ரீ திருமணியாழ்வானம்சமாக ஸ்ரீ நிகமாந்த தேசிகரை ஸ்ரீமந்நாராயணன் அவதரிக்கச் செய்து தானும் சுநாஞ்விஶ காரநாதெ என்று அனுப்பிரவேசாவதாரமாகவும் விளங்கினார்

ஜநா ஜரதெ ஜொகாநு காரணாஞ்சா வாணீநா என்று ஸ்ரீ நிகமாந்த தேசிகரும், சஷ்யாத்ம ஜ நிஜாணவநுஷாஂ வ ஹுவொ யநஜ சவஜீவதார வெவாவ என்னும்படி ஸ்வாநுஷ்டாநோப தேசாதி களால் திருத்திப் பணி கொள்வானென்றும் யஂ ஹி ரக்ஷிதமிச்சதி வாஜ்யா ஸம்யோஜயதி தஜ என்றும் சதஜா காரயிதா ச ஸஃ என்றும் ஸத்ஸம்ப்ரதாயாசார உபதேசாதிகளால் ப்ரஜைகளைத் திருத்தி பரமோப காரம் செய்தருளினார்

அப்போதும் இதுவும் போதாதென்று ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ சட கோப யதீந்த்ர மஹாதேசிகனாக புநஃ ஆவிர்பவிக்க வேணும், ஸ்ரீ லக்ஷ்மீநர ஸிம்ஹ திவ்ய மணிபாதுகாதாஸ்யைக ஜீவனத்தோடும் 'திஂஶஸாஂ ஸ்ரா வித ஶாரீரகஶாஸ்த்ரஃ' என்றது போதாது என்று விசேஷித்து ஸ்ரீபாடியம் முதலான ஸமஸ்த ஸ்ரீ க்ரந்தங்களையும் குறைவற ப்ரவசநம் செய்ய வேண்டும் என்னும் திருவுள்ளத்துடன் போல் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகர் வெகாஂவாஸெவி ந ஜெ ஸிஜாஷஃ என்றருளிச் செய்ததாக தோன்றுகிறது.

இதைப் பார்த்தால் பரவ்யூஹ விபவாசம்சவதாரங்கள் போதாதென்று ஸ்ரீ வால்மீகி பகவான் 'விஜயாஜஸ கொஜேதக ஹூயாஂஜீயாஜிதி

வ்யூஹ: என்று யாரைக் கொண்டு இப்பிரபந்தத்தை ப்ரகாசிப்போம் என்று சிந்தித்தாப்போல். ஸ்ரீ சிறிய திருவடியான ஆஞ்சநேயர் பக்தியதிசயத்தால் ஹேஹோ ஹே லம்போரா ராம கபி நிதர்ம் ப்ரதிஷித: என்னுமாப் போலவும் ஸ்ரீ குலசேகராழ்வாரும் பக்த்யதிசயத்தால், 'படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பேன் என்றபடி போலும் ஸ்ரீ நிகமாந்ததேசிகனும் ஜகதி ஸவிதா தேவாஸ ஸ்ரீஸ ஜிஹாவிதவஸம்ஸ்ய திம: என்றருளிச் செய்தது. திரும்ப ஸஜஹரீ ஸுஸுஹா வாராக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகரூபேண ஆவிர்ப்பவிக்கவும் தனக்கு பரமாராத்ய தேவனை ஸ்ரீ ஹயக்ரீவனைப் குறித்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனை ஆராதிக்கவும், எல்லா ஸ்ரீ தேசிக ஸூக்திகளையும், காலக்ஷேபம் செய்விக்கவும் நித்திய நிரதிசயத ததீயாராதநாதிகளை செய்விக்கவும் திருவடித் தொழுதாற் போல் தோன்றுகிறது.

தேவோ தேவ தேஸிகாஸ்ஸ நாம
கிமேஷ: காயம் நாமா ந்ருஸிம்ஹ: ।
ஸ்ரீமாந் தேவோ வேங்கடாயம் கவீந்த்ர:
ஸர்வோ ஜாதோ ஸ்ரீ ந்ருஸிம்ஹஸூரி: ॥

ஸ்ரீ நிகமாந்த தேசிரே அபரதேசிகராக ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹ சடகோபயதீந்த்ரமஹாதேசிகரென்ற அபிநவ தேசிகராக, அம்சாவதாரம் போதாதென்று ஸ்ரீ ஹயக்ரீவனுடைய நியமனத்தால் ஸ்ரீ அழகிய சிங்கர் என்ற திருநாமத்துடன், ப்ரிபூர்ண அநுப்பிரவேசாவதார ரூபேண அவதரித்தருளினர்.

இப்படி பரவ்யூஹ விபவாம்சாதி அநுப்ரவெசமும் போதாதென்று பரிபூர்ணானுப்ரவேச ரூபேண அபிநவ தேசிகராக ஸ்ரீ தேசிகர், லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸடகோப யதீந்த்ர மஹாதேசிக ரூபத்தோடும் பரமாத்மா ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹன் அர்ச்சாரூபெண ஆராத்யனாகவும், தூப்புல் ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனே காரணமாய் காரியமாய் கண்டிடு மிவ்வுலகத்திலென்றபடியே உபாயோபெயரூபமான, ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ சடகோபயதீந்திர மஹாதேசிகரென்று ஆர்த த்ராணபராயணராய்,அநவரதபாவநாதர்சந ஸ்துதி கீர்த்தந ஆராதநாதிகளோடும் க்ஷமாகாருண்யங்கள் ஒரு வடிவு கொண்டாப்போல் திவ்ய மங்கள விக்ரஹோபெதனாய் அபரிமித க்ஞாநாநந்த ரூபியாய் ஸ்ரீ அழகியசிங்கர் என்ற திருநாமத்தோடும் ஸஞ்சோஷயம் விஶ்வ ஸ்ரீ மாஹா: என்றபடி குறைவற பரிபூர்ணமாகயாவத் தேசிக ஸ்ரீ ஸூக்திகளையும் காலக்ஷேபம் ஸாதித்தருளி ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகர் ஸர்வ ஸ்ரீ ஸூக்திகளையும் ப்ரவசநம் செய்தருளியும் ஸாதிவ தவதி வ கீர்த்யா யஶஸா ஸ்ரேஷ்ட வம்ஸோ ந என்கிறபடியே ஸர்வோஜ்

ஜீவநார்த்தம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோபயதீந்த்ர மஹாதேசிகர் ஸ்ரீ ரங்கம் ஸ்ரீதசாவதப் பெருமாள் ஸன்னதியில் ஸதாம் மோதாய விளங்கு கிறார்.

இந்த அபிநவ தேசிகனை ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹ சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய அநந்த கல்யாணகுணாதிசயங்கள் உதிக்ஷயாஹி வதந்தெ என்று அநந்தமானபடியால் யதாமதி கொள்ள ப்ராப்த இவ் விஷயம் யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ என்றபடி அபரதேசிகரான ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிகரான ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவடித் தாமரைகளில் நிரதிசய பக்திமான் களுக்கே தெளிய அநுஸந்தேயமாகும்.

ஸ்ரீ:

குருகுண சிந்தநம்

[ஸ்ரீ. உப. வித்வான் தட்டை பவுண்டரிகபுரம் தேசிகாசார்யர்]

‘𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤’

‘𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇’

என்று கீதாசார்யன் ஸாதித்தருளினதை ஒத்து இக்கலியுகத்தில் அனேகர் ஸ்வமதா சாரங்களிலிருந்து நழுவி மோக்ஷமென்னும் பரம ஐச்வரியத்தை இழப்பதைக் கண்டு கருணார்த்ராய் பகவானின் அவதார மாக இப்பாரத விஷயத்தில் எழுந்தருளி இருக்கிறரோ என்று எண்ணும் படி ஸ்ரீரங்கத்தில் ஆசாரிய பீடத்தில் மஹாசாரியனாக எழுந்தருளியிருக் கும் நம் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ம சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் 54வது திருநக்ஷத்திர மஹோத்ஸவம் மிகுந்த சிறப்புடன் ஸமீ பத்தில் கொண்டாடப் பட்டதை ஸமஸ்த ஸ்ரீவைஷ்ணவர்களும் அறிவார் கள். அக் கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாக அந்த அழகியசிங்கரின் அநுக்கிரகபாத்திரர்களால் வெளியிடப்படும் இம்மலரில் அடியேனும் ஸ்ரீ அழகியசிங்கரின் வைபவத்தைப்பற்றி எழுத முன் வந்திருக்கும் காரணம் ஸ்ரீ அழகிய சிங்கரின் குண ஸங்கீர்த்தனத்தால் அடியேனை பாவநப் படுத் திக் கொள்ளவேண்டுமென்ற ஆசையே.

ஸ்ரீ அழகிய சிங்கரின் வைபவத்தை ஒருவாறு எடுத்துக்கூற அடி யேன் ஒருவிதத்திலும் யோக்கியதை யற்றவன் என்றாலும் கவிஸார்வபௌ மன் காளிதாஸனின் 𑌕𑍍𑌵 𑌸𑍂𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌵𑌂𑌶𑌃 𑌕𑍍𑌵 𑌚𑌾𑌲𑍍𑌪𑌵𑌿𑌷𑌯𑌾 𑌮𑌤𑌿𑌃 என்ற சுலோகத்தை நினைத்து மேலே எழுதுகிறேன். இப்போது ஸ்ரீ ரங்கத்தில் ஜகதாசார்யஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங் கர் காரக்குரிச்சி அக்கிரகாரத்தில் ஆநந்த(வரு) மார்கழியீ பூரட்டாதி திருந க்ஷத்திரத்தில் ஸ்ரீ அழகியசிங்கருடைய மாதா பிதாக்களின் தவப்பயனாக மெனவும் ஸ்ரீவைஷ்ணவர்கள் உஜ்ஜீவிக்கத் தோன்றிய ஞானசூரியனென வும் அப்யுதயமானார் ஆஜந்மசுத்தரான ஸ்ரீ அழகியசிங்கர் சாஸ்த்ரார்த்தவிதி களுக்கு இணங்க சௌளோபநயநாதிகள் தத்தத் காலங்களில் பெற்று நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌇𑌵 என்றபடி வளர்ந்தருளினார். பின் வித்யார்த்திதசையில் நமது ஸம்பிரதாய கிரந்தங்களை குருமுகமாக அறிந்து அபிநவதேசிகனான ஸ்ரீ சட கோப மஹா தேசிகனிடத்தில் காலக்ஷேபம் பண்ணி மிகவும் ஸ்ரீவைஷ்ண மதத்தில் நிரதராக விளங்கினார். ஸ்ரீ அழகிய சிங்கரின் அபிமானிகளும் ஊரிலுள்ள மற்றவரும் வருங்காலத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் பெரிய லோகா சார்யனாக பரிணமிப்பார் என்று ஏககண்டமாய் கூறினார்கள்.

மதுரைக்கடுத்த துவரிமான் என்னும் அக்கிரஹாரத்தில் ஸ்ரீஸந்நிதியில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப, ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு, தம் ஸஹகாலீநரும் ஸஹபாடியும் ஸமானகிராமவாஸியுமான 41வது பட்டம்பெற்ற அழகியசிங்கரின் மஹிமையும் சாரித்திரவைபவமும் நன்றாகத் தெரியவே தன்னுடைய காலத்திற்கு பிறகு 41வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரே பட்டத்துக்குவர வேணுமென்று அபிலாஷை அந்த: ஸம்பூர்ணமாக இருநதுவந்தது. அதற்கிணங்க தனக்கு, ஸர்வதா அநுரூபமான நம் ஸ்ரீ அழகியசிங்கரை தன் ஸகாசத்தில் அழைத்து அநுக்ரஹ பூர்வமாக ப்ரேஷ மந்த்ரத்தை உபதேசித்து தனக்குப்பின் தன்ஸ்தானத்தை கொடுக்க திருவுள்ளம் பற்றியிருந்தார். காரக்குரிச்சி பெரிய அழகியசிங்கர் நிகமாந்தமஹா தேசிகன் ஸூஹாஷிதநீவியில் ஸாதித்தபடி 'கு நஸோவ்யா திஸ்வைஷு: ஸாஜ்ஞ கூ: ஸயீஷ: । யதெசு ஷஹாஜூஷ் ஹொஹ ஸூஜ ஷிவூஷூஷிாஸ:॥' என்றபடி ஜீவகாலம் முழுவதும் நடந்து வந்தது மன்றி அம்மாதிரியே தனது மஹிமையால் ஓர் தீபமானது தன்னையும் தன்னை ஆச்ரயித்தவஸ்துக்களையும் ப்ரகாசமாக செய்வது போல் தன்னை ஆச்ரயித்த பக்த கோடிகளையும் அவ்விதம் செய்து வந்தார். ஸ்ரீ அழகியசிங்கரை ஆச்ரயித்தவர்களும் ரத்னத்தை அடைந்த ஸமுத்ரம் போல் பூஜயர்களாக விளங்கி வந்தார்கள்.

பின் ஒரு ஸமயம் 40-வது பட்டத்து அழகிய சிங்கரும் பரமதம் செல்ல திருவுள்ளமாய் ஸ்தாநத்தை நம் ஸ்வாமிக்கு நியமிக்க இவரும் ஆஸ்தானத்தை ஏற்று அந்த ஆஸ்தானத்தை இன்றும் அகுண்டிதமான மஹிமையுடனும் அஸாதாரணமான ஸாமர்த்தியத்துடன் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனிடத்தில் அநிதரஸாதாரணமான பக்தியுடனும் அலங்கரித்து எழுந்தருளியிருக்கிறார்.

பிறகு ஸ்ரீ அழகிய சிங்கருக்கு க்ஷேத்ராடனம் செய்யவேண்டுமென்றும் அவ்வவ்விடங்களில் ஸ்ரீ வைஷ்ணவ ஸமயாசாரங்களின் மஹிமையை எடுத்துக்கூறி அம்மதத்தை நாஸ்திகர் ஏவராலும் அசைக்க முடியாத ஸ்திதியில் வைத்துவிடவேண்டு மென்றும் அபிலஷித்து துவரிமானிலிருந்து யாத்ரை செய்தருளினார். அநேக திவ்ய தேசங்களில் மங்களா சாஸநம் செய்தருளி திவ்யதீர்த்தங்களில் நீராடி அந்தத: உபயகாவேரிமத்தியத்தில் முக்தாஹாரத்தின் மத்தியத்தில் நீல மணிபோல் விளக்குவதும் பூலோக வைகுண்டம் என்று பலராலும் பிரசம்ஸிக்கபட்டதும் ஆழ்வாருடைய திவ்யஸூக்திகளால் மங்களா சாஸனம் செய்தருளப்பெற்றதும் நமது கவிதார்க்கிகஸிம்மமான வேதாந்த தேசிகனுக்கு அபிமான பாத்திரமானதும் திவ்யக்ஷேத்திரங்களுக்கெல்லாம் சிரோவதம்ஸமாக இருப்பதும் ஸப்தஹேம பிராகாரங்களுடை—

யதும் நைகஸந்நதிகளாலும் புஷ்கரிணிகளாலும் சூழப்பட்டு தாரகமத்தியே சந்திரன் போல விளங்கும் ஸ்ரீரங்கநாதன் ஸந்நதியை உடையதுமான ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திற்கு எழுந்தருளினார்.

'விஷீஷணஸ்து யஊ-ாத்மா' என்று அபிநந்திக்கப்பட்டவரும் நத்தையின் வயிற்றில் முத்து பிறந்தது போல் ராக்ஷஸ குலத்தில் உதித்தவருமான விபீஷணாழ்வாரால் ஆராதிக்கப்பட்டு அந்த க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டவரும் விச்வேசரும் பக்தவத்ஸலரும் பிராட்டிஸமேதரும் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதனின் அபர்யாப்தாம்ருதமான திவ்யமங்களவிக்கிரஹத்தை ஸேவித்தும் த்ருப்தராய் நம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீரங்கத்தில் இப்போது எழுந்தருளியிருக்கிறார்.

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனை திருமஞ்சனாதிஸபர்யைகளால் பிரதிதினம் ஆராதனம் செய்யும் நம் அழகிய சிங்கரின் மஹத்தான பாக்கியமே பாக்கியம். தசாவதாரங்களிலும் நரஸிம்மாவதாரமே பலவிதத்திலும் உத்க்ருஷ்டமானது. இதர அவதாரங்களில் தேவாதிகளின் நிர்பந்தத்திற்கு இணங்கி துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம் அவதரித்த ஸ்ரீமந்நாராயணன் இவ்வவதாரத்தில் கேவலம் ஓர் பக்தனின் மேன்மையை நிரூபிக்கும் பொருட்டு பூலோகாவதாரம் செய்யவேண்டியதாயிற்று. அவதாரக் கிரமம் ஸ்ரீ தேசிகனால் வரதராஜ பஞ்சாசத்தில் வெகு அழகாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஸக்ருவஸ்ய ஊாநவஶிரொஶ வஶிவாஒநாய
ஸஜ்ராம் ந்ருஸிம்ஹகூஹநாஊயிஜஹ்ஷெஷு ।
ஷும்ெஸகவஜ-ஹு்யாநாவி கஶீஶ நமிநம்
ெதெரொக்யெஉவ நிஷ்ருதம் நாஸிம்ஹமஹஹ ॥

மேலும் இவ்வவதாரத்தில் பகவான் லக்ஷ்மீ ஸஹிதராக ஆவிர்ப்பவித்தது வெகு விசேஷமாகும். பகவானின் பக்தவாத்ஸல்யமும் நிஜஸ்வரூபமும் வெகு ஸ்பஷ்டமாக நிதர்சநம் செய்யப் பட்டிருக்கின்றன.

"ஸமவி தாணஊக்ஷம் வக்ஷவாதாநஹிஜ்ஜும்
வுஹணஉநவியெயம் வுாவ்ய வஊாவஸஹாயஃ ।
உஹதி ஹணஸஉாஜெ உாநவஶிவஹம் ஊயெக்ஷம்
வுதிவஊவி யஶாஹம் வாஹுநாம் உாஉகநாஃ ॥"

என்று நமது தேசிகன் ஊயாஶதகத்தில் ஸாதிக்கிறபடி தயாதேவிக்கு ஸஹாயமாக வுள்ள லக்ஷ்மீஸமேதராக எழுந்தருளியதில் இவருடைய கருணாபிரவாஹம் நன்றாய் வெளிப்படுகிறது.

'கடெணா ஶணியாஜஹதொ உஹீயாநு' என்கிற உபநிஷத் வாக்யப்படி

ஆத்மஸ்வரூபத்தை பகவான் இவ்வளவு விசதமாக வேறு ஒரு அவ
விளக்க ரையை ஆராதிக்கும்
பக்தன் உள்ளும் வெளியும் மஹா பரிசுத்தமாயும் அத்தியந்த அவ
தாநதையுடனும் இருக்க வேண்டும். ஆயினும் ஆராதிப்பவர்களுக்கு
ஐஹிக ஆமுஷ்மிக சிரேயஸ்ஸை நிஸ்ஸந்தேஹமாஹ கொடுக்ககூடிய
கருணவாரிதி இப்பேர்பட்ட அமேயமான குணகணங்களாலும் பௌருஷ
த்தாலும் அலங்கிருதரான லக்ஷ்மீ நரஸிம்மனை அநவரதம் ஆராதித்து
வரும் நமது ஸ்ரீ அழகிய சிங்கரின் விசேஷபலத்தை ஸ்ரீ ஜிஹ்வாஸ்ஹஸ்ரம்
பண.

இதைத் தவிற அஷ்டாத்ம குண பரிதரான நமது ஸ்ரீ
சிங்கர் ஸ்ரீ வைஷ்ணவ தர்மத்தை நிலை நிறுத்தும் பொருட்டு மிகவும்
வ்யஸ்ஸாலும், ஞாநத்தாலும் விருத்தராயிருந்து மஹோத்ஸாஹத்திலும்
பகவத் கைங்கரியத்திலும் யுவ ராகவே எழுந்தருளி ஸகல அந்தே
வாஸிகளுக்கும் வித்யாதானமென்னும் பரமோத்கிருஷ்டமான வஸ்
துவை விதரணம் செய்து கொண்டும் ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம் ஶ்ருத
ப்ரகாசிகை முதலிய ... ஈடு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய மஹா க்ரந்த கால
க்ஷேபாதிகளால் சிஷ்யர்களின் திருஷ்டியை ஊர்த்துவமாகத் திருப்பிக்
கொண்டும் பிறருக்கு லக்ஷியமாயிருக்கும்படி ஆசரித்துக் கொண்டும்
பூததயையால் ஆச்ரயித்த எல்லோரையும் நிஷ்பக்ஷபாதமாக உய்வித்துக்
கொண்டும் ஆசார்ய திலகமாக எழுந்தருளியிருக்கிறார். நம் ஸ்ரீ அழகிய
சிங்கரை கடைசியாக வேதாந்த தேசிகனின் சுலோகம் ஒன்றால் வெகு ஸம்
க்ஷேபமாக வர்ணித்து விடலாம்.

"ஸிஷ்டம் ஸத்ஸம்ப்ரதாயெ ஸ்திரமதிமநகம் ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்
ஸத்வஸ்தம் ஸத்யவாசம் ஸமயநியதயா ஸாதுவ்ருத்யா ஸமேதம்
டம்பாஸூயாதிமுக்தம் ஜிதவிஷயகணம் தீர்கபந்தும் தயாளும்
ஸ்காலித்யே ஶாஸிதாரம் ஸ்வபரஹிதபரம் தேஶிகம் பூஷ்ணுரீப்ஸேத் ॥"

இந்த ஸ்ரீ அழகியசிங்கர் இவ்விதமே இந்த ஆஸ்தானத்தை ஶதாதிகமான
வருஷங்கள் அலங்கரித்தருளி இக்கலியுகத்தில் சில பாபமாக்களின்
க்ருத்யங்களால் ஹீனதசையை அடைந்து வரும் நமது ஸ்ரீ வைஷ்ணவ
மதத்தை த்ருடமாக ஸ்தாபித்து நம்மை பவஸாகரோத்தாரணம் செய்
விக்கவேண்டும் என்று பக்தாபீஷ்ட பலப்ரதாயினை ஸாஷ்டாங்கமாக
ஸேவித்துப் பிரார்த்திப் போமாக.

ஆசார்ய ப்ரபாவம்

[ஸ்ரீ உப. வே. வித்வான் அபிநவஸரஸ்வதி வாங்கமுக ரத்நகோச வித்வத் சிரோமணி
பண்டித ராஜ குருவர்ய நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசார்யர்

[illegible]

ஸ்ரீ ஸர்வஜகத்காரண பூதனை ஸர்வேச்வரனும் ஸ்ரிய꞉ பதித்வத் தாலே யன்றோ சிறப் பெய்தியது. அப்படிப்பட்ட லக்ஷ்மீ கடாக்ஷநோக் கத்திற்கு முக்யபாத்திரராயும், பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாய் வந்து மர்த்யசரீரத்தை எடுத்து [illegible] என்றபடி ஸ்ரீமந் நாராயணனே ஆசார்யனாக அவதரித்து மனிதர்களை ரக்ஷிக்கிறதாக ஸித் தாந்தமாதலின் அதற்கிணங்க திருவவதாரம் செய்தருளினவரும்.

:" [illegible] ।
[illegible] ॥

என்று அனுஸந்திக்கத்தக்க கடிகாசதகம் ஸ்ரீ அம்மாள் வரத தேசிகனின் பரிபூர்ண க்ருபாகடாக்ஷாம்ருததாராபிஷேகம் பெற்று பொலிவுற்ற மஹா நுபாவனும்

" [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ "

என்பதற்கிணங்க ஸ்ரீபக்தாபிஷ்டபல ப்ரதனும் லக்ஷ்மீ நரஸிம்ஹனுடைய ஆராதநதத்பரராயுமுள்ள ஸ்ரீமதஹோபிலாஸ்தாநாபிஷிக்த ஸ்ரீ ஆதி வண்சடகோபயதீந்த்ர மஹா தேசிக ப்ரஸாதலப்த திவ்யபரம்பரையில் மூர்த்தாபிஷிக்தராய் விளங்கி வரும்படியான மஹாபாக்யத்தைப் பெற் றவராயும் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ரமஹாதேசிக கருணாகடாக்ஷா நுக்ரஹத்தால் " [illegible]" என்று நிரூபிக்குமாறு மஹாபிஷேகம் பெற்று விளங்கு பவராயும் தக்ஷிணகங்காநதியாம் தாம்ரபர்ணீ தீரத்தில் அவதரித்தருளின வருமான ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகஸ்வாமி

என்ற மஹான் இப்பூமிதேவியின் முககமலம் போன்றதும் நீர்வளம்முதலிய பலவளங்களும் மலியப்பெற்று

“ [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ”

என்றும்,

“ கொண்டல்வண்ணனைக் கோவலனாய்
வெண்ணெயுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே ”

என்றும் அநுசந்தாநம் செய்து பாடிப் பரவப்பெற்றபடி ஸ்ரீ அழகிய மணவாளனும் ஸ்ரீரங்கநாயிகா சமேத ஸ்ரீ ரங்கநாதன் கோயில் கொண்டெழுந்தருளி சேவைசாதிக்கக்கூடியதும்.

“ [illegible]
[illegible]
[illegible]
[illegible] ”

என்றபடி ஸ்ரீ ராமாநுஜனால் மங்களாசாஸநம் செய்யப் பெற்று உபயகாவேரீமத்யே சந்த்ரஸூர்ய புஷ்கரிணி புந்நாகவ்ருக்ஷபார்சவத்தில் ஸ்ரீ ரங்க விமாநத்தில்

“ சென்றால் குடையாமிருந்தால் சிங்காதனமாம்
நின்றால் மர வடியாம் நீள் கடலுள்

என்றும் புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம்
புல்குமணையாம் திருமாற் கரவு"

என்றபடி ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமான நித்ய கைங்கரியம் செய்து வர்திக்கும் திருவனந்தாழ்வான் மீது பள்ளிகொண்டு ஸேவை ஸாதித்து விளங்குவதுமான ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தின் கண் நடமாடிப் பேசும் அழகியசிங்கர் எனக் கொண்டாடுமாறு அதற்கு நிதர்சனமாக திவ்யமங்கள விக்ரஹரூபேண பரிணமித்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாராயந ஸஹிஷ்ண்வாக்ஷ ணாதியாராயாக்வ ஶஶீஶாஜ்ஞாநக்ஷ்யாணசரணாஹரணாமும் க்ருதாரக ஸேவை ஸாதித்தருளும் மஹாஞன உபநிஷதவித ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹசடகோப யதீந்த்ர மஹாதேசிக வைபவத்தை அநுஸந்திக்கும் பாக்யம் பெறுவதே மங்களகர விஷயம்.

ஶ்ரீ:

[illegible]

[ஸ்ரீ. உ. வே. வித்வான் A. R. கிருஷ்ணமாசார்யர் & N. S. C.]

[illegible] 1

[illegible] 2

[illegible]

[illegible]

𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌵𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌤 𑌏𑌵 "𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋 𑌵𑍈 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌋𑌣𑍈𑌃 𑌋𑌣𑌵𑌾𑌨𑍍 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃" 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾 𑌋𑌷𑌿𑌋𑌣𑌸𑍍𑌯 𑌅𑌧𑍍𑌯𑌯𑌨𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ।

𑌏𑌵𑌂 𑌚 𑌨𑌾𑌨𑌾𑌜𑌾𑌤𑍀𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌧𑌕𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌬𑌹𑍁𑌤𑌾 𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌣 𑌸𑌾𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑌿𑌕𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇𑌨 "𑌨𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌮𑌂 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌨𑌾𑌮𑌧𑍇𑌯𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌯𑌃" 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌵𑍇𑌦𑍋𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌾𑌤𑌿𑌶𑌯𑌂 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌚 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑍄𑌣𑌾𑌂 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑍈𑌵𑌯𑌿𑌕𑍇𑌨 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌭𑍇𑌦𑍋𑌽𑌪𑌿 𑌕𑍂𑌪𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑌿 ।

𑌤𑌥𑌾𑌪𑌿 "𑌸𑌤𑍍𑌵𑍃𑌤𑍍𑌯𑌪𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌹𑌾𑌸𑍍𑌯 𑌤𑌥𑌾 𑌸𑌾𑌹𑌿𑌤𑍀" 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌸𑌾𑌧𑌿𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑍈𑌶𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌂 𑌤𑌥𑌾 𑌕𑌰𑍍𑌤𑍄𑌣𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑌨𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌾𑌰𑌸𑌿𑌕𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌷𑍁 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇 𑌪𑍍𑌰𑌭𑍁𑌤𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌪𑌰𑌿𑌵𑌾𑌦𑌦𑍀𑌰𑍍𑌘𑌵𑍇𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌨𑍍𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌃 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌏𑌵 𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌸𑍍𑌯 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌟𑌿𑌤 𑌤𑌥𑌾 𑌸𑌾𑌬𑌨𑍍𑌧 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌸𑌂𑌪𑌾𑌦𑌿𑌤𑌸𑍍𑌯 𑌚𑍇𑌤𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑌯𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌭𑍇𑌦𑌿𑌤𑌾 । 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌷𑍁 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑍂𑌟𑌗𑍁𑌣𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍇𑌽𑌪𑌿 𑌅𑌨𑍁𑌗𑍁𑌣𑌤𑌯𑌾 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 ॥

𑌨 𑌹𑌿 𑌕𑍂𑌟𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌭𑌾𑌵𑍇 𑌅𑌨𑍇𑌕𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑍂𑌟𑌨𑌾𑌶𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌹𑌿 — "𑌯𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌤𑌿 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌃 𑌕𑍂𑌟𑌨𑌾𑌶𑌾𑌭𑍍𑌯𑌾𑌸𑍇 । 𑌨 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌸𑌾𑌲𑍋𑌕𑍍𑌯𑌂 𑌚 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿" 𑌇𑌤𑌿 𑌵𑌚𑌨𑍇𑌨 𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌬𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

𑌅𑌯𑌂 𑌚𑌾𑌨𑍍𑌯𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 '𑌨𑌿𑌸𑍍𑌸𑌂𑌗𑌿𑌨𑌾𑌂 𑌸𑌤𑌾𑌂 𑌸𑌾𑌧𑍁𑌯𑌂 𑌪𑌨𑌃 𑌶𑍍𑌰𑍀𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌸𑌤𑍀𑌚' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌯𑍋𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌣𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑍁𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤 "𑌶𑌿𑌖𑌾𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑍇𑌦𑍍𑌯 𑌸𑌂𑌕𑍇𑌤𑌃 𑌨𑍇𑌤𑌿 𑌸𑌿𑌧𑍍𑌧𑍇𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃" 𑌇𑌤𑌿 𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌯𑍋𑌗𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌤𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌿𑌕𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌤 𑌏𑌵 "𑌸𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌵𑌿𑌧𑍇𑌷𑍁" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌵𑌿𑌯𑌾𑌕𑍍𑌯𑌾 𑌸𑌂𑌹𑌾𑌵𑌨𑌾𑌗𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 "𑌵𑌿𑌕𑌾𑌰𑍋𑌽𑌤𑍍𑌰 𑌸𑌨𑍍𑌦𑌿𑌗𑍍𑌧𑌂 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑍇 𑌧𑍀𑌰𑌾𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌸𑌾𑌰𑍇𑌣 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌦𑍇𑌤𑌾𑌂𑌶𑍇 𑌤𑌦𑍇𑌵 𑌭𑍂𑌯𑌃 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 𑌸𑌂𑌹𑌾𑌵𑌾 𑌮𑌹𑍀𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌰𑌂 𑌵𑌰𑌯𑌾 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 𑌏𑌕𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌕𑍂𑌟𑌨𑌾𑌶𑍇𑌨 𑌅𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 ।

அத ஏவ ச அஸ்மதாசார்யாணாம் [illegible] ஶ்ரீமல்லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்ய நாமதேயமேவ [illegible] ஶ்ரீமதாம் [illegible] இதமேவ [illegible]।

இத்தம் “[illegible]” இத்யாதிநா [illegible] ஶ்ரீவண் ஶடகோப ஶ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஶடகோபயதீந்த்ரமஹாதேஶிகா: [illegible] ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹம் [illegible]।

[illegible]
[illegible] ॥
[illegible]
ஶ்ரீமந்ந்ருஸிம்ஹஶடகோபயதீந்த்ராணாம்
[illegible] ॥

ஸ்ரீ:

ஆசார்யவைபவதீபிகாவிம்ஶதி:

[ஸ்ரீ. உ. வே. வித்வான் தையார் ஸ்ரீநிவாஸாசார்யர்]

ஶ்ரீந்ருஸிம்ஹஶடாராதியதீஶாநகுரோ: பதே ।
ப்ரணம்ய தச்சரித்ராணவிம்ஶதிம் ரசயாம்யஹம் ॥ 1

யதீயநுதிமேஶதோ பவமநிஷ்டதோ மோசிதோ
யதீயபதஸேவநாத்ஸுப்ர பவதி ப்ரஜாநாம் ஶுபம் ।
கிமத்ர பஹுநா ரமாநாதஹரிஶ்ரிதாநாம் ப்ரஸீ
தந்தீயபதரக்ஷிணீ பவது மே ஸதா ரக்ஷிணீ ॥ 2

ஆதௌ ஶ்ரீந்ருஹரிம் ரமாஶடரிபு ஶ்ரீபாஷ்யகாராதிகாந்
மத்வா பூர்வகுரூந் ச ஸத்குணம் ஶ்ரீவண்ஶடஜித்குரூந் ।
வந்தே தேவ பதாப்ஜநா ஸமுத்திதம் வந்தே குருணாம் ததிம்
ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹகாரிஜமுநிம்ஹாமேஶம் திமே ப்ரஸீததீம் ॥ 3

ஜநம் ஜகம் ப்ரியபதி த்வமேவ
ஸ்தோத்ரே த்வதீயே குருபாதரக்ஷ ।
அதஸ்த்வதீயம் ஜகவத்த்வலக்ஷம்
ப்ரவிகஸாஸீத்விபுயேஷு ஸத்த்வ ॥ 4

ஶ்ரேஷ்டாஸ்ஸந்து பரம் பதார்யவர்யா:
ஸ்ருஷ்ட்யாதிகாலேஷ்வபி
ரஸ்மாத்விஸ்ஸ ஸாம்யமேவ புவயோ
ஸ்தோத்ரே பரம் யாந்தி தே ।
ஶாஸ்த்ராவஸ்து பரம் விஶேஷதயோ:
ஶுப்ராம்ஶுவம்ஶ்யாதயோ:
கோ பேத: ப்ரபயா பதாவதி
குரோர்வ்யார்த்தே த்விவா ஹாஸ்யத: ॥ 5

ஶ்ரீமத்வாத்ஸ்ய ஸம்ப்ரதி ந்ருஹரி
ஶடரிபோ: பத்மநாபாப்யஸம்ப்ரதி
யேவார்யேந்த்யஜ்ஞாநபங்க: ஸ்ருதி
மநவயிகாம் யோகிநஸ்தாமகுவர்து ।

[illegible]
[illegible]
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 [illegible]
[illegible] ॥ 6

𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹 [illegible] 𑌪𑌾𑌦𑌾𑌵𑌨𑌿 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 7

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 8

𑌨 𑌚𑌾𑌹𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌜𑍍𑌞𑍋 𑌨 𑌚𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌿𑌜𑍍𑌞𑍋
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 9

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 10

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌃 𑌪𑌾𑌦𑍁𑌕𑌾 [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 11

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 12

[illegible]
[illegible] ।

[illegible] || 13

[illegible] || 14

[illegible] ||15

[illegible] || 16

[illegible]

[illegible] || 19

𑌵𑌿𑌨𑌾𑌪𑌿 𑌰𑌾𑌗𑌂 𑌵𑌿𑌨𑌤𑍇𑌷𑍁 𑌨𑌨𑍍𑌦𑌨𑌂
𑌵𑌿𑌰𑌾𑌗𑌿𑌣𑍀 𑌪𑌾𑌦𑍁 𑌵𑌿𑌰𑌾𑌜𑌸𑍇 𑌕𑌥𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌚𑍇𑌤𑌸𑍍𑌸𑍁 𑌯𑍇 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌂
𑌵𑌿𑌰𑍋𑌧𑌹𑌾𑌨𑌂 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑌾𑌸𑌿 ॥ 20

𑌸𑍇𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌸𑍂𑌰𑌿𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 𑌪𑌾𑌦𑌾𑌵𑌨𑍀𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌂
𑌉𑌦𑍍𑌦𑌿𑌕𑍇𑌷𑍍𑌵 𑌚𑍇𑌵𑍇𑌨 𑌚𑍇 𑌸𑌕𑌾𑌰𑌣𑌾 𑌵𑌾𑌦𑍀𑌶𑍍𑌵𑌯𑌂 𑌯𑌾 𑌪𑌠𑍇𑌤𑍍 ।
𑌕𑌾𑌚𑌾𑌕𑍍𑌷𑍀𑌤𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌪𑌾𑌣𑌿𑌂 𑌯𑌶𑌃
𑌶𑍍𑌰𑍋𑌤𑍄𑌣𑌾𑌂 𑌪𑌠𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌚 𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌮𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌯𑍁𑌷𑍀 ॥ 21

𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌸𑍂𑌰𑌿𑌜 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑌾𑌦𑌾𑌵𑌨𑍀 𑌸𑍇𑌵𑌿𑌨𑌾
𑌰𑌙𑍍𑌗𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍁𑌤𑍇𑌨 𑌸𑍂𑌰𑌿𑌕𑌵𑌿𑌨𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑍃𑌤𑌾 ।
𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌖𑍍𑌯 𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌾 𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌿𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌸𑌸𑍂𑌨𑍋𑌰𑍍𑌗𑍁𑌰𑍋𑌃
𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑍇 𑌲𑌲𑌿𑌤𑌾 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌵𑌿𑌜𑌯𑌤𑌾𑌂 𑌸𑌤𑍍𑌸𑌂𑌸𑌹𑌾𑌯𑌾𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 ॥

ஸ்ரீ:

ஸ்ரீ அழகிய சிங்கர்

[ஸ்ரீ உ. வே. வித்வான் யன். ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார், வக்கீல்.]

மஹத் ஆசார்யன் திருவடிப்ரபாவத்தையும், திருவுள்ளச்சீரையும், அந்தத் திருவடிகளில் ஆச்ரயித்தும், அவர்கள் க்ருபைக்குப் பாத்திரமாயும், உஜ்ஜீவனம் பெற எல்லாச் சேதனர்களும் முயலவேண்டிய ஆவச்யகத்தையும், சாஸ்திரார்த்தங்கள் நெருங்கிய திவ்ய ஸூக்திகளால் மஹநீயாளான வித்வத்சிகாமணிகள் மிக்க மணம்பெற வமைத்த இதழ்கள் கொண்ட இந்த மலரில் அக்ஞனை அடியேன் வெறுஞ் சொற்கள் கலத்தல், ஜகத்ஜோதியான ரத்னங்களின் நடுவில் பரல் கற்களும், சந்தனத் தோப்பில் புல்லும் கலந்திருப்பதொக்கும். சாஸத்ர நிர்மிதமான ஞானப் பெருக்குள்ள பெரியார் யதாசாஸ்த்ரம் ஆசார்யாளுடைய ஸ்வரூபகுணக்ருபாவைபவங்களில், மண்டியனுபவித்து ரஸித்தற்கும், அக்ஞன் ஈடுபடும் மாதிரிக்கும், வாசி விளங்கவேண்டியதும், அவசியமென்பதைத் தவிற அடியேன் இதில் கவந்துகொள்ள வேறு நியாயமில்லை. திருவெட்டெழுத்தை ஸ்மரித்திருக்கும் பெரியார்பக்கல், கம்பநாட்டாழ்வார் தனக்குள்ள ஈடுபாட்டை.—

“நாராயணுய நமவென்னும் நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராரும் மேனிக் கருணைகரக்கடவுட்
காராதனம்என் அறியாமை யொன்றுமே.

யென்றுரைத்து விளக்கினர்.

உபஹிதாளான சேதனர்கள் எண்ணிறந்தோர், இவ்விதம் கம்பர் செய்யும் ஆராதனத்துக்குப் பாத்ராளும், நன்னெஞ்சமும், பாராளும் பாதமும் உடையவர்களாகுமாறு ஒவ்வொரு நாளும் பாக்கியவந்தாளுக்குத் திருவெட்டெழுத்தை உபதேசித்தும், அதை த்யானித்து ஜெபித்து, ஸாக்ஷாத்காரம் பெற்ற பலர்களாலும் நித்யஸேவிதராய் விளங்கும் ஸ்ரீ ஆசார்யன் வைபவங்கள் இன்னும் பல்லாயிரம்படி மேலாகி யிருத்தலாற் சொற்கடங்காதனவாம். வேதவாரியும், க்ருபைக் கடலும், தவத்தின் ஸ்வரூபமும், சித்தாந்த வடிவமுமாகித் திருவடியை அடைந்தவர்க்கெல்லாம் மஹாநுக்ரஹமும், சேதனேஜ்ஜீவனநிரதையுமுள்ள ஆசார்யவர்ய திவ்ய பாதாள் வைபவத்தை யுன்னி, யுன்னி உள்ளடங்காமல் மற்றவரிடம் உரைக்கப்புகின்,

“இருளுறுசிந்தை யேற்கும் இன்னருள் சுரந்தவீரன்
அருளும்நீ சேரின்ஒன்றோ அபயமும் அளிக்குமன்றி
மருளுறுபிறவி நோய்க்கு, மருந்துமாம் மாறிச்செல்லும்,
உருளுறுசகட வாழ்க்கை, ஒழித்து வீடளிக்குமன்றே.”

யென்று கம்பநாட்டாழ்வார் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் வைபவத்தை யருளிச்செய்ததே யன்றி வேறு விதமாய் உணர்தல் அறியேன்.

ஆசார்யன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

அழகிய சிங்கர் மாலை

[ஸ்ரீ. உ. வே. வி. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தமிழ் வித்வான்]

சிங்கவேள் குன்றத் திருப்பதியில் வாழுநர
சிங்கவேள் செம்பொற் றிருவடிகள்—தங்கவே
ஆக்குமனத் தெம்மான் அழகிய சிங்கர் புகழ்
வாக்குமன மெய்யே வரும்.

திருமகள் புல்கும் உரமுள பெருமான்
திருவடி மனமுற நிறுவும்
பெருமைகொள் தொழும்பர் மரபுநன் கோங்கப்
பேணிய திருநெறி வழியே
தருமமும் பொருளுமின்பமும் வழங்கித்
தன்கழல் வீடுதந் தருளும்
ஒரு பொருள் அடிமை அழகிய சிங்கர்
உயர்புகழ் பெருகுக உலகே. 1

மாதிரு வடியில் மனமுற நிறுத்தும்
மதமென விசிட்டவத் துவிதப்
பேறுறு மும்மைச் சித்தசித் தீசப்
பெரும் பொருள் பேசிய நெறியின்
ஆறுநன் குணர்ந்து மக்கள் பேரின்பம்
அடைவுற வருள் பணி பூண்ட
தேறுறு குரவர் அழகிய சிங்கர்
திருமர போங்குக வளர்ந்தே. 2

அரிதிருக் கழலி லாழ்பவர் வளர்த்த
அறநெறி முறையுற வளரப்
புரிதிருப் பணிகொள் குருகையர் பெருமான்
புண்ணிய மரபினை வளர்த்து
விரிபுகழ் புனைந்த வண்சடகோப
மெய்ப்பொருள் தருமுனிவழியே
தெரிவதற் கரிய பொருள்களை விளக்கும்
திருமர போங்குக சிறந்தே. 3

அத்தகு மரபில் அரிநெறி வளர்க்கும்
அரும்பணி பெறு முனிவரருள்
முத்தியி னியல்பை யுய்த்துணர்ந் துணர்த்தி
முழுத்தவப் பிழம்பென விளங்கும்

வித்தக முனிவர் திருநர சிங்க
வியன்பெயர் தாங்கிய விபுதர்
புத்தமு தனைய மொழியினர் அறத்தின்
புகழினை யளப்பது மரிதே. 4

திருமகள் தழுவு புயமுள விறைவன்
திருப்புகழ் வழுத்திய முகமும்
பெருமைகொள் அவன்றன் அருள்நெறி பிடித்துப்
பிரிவறு மனமுநன் கமைந்த
பெருமுனி வரராம் வண்சட கோபப்
பெயருறு திருநர சிங்கர்
தருமமுங் கடவுள் பணிபுரி நெறியும்
தகுமென வழுத்துதும் உணர்ந்தே 5

வேறு

ஆதி வண்சட கோப முனீந்திரர்
அன்று தந்த நெறிமுறை பற்றியே
ஓதியோதி யுணர்ந்துள மெய்ந்நெறி
உய்த்துணர்ந்துரைத் துண்மை விளக்கிய
நாத னல்லருள் வாய்ந்த பெருந்தவர்
நாற்பத்தொன்றாங்குருவென வந்தவர்
வேத நூல்பயில் தேர்ச்சியும் வாழ்வையும்
மிக்கவன்போ டுரைத்து மகிழ்வமே. 6

தண்டமிழ்த் திருநாட்டினர் முன்செய்த
தக்கமெய்த்தவ நற்பயனென்னவே
தொண்டர் வாழ்திரு நாரணமாபுரம்
தோன்றியோங்கிய தொல்குடி யொன்றினில்
அண்டர் நாயகன் கோவிந்தன் நாமமே
ஆரப்பெற்ற வமுதெனவுண்டலே
கண்டமெய்ம்மர பொன்றினில் வந்தவிக்
கடவுண் மாமுனி சீரைப்புகழ்வமே. 7

மாதவத்தினர் வாதூல கோத்திரம்
வந்த வந்தணர் கோபாலனுமமே
ஓதுகோபால ரங்கநாதப் பெயர்
உற்ற நற்றவர் மெய்த்தவப்பேறென
வேத மோதி விளங்கு குலத்தினில்
மிக்கலக்குமி பெற்றருள் செல்வமா

நாத னும்மம் வழுத்த வடைந்தருள்
ராம பத்திர நாமமுடையரே. 8

நல்ல மெய்த்தவர் நாட்டிய நூனெறி
நாளு மோதி நிறுத்து முளத்தினர்
வெல்ல வல்ல தருக்கநன் னூல்களும்
வேத வந்தம் விளக்கிய நூல்களும்
சொல்ல நல்ல குரவர்கள் வாய்த்ததாற்
சொற்ற வண்ண முளத்தி லடைத்தனர்
மெல்ல மெல்ல வுணர்ந்து பிரபந்தமும்
மெய்ந்நெறித்தவர் செப்ப வுணர்ந்தனர். 9

மக்கள் மூவரை மங்கை யொருத்தியை
மனையின் செல்வியாம் குப்ஜவல்லிப்பெயர்
மிக்க சானகி பெற்று வளர்த்தருள்
மேவவைத்துத் துறவில் மனங்கொளீஇத்
தக்க மாதவர் வண்சட கோபர்
தவத்தின் மிக்க வரங்கநாதாரியர்
ஒக்க மாதவன் பாதுகைச் சேவகம்
உள்ளவாறு பயின்றவர்ச் சார்ந்தனர். 10

வேறு

சடகோப தேசிகர்பாற் சமாச்சிரயண மடைந்தனராய்
சடகோப ராமாநுஜத்தவ முனிபாற் பரநியாசம்
சடகோப மரபுநெறி தாம் வளர்க்கும் பணிபூண்டார்
சடகோப னருளுநெறி தாமடைந்தார் முறையுறவே. 11

துறவறத்தி னிலைப்பதற்குத் துணிபுபூண் டிருக்குமிவர்
அறநெறிக்க ணிலைத்த வுளத்தமைதியினை யறிந்தருளும்
துறவறத்தின் விளக்கமெனும் தூயமுனி மடத்தமைத்தே
அறநிலைக்கத் துறவருளி யாட்கொண்டார் இன்னவரை. 12

பாண்டிய நாட்டகமுள்ள பழம்பதிகள் பலவற்றுள்
ஈண்டிய மாப்புகழ் பூண்டே யெழில் நிறைந்ததிருப்பதியாம்
தூண்டரிய வொளிசான்றதுவரைமான் எனுந்தலத்தில்
வேண்டுதுற வடைந்தபுகழ் மிக்காரை வழுத்துதுமே. 13

அகோபிலநற் றிருமடத்தின் அதிபதியாம் பெருமை யொடும்
அகோபில நற்றிருப்பதிவாழ் அரியநர சிங்கனருள்

அகோபிலத்தே யிருந்து பெறு மமைதியினால் உலகுபுகழ்
அகோபில தேசிக சீயர் ஆயினரிப் பெரியோரே. 14

பிறவியினைப் பெற்றோர்கள் பெருங்கல்வி பயில்வது நம்
அறநெறியை யுணர்வதுவும் அடக்கமெலா மமைவதுவும் [தால்
துறவறத்தின் பெருமையினைத் தூய்மையினைத் தெரிந்துரைத்
உறவதனை யடைவதுவும் உண்மை நெறி வளரவன்றோ. 15

தென்னாட்டின் திருப்பதிகள் பலப்பலவும்
முறைப்படியேசென்று சென்றே
பொன்னாட்டும் மறுவுரத்துத் திருமாலின்
திருவருளைப் பொருந்த வோதி
என்னாட்டு கதிரவனுளி லங்குபவன்
திருவுருவின் இயல்பு காட்டி
நன்னாட்டினிலே விளக்கி மடாதிப ராய்
நாடனைத்தும் நடந்தா ரன்றே 16

திருமலையிற் புல்லணையில் வடுவூரில் தையாற்றில்
சிறப்பு வாய்ந்த
குருவரர்தம் புகழ்விளங்கு துவரைமான்
திருப்பதியில் குறைவி லாத
திருமடங்கள் நன்கமைத்துத் திருப்பணியால்
தமதுபுகழ் சிறப்ப வைத்தே
ஒருபொழுது மவனருளை மறவாத பெருந்தவத்துக்
குரிமை பூண்டார். 17

திருக்குடந்தை யமுதனுக்குப் பொன்மயமாம்
திருவடியும் திருவ யிந்தை
இருக்குமொரு தேசிகர்க்கு வயிரமயத்
திருமண்காப் பெழிலு மாக்கி
உருக்குமுளத் தமர்காஞ்சி வரதனுக்குத்
திருமணிப்பூண் உவப்பிற் செய்து
விருப்பமுற வெவ்வுளம ரிராகவனுக்
காழிசங்கம் விளங்க வைத்தார். 18

வீரையமர் திருமாற்குத் திருக்கவசம்
பொன் மணியால் விளங்க விட்டே
காரைவளர் பெருமாற்குந் திருமுடியாம்
பொற்பணியைக் களிப்பிற் செய்தே

நாரணன்றன்றிருவருளால் திருமடத்திற்
குரிய நலம் நாடோறும்
ஏருறவே மூன்றரை நூருயிரத்துக்
கமையும் வணம் இயற்றியிட்டார். 19

உடையவர் தந்தருளு நெறி வளர்ந்தோங்க
வகோபிலத்தினுரிமை மேவு
மடவதிபர் நிலைமையினினடிமையுளார்
மனங்களிக்க வழங்கும் வள்ளல்
மடனறவே மெய்ப் பொருளை விளக்குதிருப்
பணிபூண்ட வண்மைச்செல்வர்
புட விபிடை யறம் வளர்க்கு நரசிங்க
யதீந்திரர் தம் புகழேயோங்க. 20

வாழி

திருநர சிங்கன் திருக்கழல்கள் வாழி
திருவண் சடகோபத் திருமரபு வாழி
இருமையருள் திருமகளார் கழல்கள் வாழி
எண்ணமரிக்கென வமைத்த வடியார் வாழி
பெருமைபெறு மகோபிலத்துப் பெருமான் வாழு
பேசரிய மறையருளும் மெய்ம்மை வாழி
இருமொழியால் மறையருளும் குரவர் வாழி
இன்னுமொரு நூற்றுண்டின்றிங்கு வாழி. 21

(2)

ஸ்ரீ அழகிய சிங்கர் வைபவம்

வணக்கம்

பற்ப மெனத்திகழ் பைங்கழல் மேவிய
பல்லவ விரலழகும்
பாவன மாகிய பைந்துவ ராடை
பதிந்த மருங்கழகும்
முப்புரி நூலொடு முன்கையிலே திகழ்
முக்கோல் பிடியழகும்
முன்னவர் ஓதிய மொழிகள் மொழிந்திடு
முறுவல் நிரைவழகும்
கற்பக மென்விழி கருணை பொழிந்திடு

கமல முகத்தழகும்
காரி சுதன்கழல் கம்பன் இருங்கழல்
கண்ணிய சிகையழகும்
எப்பொழுதும்யதி ராஜன் வடிவழ
கென்னித யத்துளதால்
இல்லை இனிப்பிறப் பில்லை யெனக்கெதிர்
இல்லை எனக்கிடரே.

பாரதநாட்டின் மதம்

பழம் பெருமைகள் மலிந்த இந்தப் பாரத நாட்டில் அநாதியாக நிலை பெற்றுள்ள மதங்கள் பல. அவற்றுள் வேத வேதாந்தங்களையும், இதிகாச புராணாதிகளையும் சான்றாகக் கொண்டு வடித்தெடுத்த மதம் ஸ்ரீ வைஷ்ணவ சமயமே யாகும். அறிஞர் ஒத்துக்கொள்ளக் கூடிய பல வடமொழித் தென்மொழி நூல்களே திருமால் சமயத்தின் மகிமையை எடுத்து விரித்து விளக்குவதால் நாம் இது பற்றி ஆராயவேண்டிய அவசியமில்லை.

பகவான் கருணை

ஸ்ரீ வைகுண்ட பதியாகிய பகவான் தசாவதாரம் எடுத்தும், ஹயக்கிரீவனாகத் தோன்றியும், கீதாசாரியனாகப் பிறந்தும், வேதங்களையும் கீதையையும் சாஸ்திரங்களையும் இயற்றியும், மக்கள் அனைவரையும் நல்வழிப்படுத்த முடியவில்லை. தன் கைக்கு வராத மானிடரை உய்விக்கக் கருதி ஆழ்வார் ஆதிகளை அவதரிப்பித்து, அவர்கள் அருளிச்செயல்களாகிய திவ்யப் பிரபந்தங்களையும் வெளியிட்டுப் புலப்படுத்தினோம், இதிலும் மக்கள் ஆன்ம உணர்வின்றி உடல் நலம் தேடுபவராக உள்ளார். நாதமுனிகள், இராமாநுஜர், வேதாந்த தேசிகன் என்ற ஆசார்ய சிரேஷ்டர்களை அவதரிப்பித்து ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம், பகவத்விஷயம் முதலிய தெளிவுரைகளை வகுத்தும் ஞானமும் பக்தியும் இந்த யுகத்தில் பெறுபவரைக் கண்டிலோம், இனி என் செய்வோம், சேதநர்களை ரக்ஷிக்கும் மார்க்கம் எங்ஙனம் என்று ஆழ யோசித்தான்.

தென்னாட்டின் மகிமை

பூலோக வைகுண்டமாகிய அரங்கமா நகருள் ஸ்ரீ ரங்கநாதன் தென் திசை இலங்கை நோக்கி அரவணையிற் பள்ளிகொண்ட நாள்தொட்டுத் தென்னாடு புண்ணிய பூமியாக விளங்குகின்றது. தாமிர பர்ணி தீரத்தில் ஆழ்வார் திருநகரியில் வேதம் தமிழ்செய்த மாறன்—சடகோபன்—நம்மாழ்வார் அவதரித்த நாள் முதல் கன்னிநாடு சான்றோர்க்குப் பிறப்பிடமாய்ப் பிரகாசிக்கின்றது. ஔவையார் கூறிய ‘தொண்டை நன்னா

சான்றோர் உடைத்து, என்னும் பழமொழி பழமொழியாகி, பாண்டி நன்னாடு பல அறிஞரையும் ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் உடையது என்னும் புது மொழிக்கு இலக்காக இலகுகின்றது. இதனால் தென்னாட்டில் திருமால் சமயம் பிரபலம் பெற்றிருந்த நிலைமை,

> 'அச்சுதன் தன்னை ஞானவிதி விழையாமே
> மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கது உலகே'

என்ற சான்றோர் மொழியால் தெளிவாகின்றது.

ஆழ்வார் ஆசாரியர்கள்

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின்படி இம்மதப் பிரவர்த்தகர்களான பெரியோர்கள் இருவகைப்படுவர். அவர்கள் ஆழ்வார்கள், ஆசார்யர்கள் என்பர். ஆழ்வார்கள் அவதார புருஷர்களாகவும், மூல புருஷர்களாகவும் பிரகாசிக்கிறவர்கள், ஆசார்யரோ—ஆழ்வார்கட்குப் பிற்காலத்தே தோன்றி ஆழ்வார் அருளிச் செயல்களையும் மார்க்கத்தையும் பின்பற்றி ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தை நாடெங்கும் பரப்பி மக்களை உய்விக்கும் உயர்ந்தோர். ஆழ்வார்களில் தலைவர் நம்மாழ்வார். ஆசார்யர்களில் தலைவர் நாதமுனிகள். ஸ்ரீமந் நாதமுனிகள் மஹா வித்வானாகவும் யோகநிஷ்டாபரராகவும் பிரகாசித்தார். சடகோபர் இன்னருளால் இகலோக ஞானமும், பரலோக ஞானமும் உணர்ந்தார் எம்பெருமான் நான் கோயில் கொண்டிருக்கும் க்ஷேத்திரங்களில் நம்மாழ்வாருடைய பாசுரங்களை தேவகீதத்தில் பாடக் கேட்பதே எனக்கு அமிருதமாகும் என்று நாதமுனிகளுக்குக் கட்டளையிட்டார். அதன்படி எல்லாத் திவ்ய தேசங்களிலும் திவ்யப் பிரபந்த பாராயணம், தேவகீதத்தில் இசையோடு பாடி நடைபெறும்படி திட்டம் செய்தார்

இராமாநுஜரும் தேசிகரும்

சுமார் ஒருநூறு வருடங்களுக்குப் பின்னர் நாதமுனிகள் பரம்பரையில் இராமாநுஜர் அவதரித்தார். இவரை வரதராஜர் யதீந்திரர் என்றும், ஸ்ரீரங்கநாதர் உடையவர் என்றும், திருக்கோட்டியூர் நம்பிகள் எம்பெருமானார் என்றும் சரஸ்வதி தேவி பாஷ்யகாரர் என்றும் அழைத்தனர். இவ்வாசாரிய சிரேஷ்டரின் இடைவிடாத் தொண்டால் ஸ்ரீ வைஷ்ணவ மதம் இராமாநுஜ மதம் என்றே வழங்கப்பெறும் பாக்கியம்பெற்றது. இம்மகான் பரம்பரையில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப்பின் தூப்புல் வேதாந்த தேசிகன் அவதரித்து விசிஷ்டாத்வைத மதத்தைப் பலப்படுத்திப் பிரபலப்படுத்தினார். இவ்வாறு பகவான் அருளால் பேராசிரியர் காலத்துப் பிரகாசம் பெற்றும், பேராசிரியர் இல்லாத காலத்துப் பிரகாசம் குறைந்தும் ஸ்ரீ வைஷ்ணவ மதம் வழங்கிவரலாயிற்று. இதனை உணர்ந்த எம்பெருமான் என்றும் ஒரே நிலையில் ஸ்ரீ வைஷ்ணவ மதம் உலகில் பிரகாசிக்கவேண்டும் என்று சங்கற்பித்தான்.

ஆதிவண் சடகோபர் அவதாரம்

இந்த சங்கற்பத்தால் ஆசாரிய பரம்பரையில் நம்மாழ்வாரின் அவதாரமாக இற்றைக்கு 400 வருஷங்களுக்கு முன் ஆதிவண் சடகோப மாமுனி அவதரித்தார். இவர் அஹோபிலத் திருப்பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனை ஆராதித்து அவர் ஆஞ்ஞையால் பெருமாளைக் கூடவே எழுந்தருளப்பண்ணி சீரூர், பேரூர் முதலிய எல்லா இடங்களுக்கும் சஞ்சரித்து பண்டித பாமர சாமானியர்களுக்கும் பெருமாள் சேவை செய்வித்து, பரபக்தி ஞான வைராக்கிய சம்பத்தை வளர்த்து, சேதனகோடிகளை கிருதார்த்தராக்கி ஆசார்ய பீடத்தை நிரந்தரமாக நடத்திவர சட்டதிட்டங்களை ஏற்படுத்தினார். கிராமந்தோறும் பெருமாளுடன் எழுந்தருளிச், சீடர்களுக்கு மந்திரோபதேசம், பஞ்ச ஸம்ஸ்காரம், பரந்யாசம், கிரந்த காலக்ஷேபங்கள், பகவதாராதனம் நடத்தி அங்கங்குள்ள சேதனர்களை சன்மார்க்கத்தில் பிரவேசிக்கச்செய்து பக்தி ஞான வைராக்கியங்களை வளர்த்து ஆன்மாவின் ஜன்ம தேசமாகிய பரமபதத்தை அடையச் செய்யவேண்டும் என்ற கொள்கையை நிலை நாட்டினார்.

இக்காலத்தில் மானிடர்கள் பக்தியோகாநுஷ்டானங்களுக்கு அவசியமான அறிவுபெறுதிருக்கிறார்; அளவிற் குறைந்த வாழ்நாள் பெற்றிருக்கிறார்கள்; 'கல்வி கரையில ; கற்பவர் நாள் சில ; மெல்ல நினைக்கிற் பிணிபல' பெற்றிருக்கிறார்கள். பெரியோர் கூறும் அறவுரைகளை மதியாது இழந்து பெறவேண்டிய பேற்றைப் பெறுதவராயுள்ளார். ஆகையால் உலக நூல் கற்று அறிவுநூல் கல்லாது ஆன்ம லாபத்தை இழந்த சேதநர்களை எவ்வாறு ஆட்கொண்டு பகவானின் மலரடியைத் தொழவைக்கக் கூடும் என்று ஆலோசித்து சரணாகதியே மானிடர் கடைத்தேற இலகுவான உபாயமாகும் என்று தீர்மானித்துச் சஞ்சாரம் செய்யும் இடம் எங்கும் பெருமாள் சேவை செய்யும் சேவார்த்திகளுக்கு எல்லாம் ஸ்ரீ வைஷ்ணவ சம்பத்தைப் பெருக்கி வந்தார். பஞ்சஸம்ஸ்காரங்களும், மந்திரோப தேசங்களும் பரந்யாசமும், செய்வித்து ஆட்கொண்டார். இவ்விதமாகப் பாரத பூமி முழுவதும் பூப்பிரதக்ஷணம் செய்து ஸ்ரீ வைஷ்ணவ மதத்தையாவரும் அநுஷ்டிக்கும்படி உபதேசித்து உலக குரு என்ற பிரசித்தியை அடைந்தார்.

மனிதரை ஆட்கொள்ள அரும்பாடு பட்டு பகவத் கைங்கர்யமும், பாகவத கோஷ்டி லாபமும் பெற்ற இந்த ஆதிவண் சடகோப முனீந்திரரால் ஸ்தாபிக்கப்பெற்ற 'அஹோபிலமடம்' என்ற ஸ்தாபனம் இன்று வரை லக்ஷ்மீ நரஸிம்மன் காரணமில்லாத கருணையில் மங்களகரமாய் நித்திய கல்யாண வைபவங்களோடு, சிஷ்யகோடிகளின் அநுக்கிரகத்தின் பொருட்டு பிரகாசித்து வருகிறது. இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸ்தாபனத்தின்

கீழ் இந்தியாமுழுவதிலும் பலகோடி சிஷ்யர்களும் ஏராளமான பூஸ்திதிகளும் உண்டு.

பல நூற்றுண்டுகளாகப் பிரகாசித்து வரும் விசிஷ்டாத்வைத மதஸ்தாபனமாகிய அகோபிலமடம் ஆஸ்தானத்தில் பக்தி ஞான வைராக்ய சம்பந்நராகிய 'ஸ்ரீமத் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ம சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் துந்துபி வருஷம் தைமீ 4ந்தேதி புதன்கிழமை உத்தராட நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் 41வது பட்டம் பெற்றார். சென்ற மார்கழி மாதம் பூரட்டாதியில் எண்பத்து மூன்று திருநக்ஷத்திரம் நிறைந்து எண்பத்து நாலாவது திருநக்ஷத்திரம் தொடங்கப் பெற்றார். இத்திருநாளை ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் சிஷ்ய கோடிகள் மகா வைபவத்துடன் விமரிசையாகக் கொண்டாடினார்கள். சதாபிஷேக வைபவம் பெற்று ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனை ஆராதித்து சிஷ்ய கோடிகளுக்கு அநுக்ரகித்துக் கொண்டிருக்கும் இம்மஹா யதீந்திரரின் பூர்வாச்ரம வைபவங்களும், ஆஸ்தானத்துக்கு எழுந்தருளியதும், பட்டம் பெற்ற பிறகு நிகழ்த்திய கைங்கர்யங்களும் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணாதிசயங்களும் அநுக்ஹ பாத்திரர்களாகிய அடியார்களுக்குப் பெருவிருந்தாகும்.

பூர்வாச்சிரம வைபவம்.

அறிஞரும் பக்தரும் யோகிகளும் மதாசாரியர்களும் மடாதிபதிகளும் பிறந்து வளர்ந்த நாடே சீர் பெற்ற நாடென்று சிறப்பாகப் புகழப்படும். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம்மாழ்வாரையும் இந் நூற்றுண்டில் அகோபில மடாதிபதிகளாய்ப் பிரசித்தி பெற்ற இரு அழகிய சிங்கர்களையும் பிறப்பித்த பாக்கியம் பெற்ற நாடு எது ? அது திருநெல்வேலி ஜில்லாவேயாகும். பொருநை பெருக்கெடுத்துப் பாயும் புண்ணிய நாடாகும். சேரன்மாதேவி தாலுகாவில் தாமிரபர்ணி நதிக்கரையில் கன்னடியன்கால் பாசன வசதி பெற்ற காரைக் குரிச்சி என்ற சிறு அக்கிரஹாரம் உள்ளது. இச்சிற்றூர் ஸ்ரீ பெரும்பூதூரையும், சீரார் தூப்புலையும் விடப் பெருமை பெற்றுவிட்டது. இவ்விரண்டும் உலகிற்கு உதவிய ஒவ்வொரு ஆசாரியர்களுக்கே பிறப்பிடமாகும் மாதவம் பெற்றன. காரைக் குரிச்சியோ இரு அழகிய சிங்கர்களுக்குத் தாயகமாக அமைந்து வானோங்கு பெரும்புகழ் படைத்துள்ளது. இது இரட்டிப்புப் பெருமைக்கே காரணமாகும். இவ்வூரில் மூத்தீ வளர்க்கும் ஸ்ரீ வைஷ்ணவ மறையவரும் வாதூல கோத்திர திலகரும் ஆகிய ஸ்ரீ ரங்காசாரியார்க்கும் லக்ஷ்மீ தேவிக்கும் தவப்பயனாய் ஆநந்த வருஷம் மார்கழிமீ பூரட்டாதி நக்ஷத்திரத்தில் 'ராமபத்திரன்' என்னும் பிள்ளைத் திருநாமத்துடன் அவதரித்தார். இம்மரபினர் கோபால தாசர்களாதலின் 'கோபால' என்ற பட்டப் பெயரும் இயற்

கையில் உடையவர்கள். ஆதலின் இந்த ஸ்வாமி திருநாமம் கோபால ராமபத்திராசாரியார் என்று பிற்காலத்து விளங்கியது.

இந்த ஸ்வாமியின் மாதாவாகிய இலக்குமியம்மாள் உருவும், திருவும், வறியார் மாட்டருளும், விருந்தினரை உபசரித்தலும், துறந்தார்ப் பேணலும், அட்டில் தொழில் வன்மையும, ஒப்புரவு செய்தலும், நாயகனையே தெய்வமாகத் தொழுதெழும் குல ஒழுக்கமும் பூண்ட உத்தம பத்தினி. பிறந்த குலம் புகுந்த குலம் ஆகிய இரு குலத்துக்கும் புகழ்தேடும் புண்ணியவதி. பிதாவாகிய ஸ்ரீ ரங்காசாரியார் ஸ்வாமியோ ஞான பக்தி வைராக்ய சம்பன்னர். பிராதஸ்நானம், சூரியன் உதிக்குமுன் உபஸ்தானம் அக்கினிஹோத்திரம், ஔபாஸனம், பெருமாள் ஆராதனம் முதலிய நற்கருமங்களை நல் விருப்புடன் காலத்திற் செய்வர். இராமாயண பாகவத பாராயணம் நாடோறும் நிகழ்த்தும் பாகவதர். உத்தமோத்தமர்களாகிய இரு பெருங்குவரும் ஏக புத்திரனாகிய ராம பத்திரன், அறிவிலும் நடையிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதைக் கண்டு ஈன்ற பொழுதினும் பெரிதும் உவந்து இன்புறுவார்.

ராமபத்திரன், சாஸ்திரோக்தமான வயதில் உபநயனம் செய்விக்கப் பெற்று வேதாத்யயனத்திலும் சாஸ்திர பாடத்திலும் ஏக சந்தக்கிராஹியாக விளங்குதைக் கண்ட குருவாகிய ஸ்ரீ ரங்காசாரியார் அளவிலா மகிழ்ச்சியுறுவர். பெற்றோரைக் காட்டிலும் உற்றாரும் உறவினரும் மற்றோரும் ராம பத்திரன் சாதுர்யத்தையும் அடக்கத்தையும் கண்டு பெரிதும் வியந்து பேசுவார். வித்வான் வரதாசாரியார் ஸ்வாமியிடத்திலும், வித்வான் ராம பத்ராசாரியார் ஸ்வாமியிடத்திலும் காவ்ய, நாடக, அலங்காரங்களும், வியாகரணதர்க்க பாடங்களும், வேதாந்த தேசிகர் சூக்திகளும் ஸ்ரீ பாஷ்யமும், பகவத் விஷயமும் காலக்ஷேபம் செய்து ராம பத்திரர் வித்யாபாரங்கதராய் நல்லொழுக்கக் கடலாய் விளங்கினர். இக் காலத்தில் ஸ்ரீ அஹோபில மடம் 33-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ சடகோப யதீந்திர மஹா தேசிகனிடம் சமாச்ரயணமும் மந்திரோபதேசங்களும் பெற்றார். அறிவு, திரு ஆற்றல் பெற்று நற்குணக்குன்றாய் ஸதாசார சம்பந்நராய் விளங்குகின்ற கோபால ராமபத்திராசாரியாருக்கு குப்ஜவல்லி என்ற ஜாநகி அம்மாள் வாழ்க்கைத் துணையாய், இல்லறத்துணையாய், பகவத் பாகவத கைங்கர்ய தர்ம சாரிணியாய் வாய்த்தாள். சீதா ராமனைப் போல் ஜாநகி ராமபத்திரராக ராமபத்திரர் விளங்கினர்.

'இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு'

என்ற திருவள்ளுவரின் பொய்யாமொழி, வித்யாநிதியாகிய ராமபத்திரா



ஸ்ரீ அழகியசிங்கரின் பூர்வாச்ரமம்.

-சாரியர் இல் வாழ்க்கையில் லக்ஷப் பிரபுவாயும் விளங்கியதால் இவர் விஷயத்தில் சாமான்ய வசனமாகி விட்டது. வைதிக வாழ்வில் ஒரு சிறிதும் குறைவின்றி வாழ்வு நடத்தியவர். லௌகிகத் துறையிலும் இணையற்ற திறமை பெற்று வாழ்ந்தார். இருபத்தொன்பதாவது வயதில் ஸ்ரீ அஹோபில மடம் முப்பத்துநான்காவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த அத்திப்பட்டு அழகிய சிங்கர் என்ற ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்திர மஹா தேசிகனிடம் பரஸமர்ப்பணம் செய்துகொண்டு ஆஸ்தானத்திலேயே சிலமாதங்கள் வசித்து, ஸ்ரீ பாஷ்யம், பகவத் விஷயம் முதலிய கிரந்த காலக்ஷேபங்கள் செய்து ஆசாரியரின் அந்தரங்க அநுக்கிரகத்தையும் பெற்றார்.

தினசரிவாழ்க்கை

அதிகாலையில் எழுந்து, ஸ்நான அநுஷ்டானங்களை முடித்து, அருணோதய காலத்தில் பன்னிரு திருநாமமும் தரித்து, திருப்பவித்திர மாலையுடன் அர்க்கியம் வழங்கும் காட்சி கண்கண்டு களிக்கத் தகுந்தது. பிறகு கிருஷ்ணு ஜினத்து வீற்றிருந்து ஜபிக்கும் முறை எண்ணத்தகுந்தது. பின்னர் அபிகமன ஆராதனத்தைச் செய்து, பெருமாள் சந்நிதியில் தியானிக்கு முறையும் தம்பதிகள் இருவரும் சேவிக்கும் முறையும் பார்ப்பவரைப் பரவசப்படுத்தாமல் இராது. அநுஷ்டானங்களை முடித்துக் குடும்ப காரியங்களைக் காலை $7\frac{1}{2}$ மணிக்குமேல் $8\frac{1}{2}$ மணிக்குள் கவனிக்கும் முறை ராஜதந்திரிகளைத் தோற்கடிக்கும். $8\frac{1}{2}$ மணிக்கு மேல் பாரதப் பிரஸங்கம் கேட்கத் தகுந்தது. 10 மணிக்கு மேல் மாத்யாந்நிக ஸ்நாநத்துக்கு திருப்பூக்குடலை தோளில் சாத்தி எழுந்தருளும் நேர்த்தி இயம்ப முடியாதது. மாத்யாந்நிக அநுஷ்டானங்களை முடித்துத் திருமாளிகைக்கு எழுந்தருளி நவவித பக்தியுடன் பெரிய பெருமாளையும் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனையும் அர்ச்சித்து ஆராதித்து வந்தனம் செய்யும் முறை நேத்திராநந்தமானது. பெருமாள் கண்டருளிய தளிகைகளை அமுது செய்து, சிறிது இளைப்பாறி, இராமாயண பாராயணமும் வேதாந்த பாட போதனையும் செய்யும் முறை கர்ணாமிர்தமாயிருக்கும். மாலை $4\frac{1}{2}$ மணிக்கு மேல் 6 மணிவரை குடும்ப காரியங்களைக் கவனிக்க அவகாசம் உண்டு. இடையிடையே அகத்திலுள்ள பசுவைப் பரிபாலிக்கும் முறை குறிக்கத் தகுந்தது. காணாமல் கோணாமல் கண்டு அர்க்கியம் கொடுக்கும் முறை தெய்வீகத் தன்மையைத் தெளிவிக்கும். மாலைக் கடன்களை முடித்த பிறகு பாகவத பாராயணம் செய்யும் முறை அந்த வீதிக்கே அலங்காரமாயிருக்கும். இவ்வாறே எப்பொழுதும் திருநாராயணன் திருவடியைக் காலம் பெறச் சிந்தித்துக் காலக்ஷேபம் செய்வார்.

"கண்ணு நான்முகனைப் படைத்தானே
காரணு கரியாய் அடியேன்நான்

உண்ணுநாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோ நாரணா வென்று
எண்ணு நாளும் இருக்கு எசுச்சாமம்
வேத நாண்மலர் கொண்டுன பாதம்
நண்ணு நாளவை தத்துறு மாகில்
அன்றெனக்கவை பட்டினி நாளே !"

என்னும் பாசுர அநுசந்தானமே தாரகமாகக் கொண்டு இல்வாழ்க்கையை நடத்தினர். இவ்வாழ்க்கைத் துணைவியோ பின்தூங்கி முன்னெழுந்து பெருமாள் காரியத்தில் செய்ய வேண்டிய சிஷ்ரூஷைகளைத் தவக்கமின்றி உவக்கும்படி செய்து அறத்துணையாக அமர்ந்திருந்தாள்.

மங்களகரமாகிய இல்லற வாழ்க்கையில் விலைமதிக்கமுடியாத அணிகலமென்று சொல்லக்கூடிய நன்மக்கட் பேற்றை அந்யோந்ய தம்பதிகள் இருவரும் பெற்றிருக்கின்றனர். இலக்குமி என்ற திருமாமகளும், ரெங்காசாரியர், கோபாலாசாரியர், ஸ்ரீநிவாஸாசாரியர் என்ற மூன்று புத்திர ரத்நங்களும், 'இவர் தந்தை இவர்களைப் பெறுவதற்கு என்ன நோன்புநோற்றார்' என்னும் சொல்லை நிகழ்த்தும் நல்லொழுக்க நற்குண நற்சிந்தை யுள்ளவர்களாக விளங்குகின்றனர்கள். பொருட் செல்வமும், கல்விச் செல்வமும், மக்கட் செல்வமும், அருட் செல்வமும், வாக்குச் செல்வமும், எல்லாச் செல்வமும் நிறைந்த ஆசார்ய குடும்பம், திருமாலின் திருவருள் பெற்றுப் பல்லாண்டு வாழ நாம் பல்லாண்டு பாடுவோம். இந்த ஸ்வாமியிடம் வித்யாப்யாசம் செய்தவர்கள், வங்கிபுரம் வித்வான் வெங்கடராமாசாரியரும், குமாரர்கள் மூவரும் மற்றையவர்களுமாவர். இல்லறம் பெரும்பேறுபெற்ற கோபாலராமபத்திராசாரியார் ஸ்வாமி எப்பொழுதும்,

"பறவை யேறு பரம்புருடா நீ என்னைக் கைக்கொண்டபின்
பிறவி யென்னும் கடலும் வற்றிப் பெரும்பதம் ஆகின்றதால்
இறவு செய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்
அறிவை யென்னும் அமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டதே !"

என்னும் இப்பாசுரத்தை அநுசந்தித்துக் கொண்டேயிருப்பர். இவ்வாறு அநுசந்தித்து வந்ததன் பயனாக துந்துபி ஸ்ரீ தை மீ 4 உ புதன்கிழமை உத்தராட நக்ஷத்திரத்தில் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மன் அநுக்கிரஹத்தால், ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்தார் செய்த தவப்பயனால் மதுரையை அடுத்த துவரைமானில் ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தானத்தில் 41-வது பட்டம் ஏற்று ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ம சடகோபயதீந்திர மஹாதேசிகன் என்று ஆசார்ய பீடத்தில் ஏறி இன்றளவும் சிஷ்யகோடிகளை அநுக்கிரகம் செய்துவருகிறார்

தென்கோடியில் தோன்றிய கதிர் உலகம்முழுவதும் ஆசாரியராகப் பிரகாசிக்கும் பேறுகிட்டியது. மணமுள்ள பொன்மலர்போலவும், அழகுள்ள சுவர்ண குடம் போலவும், ஸர்வஜன யோக்கியமான ஸர்வாதிகாரமான ஞானபக்தி வைராக்கியங்களை வளர்க்கும் செவிக்கினிய செஞ் சொற்களை மந்திரமாகவும், கிரந்த காலக்ஷேபங்களாகவும், உபதேசமாகவும், சரணாகதியாகவும், ஹிதமாகவும், மிதமாகவும், புன்முறுவலுடனும், சிஷ்யகோடிகளுக்கு அருளிச்செய்து எழுந்தருளியிருக்கிறார். ஆசாரிய பீடத்தில் எழுந்தருளிய அன்று ஸேவார்த்திகளுக்கும் சிஷ்யகோடிகளுக்கும் ஏற்பட்ட மனம் நிரம்பிய ஆநந்தம் அளவிடத்தரமன்று. ஆஸ்தானம் அருளிய ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகருக்கு சாஸ்திரோக்தப்படி வேதபாராயணாதி கைங்கர்யங்களைச் செய்து முடித்து துவரைமானில் பிருந்தாவனம் ஸ்தாபித்து, பிரதிஷ்டை செய்து, நித்யோத்ஸவமும், திருநக்ஷத்திர உற்சவமும் நன்கு நடைபெற ஏற்பாடு செய்து சஞ்சாரம் செய்யத் தொடங்கினார்.

பக்த கோடிகள், பட்டி மேய்ந்து கட்டுண்டு உழலாமல் திருவஷ்டாக்ஷர உபதேசமும், முன் அழகிய சிங்கர்களால் பரம்பரையாக ஸம்ஸ்கரித்து வருகிற சங்காழியைக் கொண்டு பஞ்சஸம்ஸ்காரமும், ஸ்ரீ பாஷ்யம், ரஹஸ்யத்ரயசாரம், கீதா பாஷ்யம், பகவத் விஷயம், முதலிய கிரந்த காலக்ஷேபங்களும், பிறவிப் பிணிதீரப் பணிந்தவர்களுக்குப் பரகதியைத் தந்தருளும் பர சமர்ப்பணமும் செய்தருளிச் சிற்றின்பம் பெற்ற சிறுமாமனிதரைப் பேரின்ப வெள்ளத்தில் திளைக்கும்படி செய்வதற்காகத் திருக்குறுங்குடி முதல் திருவேங்கடம் வரையுள்ள எம்பெருமான் கோயில் கொண்டருளிய எல்லாத் திவ்ய தேசங்களிலும் எழுந்தருளி அங்கங்கு வரந்தந்தருளுகிற எம்பெருமான்களை மங்களாசாசனம் செய்தருளி, ஸ்ரீ பாஷ்யகாரர் அவலம்பித்த இராமாநுஜ சித்தாந்தத்தைப் பரிஷ்கரித்தருளிய ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் அடிச்சுவட்டைப் பின் பற்றி எங்கும் கோஷித்துக் குதூகலப்படுத்திப் பிரவசனம் செய்துவருகிறார்.

இதுவரை பதினைந்து சாதுர்மாஸ்யங்களை வீரவநல்லூர், மானாமதுரை, திருப்பராய்த்துறை, நெடுங்தெரு, மதுராந்தகம், ஸ்ரீ ரங்கம் ஆகிய திவ்ய தேசங்களில் நடத்திவைத்து விசேஷ வைபவம் பெற்றும் பிரகாசிக்கிறார்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் கைங்கர்யத்தை அநவரதமும் அவன் உகக்கும் வண்ணம் அவன் ஆணையின்படி விநயத்துடன் ஆராதித்து வரும் பத்ததி, அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளாலும் புகழுந் தரத்ததன்று. ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் முகோல்லாசத்தைப் பரிபூர்ணமாகப் பெற்று நித்ய சூரிகளைப் போல் ஆநந்த ஹ்ருதயராய், வேதமார்க்க பிரதிஷ்டாபனாசாரியராய், பரம ஹம்ச பரிவ்ராஜகாசார்யராய், ஸர்வ தந்திர ஸ்வதந்த்ராய், உபய

வேதாந்தாசார்யராய் பகவத் ராமாநுஜ சித்தாந்த நிர்த்தாரணராய் விளங்குகிறார்.

சஞ்சாரம் செய்து வரும்பொழுது ஒவ்வொரு திவ்ய தேசத்து எம்பெருமானையும் ஆராதித்து, ஸேவித்து மங்களாசாசனம் செய்து வரும் நேர்த்தியை நேரிற் கண்டே ஆநந்திக்கவேண்டும். ஒவ்வொரு எம்பெருமானுக்கும பீதாம்பரமும், திருவாபரணமும் புதிது புதிதாகச் செய்து சாத்தி ஆநந்திக்கும் அழகு சொல்லுந் தரத்ததன்று. அக் கைங்கர்யங்களில் முக்கியமான சிலவற்றை மஹா ஜனங்கள் அறியவேண்டுவது அவசியம். பெருமாள் கோவில் வரதராஜனுக்கு தங்கக் கிண்ணிகளும், திருவாபரணமும், ஓராயிர ரூபாய்க்கு மேலும், திருவஹீந்திரபுரம் தேசிகனுக்கு வஜ்ரத் திருமண்காப்பு ரூபாய் ஈராயிரம் வரையிலும், திருக்குடந்தை ஆராவமுதனுக்குத் தங்கத் திருவடிகள் ரூ. 1500 வரையிலும், புள்ளம் பூதங்குடி ராமனுக்குக் கவசம் ஓராயிரம் ரூபாய் வரையிலும், திருவெவ்வுளூர் ராகவனுக்குத் தங்கத்தில் கல்லிழைத்த சங்க சக்கரங்கள் ரூபாய் நாலாயிரம் வரையிலும், வீரவநல்லூர்ப் பெருமாளுக்குக் கவசமும் திருவாபரணமும் ஓராயிரம் ரூபாய் வரையிலும், காரைக்குரிச்சி, ஆதிவண் சடகோப மகாதேசிகனுக்கும், வரதனுக்கும், கிருஷ்ணனுக்கும் கிரீடங்கள், திருவாபரணங்கள் ரூபாய் ஓராயிரம் வரையிலும், சந்நிதி ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனுக்கு தங்க சடாரி ரூபாய் ஓராயிரம் வரையிலும், ஸ்ரீ அஹோபிலம் நரஸிம்மனுக்கு ஒரு லக்ஷ ரூபாய் வரையிலும், திருப்பணி செய்து எம்பெருமான் கிருபைக்குப் பாத்திரராக எழுந்தருளியிருக்கிறார்.

மேலும் திருப்பதித் திருமலையில் திருவேங்கடநாதன் சந்நிதிக்கு சமீபத்தில் சுமார் ரூபாய் ஐம்பதினாயிரம் செலவு செய்து, திருமடம் கட்டி, ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் பிரதிஷ்டை சமீபத்தில் நடந்தது அடியார்கள் அனைவரும் அறிந்த விஷயம். திருப்புல்லாணிக்கு ரூபாய் மூவாயிரம் வரையிலும், தையாறுக்கு ரூபாய் ஆயிரத்தைந்நூறு வரையிலும் வடுவூருக்கு ரூபாய் ஆயிரம் வரையிலும், துவரிமான் பிருந்தாவனத்துக்கு ரூபாய் பதினாயிரம் வரையிலும், செலவு செய்து மடங் கட்டிப் பரிஷ்காரம் செய்து, ஆதிவண் சடகோப மஹாதேசிகன் உற்சவங்களை நடத்திவரத் திட்டம் செய்திருக்கிறார். இக்கைங்கர்யங்கள் குறிப்பிடத் தகுந்தவை. லக்ஷ்மீநரஸிம்மனுக்குச் சொந்தமான எல்லா இடங்களிலும் உள்ள மடங்களிலும் ஆதிவண் சடகோப மஹாதேசிகனுக்கு ஆராதனங்களும் ததீயாராதனங்களும் விமரிசையாக நடந்துவர எல்லாவித ஏற்பாடுகளும் செய்தருளியிருக்கிறார்.

மேலும் லக்ஷ்மீ நரஸிம்மனுக்கு இந்த ஸ்வாமி ஆஸ்தானத்துக்கு எழுந்தருளிய பிறகு வந்து குவிந்த வருவாயைக் கொண்டு தாமிரபர்ணி

பாசனத்தில் வேலங்குளம் கிராமத்தை ஒன்றரை லக்ஷத்துக்கு கிரயம் வாங்கியும், நெடுந்தெரு, மன்னார்குடி, பெருக வாழ்ந்தான், வீரவநல்லூர், அடைச்சாணி முதலிய கிராமங்களில் சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய்வரை நிலம் கிரயம் வாங்கியும் இந்த மடத்துக்கு பூஸ்திதி சேர்த்திருக்கிறார்.

ஸந்நிதியில் தினந்தோறும் அதிகாலையில் மூன்று மணிக்குக் கண் விழித்து, ஸ்நாநாநுஷ்டானங்களை முடித்து, திருந்திய பன்னிரு நாமங்களுடனும், முக்கோலுடனும் சிஷ்யர்களின் விருதாவளிகளுடனும், காலை 5 மணிக்கு ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் அபிகமன ஆராதனத்துக்கு எழுந்தருளும் நேர்த்தி காணக் காணத் தெவிட்டாது. பெருமாளுக்கு அர்ச்சித்து சைத்தியோபசாரம் செய்து, மங்களார்த்தியிட்டு, திரிதண்டத்துடன் மண்டியிட்டு வணங்கும் அழகு எவரையும் பரவசப்படுத்தும். ஸேவார்த்திகள் ஸேவிக்க கோஷ்டியுள் வீற்றிருந்து நாராயண நாம சங்கீர்த்தனம் செய்யும் தொனி செவித்துளையில் என்றும் நிறைந்தொலிக்கும். வணங்குகின்ற ஒவ்வொருவரையும் புன்முறுவலுடன் விசாரணை செய்யும் தோரணை மிகவும் சிலாகிக்கத்தகுந்தது. கோஷ்டி கலைந்தவுடன் காலக்ஷேபம் சாதிக்கும் அழகு எவரையும் அடிபணிய வைக்கும் ஆற்றல் வாய்ந்தது. பத்தரை மணிக்கு மாத்யாந்நிக ஸ்நான அநுஷ்டானங்களை முடித்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனுக்கு மங்களார்த்தி செய்யும் கைங்கர்யம் தேவர்களாலும் கொண்டாடத்தகுந்தது. பெருமாள் தீர்த்தம் ஸ்வீகரித்து சடாரி சாதிக்கும் வைபவம் அனைவரும் சிரமேற்கத் தகுந்தது. மாலை மூன்று மணி முதல் ஐந்து மணிவரை காலக்ஷேபம் ஸாதிக்கும்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் ஆவேசம் என்றே தீர்மானிக்கவேண்டும். அநந்தரம் ஸாயம் ஸந்தியா அநுஷ்டாநங்களை முடித்து ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனுக்குப் பானக ஆராதனம் கண்டருளும் காட்சி கண்பெற்ற பேறாகும். இதன்மேல் சேவார்த்திகளுடன் சம்பாஷிப்பதும், ஸந்நிதி லௌகிக கார்யங்களை நிர்வகிப்பதும் இரவு பனிரண்டு மணிவரை நிகழும். இவ்வண்ணம் ஸ்ரீ அழகிய சிங்கரின தினசரி நடைபெறுகின்றது. விசேஷ தினங்கள் விசேஷ வைபவத்துடன் விமரிசையாக நடைபெறும்.

இவ்வாறு லக்ஷ்மீ நரஸிம்மன் "ஆஞ்ஞையினால் பெருமாள் ப்ரீதிக்காக இடைவிடாது தொண்டு செய்து, 'பொன்னைக்கொண் டுரைகல் மீதே நிறமெழ உரைத்தாற் போலே உன்னைக் கொண்டென்நாவகம்பால் மாற்றின்றி உரைத்துக்கொண்டேன் உன்னைக் கொண்டென்னுள் வைத்தேன் என்னையும் உன்னுள்ளிட்டேன் என்னப்பா என் இருடிகேசா, என்னுயிர்க் காவலனே!'' என்று துதித்து உனக்குக் கைங்கர்யம் செய்ய என்னை உரித்தாக்கினையே என்று நன்றிகூறுவார். நித்ய சூரிகளாகிய அநந்தனையும் கருடனையும் அத்யல்பமாக எண்ணி அடியேன் மனத்தாமரையில் உவந்து வைகி வாழும் எம்பிரானே! என்கண் அசும்பொழுக என்னுள்ளே

உன்னை நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன் நேமிநெடியோனே! என்று தியானித்து தொண்டரால் சேரும் இளைப்பையும் களைப்பையும் மாற்றிக் கொள்ளும் ஆற்றல் கொண்ட சாந்தமூர்த்தியாய் இன்று சதாபிஷேகம் பெற்று முதுமையில் இளமை எய்தி ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் அநுக்கிரஹத்துக்கும் பாத்திரராய் அடியோங்கட்குச் சரணாகதி புக சமீபராய் சுலபராய் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் எழுந்தருளிப் பிரகாசிக்கிறார்.

திருவேங்கடம் முதல் திருக்குறுங்குடி வரை சஞ்சாரம் செய்து மத்ய ஸ்தலமாகிய ரங்கமத்தியில் ஆசாரியராகிய ஸ்ரீ ரங்கநாதனுடையவும், பெரிய பெருமாளாகிய ஸ்ரீரங்கநாதனுடையவும் கிருபைக்கு சந்நத்தராய், ஸ்ரீ லக்ஷ்மீ தேவியின் திவ்யாஞ்ஞையின்படி ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ரங்க க்ஷேத்திரத்தில் திருவோலக்கமிருந்தாற்போல் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மன் ஆஞ்ஞையின்படி ஸ்ரீ ரங்கக்ஷேத்திரத்தில் நித்ய வாசம் செய்து ஸ்ரீ ரங்கநாத ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் சந்நிதியில் சேவித்து ஆராதித்துப் பிரார்த்தித்துச் சிஷ்ய கோடிகளை ரக்ஷித்து சாந்த மூர்த்தியாய் திவ்ய சூரியாய்ப் பிரகாசித்து சேவை சாதித்தருளுகிறார் ஸ்ரீ அழகிய சிங்கர்.

சிஷ்ய கோடிகளாகிய நாமெல்லாம் ஆசாரிய சிரேஷ்டராகிய ஸ்ரீ அழகிய சிங்கரைப் பல்லாண்டு பாடுவோம்.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய்ப் பொழிந்தொழுகும் வாய்மொழியும்
திருத்தொண்டும் பல்லாண்டு
வடிவார் ஆழிசங்கு வலமிடத்தே
பொறித்திலகு வண்கரமும் பல்லாண்டு
படியேற்றிப் பரமபதம் பாலிக்கும்
பரந்யாச வைபவமும் பல்லாண்டே.

வாழித் திருநாமம்

காரைக் குரிச்சிசெய் மாதவத்தோன் வாழியே
சீரங்க நாதரின் செல்வனே வாழியே
இலக்குமியின் சிங்கமே எங்குருவே வாழியே
வாதூல கோத்திர வள்ளலே வாழியே
ஜாநகி ராமனே சாந்தனே வாழியே
வேதாந்த விஞ்ஞான விற்பனனே வாழியே
ஆநந்த மார்கழியில் அவதரித்தோன் வாழியே
பூரட்டா தித்திருநாள் புவியுதித்தோன் வாழியே
சடகோப தேசிகனால் குறிபெற்றோன் வாழியே
சடகோப இளம்பெருமாள் சரணடைந்தோன் வாழியே

சீரங்கநாத சடகோபன் இன்னருளால்
பார்போற்றும் யதீந்திரனும் பதம்பெற்றோன் வாழியே
துந்துபியில் தைமாதம் துறவுபெற்றோன் வாழியே.
லட்சுமீ நரசிம்ம சடகோபன் வாழியே
லட்சுமீ நரசிம்மன் தொண்டுசெய்து வாழியே
சதாபிஷேகம்பெற் றெழில்பெறுவோன் வாழியே
பாடியப் பெரும்பொருளைப் பகர்ந்திடுவோன் வாழியே
ஆதிவண் சடகோபன் அருள்பெற்று வாழியே
சீரங்க நாத சடகோபன் திருவருளால்
நாதமுனி தேசிகரின் ஆயுளொடு வாழியே
சீனிவாஸன் பாடலைச் சிறப்பிப்போன் வாழியே
இன்னும்ஒரு நூற்றாண்டு எம்பெருமான் அருள்கொண்டு
இவ்வுலகில் சீடர்க்கு அருள்செய்து வாழியே
உடையவர் தரிசனத்தை உய்வித்தோன் வாழியே
நம்மாழ்வார் அம்சமாய் நண்ணினோன் வாழியே.

---

(3)

சரணாகதிப் பதிகம்

கட்டளைக் கலித்துறை.

சீர்வண் சடகோபச் சீர்நர சிம்ம யதீந்திரனே
சோர்வின்றி யுன்றன் றுணையடித் தொண்டு துணிந்தவெனைத்
தார்கொள் ளிரணியற் கொன்றவன் பாலற்குத் தஞ்சமீந்தான்
காரொன்று மேனிக் கருணா கரன்கழல் காத்திடுமே. 1

காரைக் குறிச்சிசெய் மாதவங்கண்டாங் கவதரித்தே
பாரைப் புரக்கும் பலகலைப் பண்டித பார்த்திபனைச்
சீரைப் பெறுவிசிஷ் டாத்வைத மார்க்கஞ் செழிக்கவந்த
சாரத் திருநர சிம்ம சடகோபர்த் தாழ்ந்தனனே. 2

என்னையும் என்குணக் கேட்டையும் பார்த்தரு ளீந்துநின்ற
நின்னரு ளிந்த நிலத்தினி லென்றும் நிலவிடுமால்
பொன்னவ னாகத்தைப் போழ்ந்தருள் நாரணற் போற்றுகின்ற
எந்நர சிம்ம சடகோபர் தாள்முடி யேற்றனனே. 3

புண்ணிய நோன்பு புரிந்துமிலேன்பதம் போற்றுகின்ற
நுண்ணருங் கேள்வி நுவன்றில னென்சிந்தை நோக்கியிருந்

தெண்ணரும் பாபங்களேகிடக் கண்ண னிணையடியென்
சென்னியிற் சூட அருள்நர சிம்மன் அடைக்கலமே. 4

நாதமும் சோதியு மாய்நின்ற நாரணன் நாதனென்றே
போதமு றுத்தொண்டர் பேதமை போக்கிடப் போந்தருள்நா
ஓதிடு வண்சட கோப நரசிம்ம யோகிமலர்ப்
பாதம லாற்படு பாவிக்கி யாதொன்றும் பற்றிலையே. 5

ஆடிப் பலபிறப் பும்பிறந் தந்தமில் லல்லுற்றுத்
தேடித்திரிந்தனன் உய்வழி யொன்றும் தெரிந்திலனாய்
வாடிக் கடைசியில் கண்டு களித்து வணங்கி நின்றேன்
பாடித் திருநர சிம்ம சடகோபர் பாதங்களே. 6

சிந்தை நின் தாளிணை தாழ்ந்து நல் லன்பு சிறந்திடவே
விந்தைசே ருன்குணத் தீடுபட் டின்ப மிசைந்திடுமால்
முந்தை வினைகளும் பேர்ந்திட நாவு முழக்கிடுமால்
எந்தை நரசிம்மவண்சடகோபன் இசையருளே. 7

வண்சடகோப நரசிம்ம யோகியர் மாதலைவ
கண்சட கோபர் பனுவலும் கண்ணன் கழலிணையும்
எண்சத வைகுந்த நாடுமெவ் வாறனக் கின்பளிக்கும்
ஒண்சர ணங்களும் அத்தகைத் தேசரண் உற்றவெற்கே. 8

பத்தியும் யோகமும் பண்ணப் பதம்பெறாப் பாவமுற்றே
எத்திசை யும்புகல் பெற்றிலாக் காகம் எனவடைந்தேன்
சித்திகொள் சீரங்க நாத சடகோப தேசிகனால்
சத்திகொள் வண்சட கோப நரசிம்மர் தாண்மலரே. 9

கூட்டும் விதியென்று கூடுங்கொ லோவெனக் கூறிநின்றேன்
நாட்டங்கண் டின்பம் பெறஅடைந் தேன்சரண் நானிலத்தோர்
வீட்டக ஞானந் தலைக்கொண்டு நாரணன் மேவநல்லோர்
ஈட்டங்கள் சூழ வருநர சிம்மர் இணையடியே. 10

இலக்குமி சேர்நர சிம்ம சடகோப தேசிகர்தாள்
இலக்கிய மென்றுவில் லூர்ச்சீனிவாசனெ னுஞ்சருமன்
விளக்கிய பாச்சர ஞ்ஞகதி பத்தும் விளம்பிடுவார்
துளக்கமில் நற்குரு தாள் மூலஞ் சேர்வர்துளவனையே. 11

ஸ்ரீ:

அடியேன் காணிக்கை

[ஸ்ரீ உ. வே. வித்வான் ரா. ஸ்ரீநிவாஸதேசிகமய்யங்கார்.]

ஒரு நள்ளிரவு. மின்னலும் இடியும். பேய்க்காற்று கதவை மோதுகிறது. தலைவியும் தோழியும் கண் விழித்துக்கொள்ளுகிறார்கள்.

தோழி :—காற்று எப்படி மும்முரமாய் அடித்துக் கதவைத் தாக்குகிறது! மின்னல் எப்படி ஒளி வீசுகிறது! இடி எப்படி இடிக்கிறது!

தலைவி :—தோழி, இது காற்றென்று நீ நினைக்கிறாயா? காற்றல்ல; என் நாதன் கதவைத் தட்டுகிறான். அதோ 'பளிச்' சென்று தோன்றுகிறதே, அது மின்னல் என்று எண்ணிவிடாதே, அது என் காதலின் வெற்றிக்கொடி. தூரத்தில் 'கட கட' வென்று கேட்கிறதே, அது இடியின் முழக்கமல்ல; எனக்கு மாலையிட்டவருடைய இரதத்தின் ஒலி.

மேலே சித்திரிக்கப்பட்ட ஒரு தலைவியின் மனோநிலைதான் நம்மாழ்வாரின் நிலை, காண்கின்ற பொருள்கள் எல்லாவற்றிலும் அந்தராத்மாவாயிருக்கிற கண்ணன் வடிவு காண்பதுதான் அவருடைய அநுபவம். மலரின் முறுவலிலும், காற்றின் இன்னிசையிலும், நீலவானிலும், கடலிலும் சர்வேச்வரனுடைய சொற்கடந்த சிறப்பை உணர்கிறார். அனேக பாசுரங்கள் இத்தகைய உணர்ச்சிகளோடு ததும்பி நிற்கின்றன :

" மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும்
விண்ணைத்தொழுது அவன் மேவு வைகுந்தமென்று கை
காட்டும் "......

" ஒன்றிய திங்களைக்காட்டி ஒளிமணி வண்ணனே! என்னும்
நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே! வாவென்று கூவும்
நன்றுபெய்யும் மழைகாணில் நாரணன் வந்தானென்று
ஆலும் "......

